# நல்ல பெண்மணி

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

கவிஞர்
சுப்பு ஆறுமுகம்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
16 DEC 1957

கலைமன்றம்
சென்னை-1

Univ. Grants Commission.

வெளியீடு: 141

முதற் பதிப்பு அக்டோபர் '54

உரிமை உடையது

விலை ரூ. 2—4—0

031:3

விற்பனை நிலையம்:

எம். எஸ். ராமுலு கம்பெனி

286, சைனு பஜார், சென்னை-1

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# நடமாடவிடுகிறோம்

நல்ல பெண்மணியை கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்கள் உங்களுக்கு இந்நூல் மூலம் அறிமுகப் படுத்தி வைக்கிறார் அத்துடன் மனிதனின் தீய நல்ல செயல்களுக்கு காரணம் என்ன என்பதை சூழ்நிலை தெய்வத்தின் மூலம் சுட்டிக் காட்டுகிறார்.

நல்ல பெண்மணியை அலங்கரித்து நாட்டிலே நடமாட விடுகிறோம் அவருடைய நற்பண்புகளை 'நல்ல உலகம்' பின் பற்றும் என்ற நம்பிக்கையால்!

வணக்கம்

கலைமன்றத்தார்

## கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

# மதிப்புரை

எனது அன்புக்குரிய திரு. சுப்பு-ஆறுமுகத்தின் "நல்ல பெண்மணி" என்ற இந்தப் புத்தகத்தைப் படித்தேன் சுவைத்தேன்.

இந்தப் புத்தகத்தில் காதலின் அவசியத்தைப் பற்றியும், கடமையின் அவசியத்தைப் பற்றியும் அழகாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது-"சூழ்நிலைத் தெய்வம்" என்ற தலைப்பில் இத்துடன் இருக்கும் நாவலில், "மனிதனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் ஆக்கிவிடுவதில் பெரும்பாலும் சூழ்நிலைதான் காரணமாக இருக்கிறது" என்பதை தெளிவாகக் காண முடிகிறது.

நல்ல இலக்கியம். பாராட்டுகிறேன். அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

சென்னை
24—10—54

இப்படிக்கு,
N. S. Krishnan

# படியுங்கள்-சுவையுங்கள்

இன்று உலகிலே பல எழுத்தாளர்கள் மலிந்து கிடக்கின்றனர். அதிலும் தென்னாட்டில் எழுத்தாளர் எண்ணிக்கை அதிகம். எழுத்தாளர் என்றால் எழுதும் தொழிலை மேற்கொண்ட எல்லோரும் எப்படி எழுத்தாளர்களாக முடியும்? மாமரத்திலே பூக்கும் எல்லா பூக்களுமா மாங்கனிகளாகி விடுகின்றன. சில பூவாகவே உதிர்ந்து விடும், சில பிஞ்சாகி வெம்பி வீழ்ந்து விடும், சில காயாகி தன் காலத்தை முடித்துக் கொள்ளும் சிலவே கனியாகி நிற்கும். அந்தச் கனி தரும் சுவையைக் காயோ, பிஞ்சோ, பூவோ தருவதில்லை யல்லவா அதுபோலத்தான் எழுத்தாளர்களும்.

எழுத்தாளர் உலகத்தில் கனியாகிப் பயன் தரும் எழுத்தாளர்கள் சிலரே. அவர்கள் எழுத்தாளர் உலகின் முதல் வரிசைக்குரியவர்கள். அந்த முதல் வரிசை எழுத்தாளர்களில் ஒருவர் தான் எனது நண்பர் கவிஞர்-சுப்பு ஆறுமுகம் அவர்களும் அவர் முதல் புத்தகத்தின் மூலமே முதல் வரிசையில் உட்காரும் தகுதி பெற்றிருக்கிறார் என்பது 'நல்ல பெண்மணி'யை படிக்கும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

காதல் தேவை என்கிறாள் பகவதி-கடமை தேவை என்கிறான் முருகன். இருவரும் ஒரே

வீட்டில் தான் வாழ்கிறார்கள் ஊரும் உலகமும் அவர்களைக் காதலர்கள் என்றுதான் கூறின. ஆனால் அவள் யார்?......படித்துப் பாருங்கள். 'நல்ல பெண்மணி' அவள் என்று பதில் கூறுவீர்கள்.

நல்ல பண்புள்ள நல்ல மனிதர் கவிஞர்-சுப்பு ஆறுமுகம், அவர்கள் நல்ல பெண்மணியை நமக்குத்தந்திருப்பது திருவள்ளுவர் திருக்குறளை உலகிற்குத் தந்தது போலாகும். 'முகஸ்துதி' என்று தீர்மானித்து விடாதீர்கள் காலம் பதில் கூறும்!

கவிஞர் ஆறுமுகம் அவர்கள் நல்ல ஒழுக்கங்களை சுட்டிக் காட்டும் பல நூல்களைத் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்பது எனது எண்ணம் கவிஞரின் கவிதாவுள்ளம் - கற்பனை சக்தி - அனுபவப் படிப்பு அவ்வளவும் இதிலே மிதந்து கிடக்கின்றன.

படியுங்கள்—சுவையுங்கள்.

**பால்வண்ணன்**
ஆசிரியர் கலைமன்றம்

"உலகம்" என்ற வார்த்தையை, வெறுப்புடனே விருப்புடனே ஒரு தடவை கூட உள்ளத்தாலும் சொல்லாதவர்கள் அல்லவா உண்மையான காதலர்கள்...?

## பகவதி :

எனக்கு முதன் முதலில் சிறு வயதிலேயே பிடிக்காத ஒன்று எது என்ருல், என் பெயர்தான். என்னுடன் ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த மற்றப் பிள்ளைகளுக்கெல்லாம், அவர்களது பெற்ருேர்கள் எவ்வளவோ அழகான பெயர்களை வைத்திருக்கும் போது எனக்கு மட்டும் என் பெற்ருேர்கள் இப்படி பெயரிட்டு விட்டார்களே என்பதை எண்ணி எண்ணி எத்தனையோ முறை எனக்குள் வருத்தப் பட்டிருக்கிறேன். அந்த மாதிரி நேரங்களில் "பகவதி" என்று கூப்பிட்டுக் கொண்டே என்னேடு படித்த பக்கத்து வீட்டு முருகன் வருவான். அவனைக் கண்டதும் என் வருத்தம் எல்லாம் நீங்கி விடும். இப்படியே நாளடைவில் என் பெயரை முருகன் சொல்லச் சொல்ல எனக்கே என் பெயரில் ஒரு குளுமை இருப்பதாகத் தோன்றியது.

முருகன்! என் வாழ்விலேயே நானுக விரும்பிய ஒரே முழு முதற்பொருள் என் முருகன்தான். அவன் வீட்டில் அவனை யாரேனும் இலேசாகக் கண்டித்தால் கூட நான் அதற்காக என் வீட்டில் காரணம் சொல்லாமல் உண்ணுவிரதம் இருப்பதுண்டு. அவனை யாருமே

அடிக்கக்கூடாது! அவனை யாருமே கண்டிக்கக்கூடாது! அவனை யாருமே சொந்தம் கொண்டாக்கூடாது! அவனை யாருமே தொட்டுக்கூட பேசக்கூடாது!—என்றெல்லாம் எத்தனையோ முறை நினைத்திருக்கிறேன். எல்லாம் அவனுக்கு நானேயாகவும், நானே அவனுக்கு எல்லாம் ஆகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணம், எனக்கு அந்தப் பருவத்தில் உதித்ததுதான்!

முருகனின் பெற்றோர்கள் அதிதீவிர ஆதி சைவர்கள். ரெம்பவும் கொள்கையில் கண்டிப்பானவர்கள். 'முட்டை சாப்பிட்டால்தான் மோட்சலோகம் கிடைக்கும்' என்று அந்த முனிபுங்கவர்களே வந்து ஆதாரங்களுடன் சொன்னாலும்கூட, 'சைவர்கள் வாழும் நரகமே எங்களுக்குப் போதும்' என்று சொல்லக் கூடியவர்கள்! நந்தவனம் சென்று காலை மலர் கொய்து மாலை தொடுத்து கோவிலுக்குப் போட வேண்டிய முதற் பணியை முருகனுக்கு இட்டிருந்தனர்.

நாங்கள் இருவரும் தினமும் காலையில் நந்தவனத்தில் சந்திப்பதுண்டு. அவன் மலர் பறிப்பான். நானும் பேசிக்கொண்டே பறித்துக் கொடுப்பேன். பறித்து முடித்ததும் மொத்தமாகப் புல்தரையில் கொண்டு வந்து குவிப்போம். அவன் அவனுக்குப் பிடித்தமான நல்ல மலர்களை எல்லாம் தொடுத்து என்னிடம் கொடுப்பான். அவனகச் செய்யும் எதற்கும் எனக்கு ஆட்சேபனை சொல்லவே தோன்றாது? மலரை வாங்கிக் கொண்டு அப்படியே சும்மா இருப்பேன். அவன் 'வெடுக்'கெனப் பிடுங்கி, என் அன்னை பின்னிவிட்ட அருமைத் திருச்சடையில் தன் கையாலேயே சொருகி

விடுவான், சுதந்திரமாக! இதை ஒரு நாள் பார்த்துவிட்ட முருகனின் தந்தை சீறி விழுந்தார். அப்படியே பாக்கியுள்ள பூக்களை குடலையோடு தெருவில் கொண்டு கொட்டி, முருகனைத் தலையில் அடித்து வீட்டுக்கு இழுத்துச் சென்றார். சிந்திக்கிடந்த மலர்கள் என்னை சிந்திக்கத் தூண்டின. இன்று மட்டும் என் தலையிலிருந்த பூக்கள் ஏனோ எனக்குக் கனமாகத் தோன்றின. அதை எடுத்துப் பிய்த்துத் தெருவிலேயே எறிந்துவிட்டேன். அன்று கோவிலில் சாமிக்குப் பூ இல்லையாம்! ப்பூ; இதற்குக் கிராமமே சஞ்சலப்பட்டது. என் தலையில் பூ இல்லை! அதை யார் நினைத்திருக்கப்போகிறார்கள், முருகனைத் தவிர!

இதெல்லாம் பழைய கதைகள். ஆயினும் நெஞ்சில் தங்கும் நிகழ்ச்சிகளை நினைக்காமல் இருக்க முடிகிறதா? இதை முடியும் என்பவன் சரித்திர ஏடுகளை எல்லாம் எரித்துவிட்டல்லவா என்னிடம் வரவேண்டும்!

இப்போது எனக்கு முருகன் 'அவன்' இல்லை... 'அவர்'! நான் ஆறுவது பாரம் படித்துக்கொண்டிருந்தேன். என் இஷ்டப் பாடமும் சரித்திரமதான். அது பழமைதான், ஆயினும் படிக்கப் படிக்க புதுமை கண்டேன!

தாஜ்மஹால்! அதைப் படிக்கும்போது எத்தனை இன்பம். முருகனிடம் எனக்காக ஒரு சிறு கல்லறை கட்டச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு உடனே நானும் செத்து வைத்து, முருகனை ஒரு 'ஷாஜஹான்' ஆக்கிவிடலாமா என்றுகூட முதலில் பிள்ளைத்தனமாகச் சிந்தித்தேன். பிறகு சே! சே! அதென்ன காதல், அவ்

வளவு பிரமாதமானதா? உலகம் என்றைக்கும் நினைக் கட்டும் என்று கட்டப்பட்டதுதானே அது.

'உலகம்' என்ற வார்த்தையை வெறுப்புடனே, விருப்புடனே ஒரு தடவைகூட உள்ளத்தாலும் சொல்லாதவர்கள் அல்லவா உண்மையான காதலர்கள்? அப்படியிருக்கையில் நானும் தாஜ்மஹாலைப் புகழ்வதா?

'தாஜ்மஹால் பளிங்குக் கற்களால் செய்யப்பட் டால்தான் என்ன? பத்தரை மாற்றுத் தங்கத்தினல் செய்யப்பட்டால்தான் என்ன?—எங்களுக்கு வேண் டாம் அது. பழம் தரும் பலன்மிக்க மரங்களே போதும்' என்று பகுத்தறிந்து கொண்டு பறவையினங்கள் மரத்தி லேயே போய்க் குந்துகின்றன. எனக்கு அந்த அறிவு கூட இல்லையே. தேசங்கள் புகழும் கட்டிடமாம், திரு மகளும் கலைமகளும் ஆங்கே ஒருருவம் பெற்று உலவு கிருர்களாம், காதலுக்காக நிறுவப்பட்டதாம்! அத்தனை யும் பித்தலாட்டம்! நானும் அதைப் போய் நினைத்துக் கொண்டிருந்தேனே, பேதை?

காதலிக்குக் கல்லறை கட்டி திறப்பு விழா நடத் தும் வரையிலும் உயிரோடு வாழ்ந்திருந்த ஷாஜஹா னின் பெயரை, உண்மைக் காதலர்கள் ஒரு தடவை கூட உச்சரிக்கக் கூடாது என்பதை முருகனிடமும் சொல்லிவிட்டேன். அவர் அதற்கும் என்னமோ குறும் புத்தனமாகப் பதில் சொல்லிவிட்டார்; எனக்கு வெட் கம் வந்துவிட்டது! எடுத்ததெற்கெல்லாம் குறும்புதான் பேசுவார். சிரித்தால், பதிலுக்கு வாயால் வலித்துக்காட் டுவார். எனக்கு அப்படி வலித்துக்காட்ட மனம் வராது. பொழுது எல்லாம் பேசிவிட்டு, 'திருவிளக்குப் பூசை

செய்யவேண்டும். தேடுவாள் அம்மா' என்று சொல்லி எழுந்து வீட்டுக்குப்புறப்பட்டால், "போ" என்று சொல்லிவிட்டு, புறப்பட்டதும், பின்புறமாக என் சடையை இழுத்து விடுவார். நல்லகாலமாக என் கூந்தல், இயற்கைக் கூந்தல்!

ஊம்! அதெல்லாம் இருக்கட்டும். எனக்குக் கல்யாணம் பண்ணவேண்டுமாம். தந்தை யற்ற என்னை தாய் எப்படியோ கஷ்டப்பட்டு படிக்க வைத்து விட்டாளாம். நல்ல மாப்பிள்ளையாகப் பார்க்கப் போகிறுளாம். அட பாவமே! முருகன் வீட்டிலும் முருகனுக்குக் கல்யாணம் பண்ணவேண்டுமென்று பேச்சு நடக்கிறதாம்! தாயற்ற அவரை தந்தை எப்படியோ கஷ்டப்பட்டு படிக்க வைத்து விட்டாராம். நல்ல பெண்ணுகப் பார்க்கப் போகிறுராம்! ஐயோ! எனக்கு சிரிப்புதான் வந்தது. என் தாய் பார்க்கப்போகும் நல்ல மாப்பிள்ளைக்கும் முருகனின் தந்தை பார்க்கப் போகும் நல்ல பெண்ணுக்குமே நல்ல நாள் பார்த்து, நல்ல முறையில், நல்ல திருமணம் செய்துவிடலாமே! என்னையும், முருகனையும், வீணுக ஏன் தான் அவஸ்தைப் படுத்தினுர்களோ? அட கடவுளே!!!

★

அடகடவுளே! நீ படைத்த உலகத்தை நீயே தான் ரசித்துக் கொள்ளவேண்டும்! நான் தயார் இல்லை!

## முருகன் :

எல்லோரும் என்னைக் குறும்புக்காரன் என்று வெறுத்தார்கள். வெறுத்தால் வெறுக்கட்டும என் பகவதி என் குறும்புகளை ரசிக்கும் போது, நான் ஊருக்காக மாறிவிடுவதா?

"சீச்சி! என்ன உலகம் இது? எனக்குப் பிடிக்கவில்லை. எங்கும் எதிலும் முரண்பாடு. நல்லதும் கெட்டதும் அடையாளம் தெரியாமல் விரவிக் கிடக்கின்றன. இந்தக் கொள்ளையில் படைத்த "பெரிய" மனுஷனுக்கு வேறு, பாராட்டுகள் யுகாந்திரமாக நடந்து வருகின்றன. **அட கடவுளே! நீ படைத்த உலகத்தை நீயேதான் ரசித்துக் கொள்ள வேண்டும். நான் தயாரில்லை!**

ஒன்று இதை அழித்துவிட்டுப் புது உலகம் படைக்கவேண்டும்; அல்லது திருத்திப் படைக்க வேண்டும். இரண்டும் முடியாமல் போனல், தன் பிள்ளைகளாகிய மனிதர்களிடமாவது விட்டுவிட்டு தான் ஒதுங்கிவிட வேண்டும். அதுவும் இல்லை. அவருக்கு என்னவோ அவருடைய கடல் ஓசையின் அளவுக்கு, மனிதனின் அபயக்குரலையும் பெரிதாக்கிவிட வேண்டுமென்ற ஆசை போலிருக்கிறது" —இப்படி எல்லாம் நான் என் கட்டுரை, கவிதைகளில் எழுதுவது என் தந்தைக்குப்

பிடிக்காது. கடவுளை இந்தத் தினுசில் பேசுகிருனே என்று கவலைப்பட்டார். என்னை வெறுத்தார். அஞ்சு வயதில் நான் என் பிஞ்சு விரல்களால் அவருக்கு எத்தனையோ அடிகள் கன்னத்திலேயே கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் வெறுக்காத விவேகி இதை மட்டும் வெறுத்துவிட்டார். பாவம், பாவம், ஒரே பாவம்!

போகட்டும். எப்பவுமே நான் அவரைப் பற்றி அதிகமாகச் சிந்திப்பதில்லை, சதா என் நினைவு பகவதியைப் பற்றித்தான். இந்தப் பருவத்தில் அவளுக்கும் எனக்கும் கடிதத் தொடர்பு நடைபெற்றது...இதுவரை எங்களுக்குள் தூதுபோய் வந்த கடிதங்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு பெரிய திருக்குறள் புத்தகத்தின் கனம்கூட குறைவாகத்தான் தோன்றும்...?

என் கடிதங்களில் கவித்வம் இருப்பதாக எழுதியிருந்தாள். "ஆகா! தமிழ்க் கன்னியே என் தமிழை ஒப்புக் கொண்டு விட்டாள்" என்று பதில் எழுதினேன்.

"முகஸ்துதி நேரில் பேசுவது போதாதா? கடிதத்திலுமா கலாட்டா?"—என்று கேட்டு எழுதி இருந்தாள். "கண்ணே! முகஸ்துதி போன்ற ஆபத்தான பதங்களை இனி கடிதங்களில் எழுதாதே. நம்மைச் சுற்றியுள்ள உலகில் வழங்கும் வார்த்தைகள் எல்லாம் நமக்குள் வேண்டாம். நமக்கென நாமே ஒரு அகராதி தயாரிக்க வேண்டும். நேரம் கிடைக்குமா?—" என்று கேட்டு எழுதினேன்.

"அகராதி இப்போதே தயாரித்து விடுங்கள். அப்புறம் நேரம் எப்படி எப்படியோ......?" என்று எழுதி விட்டாள்.

இப்படி எல்லாம் பதில் எழுதிக் கொண்டே தன்னைக் குறும்புக்காரி இல்லை என்றும் சாதிப்பாள். என்னைத்தான், குறும்புக்காரன் என்று நிரூபிப்பாள். அவள் எனக்குத் தரும் பட்டத்தையே நான் அவளுக்குத் திரும்பக் கொடுப்பேன். அவளும் திரும்ப எனக்குத் தருவாள். இப்படியாக...அதிக தூரத்திலும் அஜாக்கிரதையிலும் இல்லாத நாங்கள் எங்களுக்குள் பூம்பந்து வீசி விளையாடுவதுண்டு!

இந்த சந்தர்ப்பத்தில்தான் என் தந்தை எனக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்தார். பகவதி இதைக் கேட்டால் என்னைப் புதுமாப்பிள்ளை என்று பரிகாசம் செய்திருப்பாள். எனக்குத் திருட்டுத் தனமாக கொண்டு வரும் காப்பி டம்ளராலேயே எனக்கு ஆலத்தி எடுத்து "லாலி"யும் பாடியிருப்பாள்.

பெற்றோர்களுக்குத், தாம் பெறும் பிள்ளைகளை எமனுக்கு முன்பு தாமே ஒருமுறை கொன்று பார்க்க வேண்டும் என்று ஆசை வரும் போலிருக்கிறது. அதனால்தான் பகவதியின் தாயும் என் தந்தையும், எங்கள் கல்யாணத்தைப் பற்றி அப்படிப் பேச ஆரம்பித்தார்கள்.

எப்படியோ காதல் கடிதங்கள் எழுதியது போக, பாக்கியுள்ள நேரங்களில் படித்தே பரீட்சையில் இருவரும் தேர்ச்சி பெற்று விட்டோம்!

பகவதியின் தாய் காலமானாள்.

"பெண்களுக்குத் தனிமையும், ஆண்களுக்குக் கூட்டமும் நமது நாடு சம்பந்தப்பட்டவரை பெரும்

பாலும் ஆபத்தான தல்லவா"—என்று ஒருநாள் பகவதியிடம் கேட்டேன்.

"ஏன்? நீங்கள் எங்கும் அயல் நாட்டுக்குப் போகப் போகிறீர்களா" என்று கேட்டு விட்டாள். அன்றுதான் துணிச்சலுக்கும், தூய்மைக்கும் ஏதோ ஒற்றுமையிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

ஒருநாள் சந்திக்கா விட்டாலும் அவளுக்கு பிரமாதமான கோபம் வந்துவிடும். காரணங்கள் சொல்லிக்கூட அவளது கோபத்தைத் தணிக்க முடியாது. ஏதேனும் தன் வீட்டில் ஆக்கி இருப்பதை எனக்குக் கொண்டு வருவாள். நான் அதை இரண்டாகப் பங்கு வைத்தால், அவள் அந்த இரண்டையும் ஒன்றாக்கி, எனக்குத் தானே ஊட்ட ஆரம்பித்து விடுவாள். அவளாக ஊட்ட ஆரம்பிக்கும்வரை, நான் சாப்பிடாமல் சமாளித்துக் கொண்டேதான் இருப்பேன்—அதில் ஒரு குழந்தை சுகம்!

அன்று எனக்கு நல்ல ஜுரம். வைத்தியனைக் கொண்டு விட்டுவிட்டு, என் தந்தை கோவில் திருப்பணி புரியப் போய் விட்டார். வைத்தியனும் போய்விட்டான். தற்செயலாக அங்கு வந்த பகவதிதான், எனக்குத் தேவைப்பட்ட பணிகளை எல்லாம் செய்து பக்கத்திலேயே இருந்தாள்! அவளாகச் சிரிக்காதது அன்று மட்டும் தான்!

"எப்படி இருக்கிறது" என்று என்னைக் கேட்டுக் கொண்டிருந்தவளைப் பார்த்து, நான் மாலையில், "எப்படி இருக்கிறது" என்று கேட்க வேண்டிய நிலை வந்து

விட்டது! அவளுக்குக் காய்ச்சல். எனக்குள்ள மருந்துகளையே கொடுத்தேன். வெந்நீர் கேட்டாள். அடுக்களைக்குள் சென்று வெந்நீர் போட்டுக் கொண்டு வருவதற்குள் போய் விட்டாள்? தேடினேன் வேறு ஓரிடமும் போகவில்லை. தன் வீட்டில் போய் கட்டிலில் படுத்திருந்தாள். "என்ன வந்து விட்டாய்" என்றேன். "அப்பா வரும் நேரமாகி விட்டதல்லவா" என்றாள்.

"வந்தால் நமக்கென்ன?"

"நமக்கு ஒன்றும் இல்லை! அதனால் தான் வந்து விட்டேன்" என்று சொன்னாள், வரண்ட ஒரு சிரிப்புடன்.

என் தந்தை பூந்தோட்டத்தில் பாம்பு கடித்து இறந்த சேதியும் அங்கேயே வந்து விட்டது. உடனே, அப்பாவைப் பார்த்து வர அனுப்பினாள்—போனேன்!

0 0 0

அவ்வளவு தான்! யார் என்ன செய்ய முடியும்? அப்பாதான் அடிக்கடி சொல்வார், எல்லாம் அவன் செயல்' என்று! அவரே அவன் செயலுக்குள்ளாகி விட்டார். பகவதி, என் தந்தை இறந்ததற்காக என்னிடம் கவலை தெரிவித்த நேரத்தில் கூட, அப்பா உதிர்த்த அந்தப் பொன் மொழியைத்தான், நானும் பகவதியிடம் உதிர்த்து விட்டேன்!

மூன்று மாதங்கள் ஆயின.

என் பந்துக்கள் யாரும் என்னைப் பார்க்க வருவதில்லை. நண்பர்களும் கிடையாது. என் வாழ்விலேயே

தனிமையின் முழுப்பொருளையும் அப்பொழுதுதான் புரிந்து கொண்டேன். சில நேரம் பகவதியின் வீட்டுப் பக்கம் போவேன். கொஞ்சம் பேசிக் கொண்டிருப் பேன். அதில் ஏதோ தவறு இருப்பதாக திடீரென எனக்குள் தோன்றும் உடனே புறப்பட்டு வந்து விடு வேன்.

பகவதி! அவளை என்னுல் புரிந்து கொள்ளவே முடிய வில்லை. தாயைப் பிரிந்தாள். தளர்ந்து விடவில்லை. தையல் மிஷினின் உதவியைக் கொண்டு தானுக உழைத்துச் சாப்பிடுகிருள். என்னைக் கண்டால் மட்டும் மகிழ்வாகக் காணப்படுகிருள். பாக்கி நேரங்களில் என் னமோ போல் இருக்கிருள். அன்று அவள் அழுது கொண்டிருந்ததை நான் பின் புறம் இருந்து பார்த்தது அவளுக்குத் தெரியாது. ஐயோ! எவ்வளவு பரிதாபமா கக் காணப்பட்டாள் தெரியுமா? ஒரு பதினெட்டு வயதுப் பெண் தன்னைச் சிங்காரிப்பதற்கே பொழுது போதாது என்று திரியும் வயதில் இவள் சிந்தும் கண்ணீரைத் துடைக்கும் கவனமும் இல்லா திருக்கிருளே என்று நான் வருந்துவதுடன் ஆச்சர்யப்படுவது முண்டு.

அன்ருெரு நாள் சென்றேன். மகிழ்வுடன் வர வேற்ருள்.

"பகவதி..."

"எங்கே ஒரு வாரமாகக் காணவில்லை?"

"எங்கெங்கோ போயிருந்தேன். பகவதி! ஒரு விஷ யம் கேட்கலாமா?"

"ஊம..."

'இனிமேல் நான் இங்கேதான் சாப்பிடப் போகி றேன். நாம் இனியும் பிரிந்து வாழவேண்டியதில்லை..."

சிரித்தாள்!

சிரித்தேன்!

அன்று முதல் ஊரில் என்ன வெல்லாமோ பேச்சு கள் அடிபட்டன.

எங்களுக் கிடையில் தான் 'உலகம்' என்ற ஒன்று கிடையாதே!

நான் கவிதைகள் எழுதும் போது என்னிடம் வந்து பேச மாட்டாள். பாக்கி நேரம் எல்லாம் என்னரு கில் அமர்ந்து புன்னகை வதனத்துடன் பேசிக் கொண் டிருப்பாள்.

நான் எழுதியவைகளை நய முணர்ந்து ரசிப்பாள், பாராட்டுவாள், சுவையறிந்து உணவூட்டுவாள்!

என் மகிழ்வையே தன் மகிழ்வாகக் கொண்டு வாழ்ந்தாள்.

அவளுக்காகவாவது நான் எப்போதும் மகிழ் வுடன் இருக்க முயன்றேன்!

★

"ஒரு கடவுளாக இல்லாமல், இந்த உலகத்துக்கு இரு கடவுள் களாக இருந்திருப்பார்களேயானால், அவர்களுக்குள் ளேயே பொருமை பூசல் கிளம்பி, முதன் முதல் யுகத்தி லேயே அணுக்குண்டுகள் கண்டு பிடிக்கப் பட்டிருக் கும்.........

## பகவதி :

என்னைப் புரிய முடியவில்லை என்ருர் அவர். அந்த அளவுக்கு என்னிடம் என்ன இருக்கிறது என்பது எனக்கே தெரிய வில்லை. உண்மையில் என்னல்தான் அவரைப் புரிய முடியாமல் இருந்தது. திடீரென வந்தார். உன்னேடிருப்பேன் என்ருர். இருக்கிருர்.

சில வேளைகளில் சம்பந்தமில்லாமல் பேசுகிருர். நான் ஒன்றை கேட்டால் அவர் வேறு பதில் சொல்கி ருர். காரணமில்லாமல் சிரிக்கிருர். கவலைப் படுகிருர் வெளியே போனல் எப்போது வருவார் என்றே என் ஞல் சொல்ல முடியாது. போய் ஓரிரு மணி நேரங்களுக் குள் வந்தாலும் வந்து விடுவார். இரண்டு மூன்று நாட் கள் ஆனலும் ஆகிவிடும்

சில வேளைகளில் தொட்டுத் தாலி கட்டிய இல்லா ளாக நினைத்து என்னைச் சொந்தம் கொண்டாடிப் பழகு வார்—அதிலே உரிமை தெரியும்.

சிலவேளைகளிலே விசித்திரமான வாஞ்சை காட்டு வார்—அதிலே சகோதரச் சாயல் கூட தென்படும்.

இன்னும் சில வேளைகளிலே விலகுவார், விரட்டு வார், வேற்றுமைப் படுத்துவார். அதிலே விரோதத் தன்மை இருக்குமோ என்றசந்தேகம் கூட எனக்கு வரு வதுண்டு.

எழுதுவார், எழுதுவார், எதைப் பற்றியெல்லாமோ எழுதுவார்! அந்த நேரங்களில் நான் அவரிடம் போய் பேச்சுக் கொடுப்பதில்லை. மணிக்கணக்காக எழுதுவார். ஒரு நாள் மாலையில் எழுத உட்கார்ந்தவர், மறுநாள்காலை யில்தான் எழுதியதை முடித்தார்.

எவரது கருத்துகளுக்காகவும், இவர் தமது கருத் துக்களை மாற்றுவது கிடையாது. வீழ்த்துவார், சில நேரம் சில பொருள்களை! வாழ்த்துவார்,சிலநேரம் அதே பொருள்களை! இரண்டையும் எவரும் எதிர்க்க முடியாது! அந்த அளவுக்கு மூளையும் மொழியும் அவரது கருத்துல கில் கைகட்டிச் சேவகம் செய்து வந்தன.

வெறும் கவிஞனக இருந்தாலே அவனைப் பாதி மனிதன்தான் என்பார்கள். இவரிடம் இருக்கிற பாதிக் கும் ஆபத்தாக தத்துவ ஞானம் வேறு காணப்பட்டது. கேட்க வேண்டுமா, உலகத்துக்கு ஒரே கொண்டாட்டம் தான். அவரைப் பற்றி என்னவெல்லாமோ சிரிப்புக் கிடமான வதந்திகளும் உலவின.

"உலகம்! நாம் சதாவும் தங்கி மகிழ வேண்டிய வீடு அல்ல! நாம் பார்த்து ரசிப்பதற்காகப் படைக்கப் பட்டி ருக்கும் ஒருபெரிய எக்ஸிபிஷன்"—இதுதான் உலகத் தைப் பற்றிய அவர் கருத்து!

ஒரு நாள் இரவு. வெண்ணிலா வானிலும், தென்றல் தோட்டத்திலும் சேஷ்டைகள் செய்து கொண்டிருந்த நேரம் அது. பிரம்மாச்சாரிகளேயும்பிரமிக்க வைக்கும் நேரம் என்று கூட அதைச் சொல்லி விடலாம். முருகன் திடீரென வந்தார். என் கையைப் பிடித்து இழுத்தார். தோட்டத்துக்குள்ளே என்னை அழைத்துச் சென்ருர். புல் தரையில் அமர்ந்தார். என்னையும் அருகில் அமர்த்தினுர். என் கைகளுடன் தமது கைகளையும் பின்னிக் கொண்டார். இலேசாகச் சிரித்துக்கொண்டே, "பகவதி பேச மாட்டாயா.........?"

"பேசுகிறேன்! எதைப் பற்றி முருகன், பகவதி பேச வேண்டும்?"

"உனக்குப் பிடித்த எதைப் பற்றியும் பேசு"

"உங்கள் கவிதைகளைப் பற்றிப் பேசட்டுமா?"

"வேண்டாம பகவதி வேண்டாம். விளையாடி மகிழ வேண்டிய நமது நேரங்களைத் தமக்கென ஆக்கிய கவிதைப் பற்றி நாம் பேசவேண்டாம், பகவதி"

"தங்களுக்கு விருப்பமான தத்துவங்களை எனக்குத் தெரிந்த வரையிலும் பேசட்டுமா?"

"ஊஹூம் அதுவும் வேண்டாம். தத்துவமாவது, கத்தரிக்காயாவது; விரக்தி யடைந்த குருட்டு விதவைகள் போடும் கோலமாவது தத்துவங்களைவிட அழகாயிருக்கும் பகவதி! அவைகளைப் பற்றியும் வேண்டாம். அழியாத அஜந்தாச் சித்திரங்களைப் பற்றிப் பேசு! ஆழியை, ஆதவனை, அம்புலியை, தென்றலைப் பற்றிப்

பேசு! அனார்கலிகளைப்பற்றிப் பேசு! அன்பைப் பற்றிப் பேசு!"

"அப்படியா.........!"

"ஆம், பகவதி, ஆம்"

"ஆ......நான் நினைப்பதை பேச முடிய வில்லையே......!"

"வேண்டாம், நாம் பேசவே வேண்டாம். அதுவும் நல்லதுதான். எண்ணங்கள் வார்த்தைகளாக உருவாகும் பொழுதுக்குள், இன்பம் கலைந்து விடும், கண்ணே! நாம் பேச வேண்டாம். காதலர்கள் வார்த்தைகளை உதிர்ப்பதற்காக அவர்களுக்கு இதழ்களை இயற்கை தரவில்லை; ஆம்! பெண்ணுக்கும் ஆணுக்கும் பேரின்பம் தருவது கண்ணுக்குள் பேசும் கவிதைகள்தான் பகவதி"—

என்று சொல்லிக்கொண்டே என்னைத் தன் மார்பின் மீது சாய்த்தார். தடுக்கவில்லை, நான். வருடினார், இப்பவும் தடுக்க மனம் வரவில்லை! தடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் நான் அப்படியிருக்கவில்லை. என்னமோ தடுக்க மனம் வரவில்லை. அவ்வளவுதான்!

ஒரே ஒரு கணம்.

என்னை நான் மறந்த நிலை.

திடீரென ஒரு அதிர்ச்சி.

என்னை விட்டுவிட்டார். எழுந்தார், பேசாமல் வீட்டுக்குள் வந்துவிட்டார். பின்னாலேயே நானும் வந்தேன்.

உள்ளே வந்தவர் எழுதக்கூட உட்காரவில்லை. அப்படியே அழ ஆரம்பித்துவிட்டார்.

"ஏன் அழுகிறீர்கள்?" என்றேன்.

"அடுத்த பிறவியில் நான் ஒரு பெண்ணாகப் பிறக்கப் போகிறேன் என்று எனக்கு என் மனச்சாட்சி சொல்லுகிறது. அதற்காக இப்பொழுதே அழுது பழகுகிறேன், பகவதி என்னை விட்டுவிடு"—என்று சொல்லிப் படுத்துக்கொண்டார்.

இதெல்லாம் தெரியாமல் உலகம் எங்களைப் பற்றி என்னவெல்லாமோ கதைக்கிறது. உண்மையிலேயே நாங்கள் தம்பதிகளாக இருந்தால்தான், அதிலே உலகத்துக்கு என்ன கஷ்டம்? சீச்சீ!

முருகன்தான் அடிக்கடி சொல்லுவார், "உலகம் பொல்லாதது, பொறாமை நிறைந்தது, இதை அழிக்கும் நல்ல எண்ணத்தினால்தான் கடல் அலைகள் யுகாந்திரமாக இதை நோக்கியே சீறிப் பாய்ந்து வந்துகொண்டிருக்கின்றன"—என்று! இன்னொரு கட்டுரையில்கூட எழுதியிருந்தார்

"ஒரு கடவுளாக இல்லாமல் இந்த உலகத்துக்கு இரு கடவுள்களாக இருந்திருப்பார்களேயானால், அவர்களுக்குள்ளேயே பொறாமை பூசல்கிளம்பி, முதன் முதல் யுகத்திலேயே, அணுக் குண்டுகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும்"

எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார். இவ்வளவு பெரிய 'சான்ஸை' பொறாமைக்கு யார் கொடுக்கப் போகிறார்கள், இவரைப்போல்!

ஊம்! அவரைப் பாராட்டுவதெல்லாம் இருக்கட்டும். விஷயத்துக்கு வரலாம்.

என் மனதில் ஓரிடத்தில் மட்டுமல்ல, எங்குமே அவரும் நானும் தம்பதிகளாக வாழவேண்டும் என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. என்னை நான் அவரது இல்லாளாகவே எண்ணிக் கொண்டிருப்பதில் எத்தனை இன்பம் கண்டேன் தெரியுமா? என் கருத்தை அவர் புரிந்தும், புரியாதது போலிருக்கிறாரா? அல்லது இதில் நிஜமாகவே பேதைதானா என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும் நான் என் எண்ணங்களைப்பற்றி அவரிடம் ஒரு வார்த்தைகூட பேசுவது கிடையாது. அவரது எந்தப் போக்குக்கும் தலைசாய்த்து வந்தேன். அவருக்காக நானே தவிர எனக்காக அவர் இல்லை என்பதை செயல்மூலம் காட்டி வந்தேன். என் மகிழ்வின் ஆரம்பம் அவர் மகிழ்வின் ஆரம்பத்தில் தான். எப்படியோ பருவகால இயற்கை தரும் சவுக்கடிகளைக்கூட சட்டை செய்யாமலிருக்கப் பழகிவிட்டேன்.

என்னை அவர் தொட்டுப் பேசி பழகும்போதும், அறியாப் பருவத்தில் கண்டறிந்த அந்த அர்த்தமற்ற இன்பத்தைத்தான் நினைத்துக்கொள்ளுவேன்.

உலக மேதைகளே வந்து எங்கள் உறவை ஆராய்ந்தாலும் சரி, அவர்களுக்கும் அது ஒரு புரியாத புதிராகவே இருந்திருக்கும்! பெரிய விஷயங்கள், பெரியவர்களுக்குக்கூட பயப்படாது என்பதை அப்போதுதான் உணர ஆரம்பித்தேன்.

இதையெல்லாம் கொஞ்சம்கூட யோசித்துப் பாராமல் உலகம் எங்களுக்கு வசைபாடியதாம்! பாடினால்

தான் என்ன? இளமை முதலே எங்கள் காதுகளுக்கு எங்கள் பேச்சுத்தான் கேட்கும். உலகத்தின் பேச்சை மட்டும் கேட்க முடியாத விசித்திரச் செவிடர்களாகவே வளர்ந்துவிட்டோம்!

இதெல்லாம் போகட்டும். அவர் ஒரு வாரமாகப் பேசியதை நினைத்து சிரிக்கத்தான் தோன்றியது. யாரோ அவருக்கு ஒரு நல்ல நண்பர் கிடைத்துவிட்டாராம். அவரைப் புகழ்ந்து கொண்டேயிருந்தார். போன நூற்றுண்டில் தாமும் தம் நண்பரும் பிறந்திருந்தோம் இல்லையே, அதனுல் அல்லவா பிள்ளைத் தமிழ் பாடமுடியாமல் போயிற்று என்ற கவலைகூட முருகனுக்கு இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

உத்தமன் என்ருர். உழைப்பவன் என்ருர், அட, அட, அட, உலகில் அவன் ஒருவன் என்ருர். இன்னும் எப்படியெல்லாமோ அந்த நண்பரைப்பற்றி புகழ்ந்தார்.

காந்தி உயிரோடு இப்போது இருந்திருப்பாரானுல், ஒருவேளை, அவரையே தமது நண்பருடன் உலகின் மத்தியில் நிறுத்தி ஒட்டுக்கும் விட்டிருப்பார்.

நண்பர் ஒரு வியாபாரியாம். தேவைக்கு மேல் லாபத்தை விரும்பமாட்டாராம். அழகானவராம். அவர் மேல் ஆசைகொண்ட தாசி ஒருத்தி பொருளைத்தானே கொட்டிக் குவித்துக் கூப்பிட்டாளாம். அவளுக்கு நண்பர், புத்தர் யசோதரையைப் பிரிவது போலிருக்கும் படம் ஒன்றைப் பரிசளித்து விட்டு வெளியே ஓடிவந்து விட்டாராம். விந்தை! விந்தையை விட வேறு

வார்த்தை எனக்குத் தெரியவில்லையே, என்ன செய்வேன்?

ஒருநாள் யாருக்கோ கடைச் சாமான் தராசில் நிறுத்துக் கொடுத்ததில், தமக்கே சாதகமாக நிறுத்து விட்டாராம். வாங்குபவனும் கவனியாமல் வாங்கிக் கொண்டு போய் விட்டானும். இவர் அவனுக்குக் கொடுக்க வேண்டிய மீதிப் பொருளை எடுத்துக் கொண்டு ஊரெங்கும் தேடித் தேடிப் பார்த்து கடைசியில் அவனைக் காணமுடியாமல், கிராமத்தில் பஞ்சாயத்து கூட்டி மன்னிப்பு கேட்டாராம்.

நண்பர் இளையவராம். பத்து வரை படித்தவராம். இருபதாம் நூற்றாண்டில தாம் வாழுவதை ஒரு கணம் கூட மறந்து திரிய மாட்டாராம்.

தந்தை, தமக்கு எழுதி வைத்த சொத்தை வேறெதுக்கோ எழுதி வைத்து விட்டாராம்.

கல்யாணமே வேண்டாம் என்கிறாராம். யாரேனும் அதை வற்புறுத்திப் பேசினல், அந்த இடத்தை விட்டே எழுந்து போய் விடுகிறாராம். கடைக்குச் சாமான் வாங்க வரும் பெண்களை ஏறிட்டுக் கூட பார்க்க மாட்டாராம். ஒருமுறை ஏறிட்டுப் பாராத குற்றத்தினல் ஒரு பெண்ணுக்குரிய கடைச் சாமானை இன்னெருவளுக்குக் கொடுத்து விட்டாராம்.

இப்பேர்ப்பட்ட வியாபாரியான நண்பரை, முருகன் ஒருநாள் வீட்டுக்கு விருந்தாக அழைத்து வந்து விட்டார். இருவரும் என்னவெல்லாமோ பேசிக்

கொண்டே சாப்பிட்டார்கள். முருகன் எல்லோரிடமும், எப்போதும் பேசுவது போல் குழந்தை மொழியில் பேசினர். நண்பர் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டார். சாப்பாடு பரிமாறும் போது, என்னிடம் 'போதும், வேண்டாம்' என்ற இரண்டே இரண்டு சொற்களைத் தவிர, அவர் எதையும் உதிர்க்கவில்லை. 'போதும், வேண டாம்' என்ற இரண்டே இரண்டு வார்த்தைகளை மட்டும் உதிர்க்கும் நண்பரை நினைக்கும் போது, குறும்புக்கார முருகனுடனேயே பழகிய எனக்கு, 'ஹோல்டன், ரைட்' என்ற இரண்டே இரண்டு வார்த்தைகளுக்குள் தன் வாழ்க்கையைப் புதைத்திருக்கும் பஸ் கண்டெக்டரின் ஞாபகம் வந்து விட்டது. சாப்பிட்டு முடிந்ததும் கைகழுவத் தண்ணீர்ச் செம்பைக் கொண்டு நண்பருக்குக் கொடுத்தேன். வாங்குவதற்கு நண்பர் கூச்சப்பட்டார். கீழே வைத்தேன். குனிந்து எடுத்தார். அவரது சட்டைப் பையிலுள்ள எல்லாம் கீழே விழுந்தன. குனிந்தால் சட்டையில் உள்ளதுகள் கீழே விழுமே என்று எண்ணக்கூட முடியாத அசடு! உடனே நிமிர்ந்து முருகனை நோக்கி ஒரு அசட்டு சிரிப்பு சிரித்தார். இவர் தான் இருக்கிறரே, எல்லார்க்கும் எப்போதும் சிரிப்பது போல் இப்போதும் நண்பருக்குச் சிரித்து வைத்தார்.

சேர்ந்ததுகள் இரண்டும்!

'நினைக்க நினைக்க சிரிக்கத் தோணுதே"—

என்ற பல்லவியில் அன்றிரவே முருகனை ஒரு பாடல் எழுதச் சொல்லிவிட்டேன்.

என்னிடம் எப்படியெல்லாம் விளையாடுவாரோ அப்படியெல்லாம நண்பருடனும் விளையாடி மகிழ்வார். அவ

ரும் ரப்பர் பொம்மை போல, அசைந்தும் அசையாம லும், இசைந்தும் இசையாமலுமாக அப்படியே இருப் பார், பாவம்!

முருகனின் குறும்புத்தனங்களை, குளிர்ந்த வார்த் தைகளை, என்னைப் போலவே ஏற்று ரசிக்க ஆணுலகி லும் ஒரு ஆள் இருப்பதை எண்ணி வியந்தேன்— மகிழ்ந்தேன்!

என்னை, என் எழிலை, என் குணத்தை, என் நடை யுடை பாவனைகளை முன்பெல்லாம் வருணிப்பார். இப் போதோ வருணனை எல்லாம் நண்பரைப் பற்றித்தான். அதிலும் நான் முந்திய இன்பமே கண்டேன்.

சுருங்கச் சொல்லுகிறேனே:

என் நெற்றியில் திலகம் இடுவதில் எனக்கு இருக் கும் அக்கறையை விட, என் கூந்தலில் பூச்சூடுவதில் எனக்கு இருக்கும் அக்கறையை விட, முருகனின் சட் டைப் பையில் பேனாவை, ஞாபகமாக புறப்படும்போது எடுத்து வைப்பதிலும், சட்டைப் பட்டனை மாட்டி அழகு பார்ப்பதிலும் எனக்கு அதிக அக்கறை வந்துவிட்டது!!!

★

கொஞ்சத் தெரியாத பெண் அழகாயிருந்து என்ன பண்ண...? அதைவிட ஒரு நல்ல கொலு பொம்மையை வாங்கிக் கொள்ளலாமே...!

## முருகன் :

தத்துவங்களிலும், கவிதைகளிலும் நான் தன்னிக ரற்று விளங்குகிறேனும். என்னைப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன. ஆனல் எனக்கு என்னமோ நேற்று முதல், என்னைப்பற்றி, என் அறிவைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

நேற்றுதான் என் நண்பனின் சுய சொருபத்தைக் கண்டேன். வியாபாரி, வியாபாரி மாதிரியே நடந்து கொண்டான். எவ்வளவு அன்பு வைத்திருந்தேன். அவ்வளவும் வீணுகி விட்டதே.

ஒழுக்கம் உள்ளவன் தான், ஒப்புக் கொள்ளுகி றேன்—அதற்காக ஊமையாகவே இருக்கிருனே எப் படி ஒப்புக் கொள்ளுவது?

**கொஞ்சத் தெரியாத பெண் அழகாயிருந்து என்ன பண்ண...? அதைவிட ஒரு நல்ல கொலு பொம்மையை வாங்கிக் கொள்ளலாமே !**

பணத்தில் சிக்கனம் வேண்டியதுதான்; மறுப்பா ரில்லை. அதற்காக பட்டினி கிடந்து சாகிருனே, அதை சகித்துக் கொண்டிருக்க முடியுமா?

போகப் போக அவனது ஒழுக்கத்தைப் பற்றியே எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. பகலில் கடைக் குச் சாமான் வாங்க வரும் பெண்களை ஏறிட்டுக் கூட

பார்க்காமல் இருக்கிறான். மாலை மணி 7-க்கு மேல் சாமான் வாங்க வரும் பெண்களைக் கொஞ்சம் நிமிர்ந்து பார்க்கிறான். ஒருவேளை கடை வியாபாரம் இரவு 1-மணி வரை நடந்தால் என்ன என்ன நடக்குமோ!

அன்று என்னிடம் காப்பி சாப்பிடக் காசு இல்லை. கேட்டேன். பையிலிருந்து துட்டை மெதுவாக எடுத்தான். "மெதுவாக" என்ற இந்த வார்த்தையை இங்கே மெதுவாக நினைப்பதற்கில்லை. மிக மிக மிக மிக மெதுவாக எடுத்தான், கலங்கிக் கொண்டே!

ஒரு பத்தினிப் பெண்ணை, உத்தமன் ஒருவன் சோரம் போகச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறான் என்றால் கூட, உத்தமன் அப்படிக் கலங்கியிருக்க மாட்டான். பையிலிருக்கும் பைசாவை எடுக்க என் நண்பன் அவ்வளவு தூரம் கலங்கி விட்டான். எனக்கு அங்கு நிற்கவே மனம் வரவில்லை. உடனே புறப்பட்டு வீட்டுக்கு வந்து பகவதியிடம் நடந்ததைச் சொன்னேன்.

சிரித்தாள்!

சிரித்தேன்!

நண்பர்தானே பொறுத்துக் கொள்ளுங்கள் என்றாள். அவனிடம் முந்திப் பழகிய முருகன், அவன் பையிலிருந்து பைசாவை எடுப்பதற்கு முன்பே இறந்து விட்டான். இப்போது புது முருகன். இவனுக்கு ஏது அவனை மன்னிக்கும் உரிமை என்று—ஒரேயடியாக அடித்து விட்டேன்!

"கடவுள் தமது குழப்பத்தை எல்லாம் ஒரு மனித உருவம் ஆக்கி, இந்த உலகத்துக்கு உங்கள் நண்பராக

அனுப்பியிருக்கிறார் என்பது எனக்கு முன்பே தெரியும்" என்று சொல்லி பகவதி மேலும் சிரித்தாள்.

"அது மட்டுமல்ல பகவதி! உலகமே கடவுளுக்கு ஏற்பட்ட குழப்பத்தின் வடிவம்தான்!...பரவாயில்லை...இப்போது தானே அவரும் முதன் முதலில் ஒரு உலகத்தைப் படைத்திருக்கிறார்...போகப் போகப் பழகிக் கொள்வார்" என்று முடித்தேன்.

"எப்போது பார்த்தாலும் கடவுளைப் பற்றியே பேசுகிறீர்களே—அவரை நேரில் காண நேர்ந்தால் என்ன செய்வீர்கள்?"

"என் துர்பாக்கியமே! வருக! வருக! என்று வரவேற்பேன்"

"அவர் அதற்குக் கோபித்தால்...?"

"அட மடையா! துர்பாக்கியமே என்று வரவேற்றவனை கோபிக்கிறாயே! பாக்கியமே வருக, வருக என்று உன்னை வரவேற்றவன்தான் என்ன வாழ்கிறானா? நன்றாகக் கோபப்படு. எனக்கு ஒன்றும் கெட்டுப் போகாது......அட......கோபமா வருகிறது, உனக்குக் கோபம்!

இதோ பாரடா, என்ன தான் நான் கோபித்தாலும் என் பகவதி குளிர்ந்த முகம் காட்டுகிறாள், உன் சிருஷ்டியிடம் நீயே வந்து சிஷ்யனாக வந்து பாடம் படித்துக் கொள்ளடா!"

இதோ பார்! உலகத்தைப் பாதுகாக்கும் தலைக்கு மிஞ்சின வேலையை விட்டுவிடு. எங்கிருந்தோ, எப்படியோ, எப்போதோ, ஸ்வீகாரம் போல் கிடைத்த சக்தியைக் கொண்டு, உலகத்தைப் படைக்க வந்து விட்

டாயே, சுயமரியாதை யற்றவனே, சொரணை யில்லையா உனக்கு என்று விளாசி விடுவேன்—" என்றேன்.

"அவர் அப்படியே போகிற பாதையிலே ஜல வாயுக் குண்டு வைத்திருப்பவனைத் தூண்டி விட்டால்..." என்று எதிர்த்துக் கேட்டாள்.

"பகவதி! குண்டுகள் நமது உயிரைக் கொண்டு போகுமுன், நமது குலமானம், தற்கொலை மூலமாகவா வது காப்பாற்றப்படும்"

"கடைசியில் நம் நாட்டில் முன்பு இளம் விதவைகள் கண்டுபிடித்த தற்கொலைப் பாதைக்கே வந்து விட்டீர் களே"

"தற்கொலை கூட தப்பல்ல பகவதி! ஆதிக்கம் செலுத்தும் இயற்கையைப் பாதிக்கும் வகையில் மனி தன் செய்யும் பாதி முயற்சிதான் தற்கொலை" என்று முடித்தேன்.

ஆகா! அன்று எங்களுக்குள் நல்ல விவாதம். மறு நாள் அவளே ஞாபக மூட்ட நான் ஒரு கட்டுரையாக தொகுத்து விட்டேன். புத்தகமாகவும் வெளி வந்து விட்டது. நல்ல விற்பனை. நல்ல பாராட்டு வந்தது! பதிப் பகத்திலிருந்து பணம்மட்டும் எங்களுக்கு வரவில்லை. ஒரு நாள் நாங்கள் பட்டினியாகக் கிடந்தபோதும் எனக்குப் பதிப்பகம் போய் பணம் கேட்க மனம் வரவில்லை. பக வதிக்கும் பண விஷயமாக என்னிடம் என்றுமே பேச மனம் வராது. இப்படிப்பட்ட பகவதி எனக்கு இருக்கும் போது பணம் என்ன, ஆயுளைப் பற்றிக்கூட அக்கறை வருவதில் நியாயமில்லை யல்லவா?

★

வாழாத நான் போய் அவளை வாழ்த்துவதா?...சீச்சீ...!
கண் டாக்டரை குருடனா வாழ்த்துவது...?

# பகவதி:

இவரிடம் நண்பராவதற்கென்றே ஒரு கூட்டம் 'க்யூ' வரிசையில் நிற்கும் போலிருக்கிறது. அந்த வியாபாரி நண்பரை விட்டு விட்டு, இப்போது ஒரு புது நண்பரைக் கண்டு பிடித்திருக்கிறார். இவர் ஒரு சர்க்கார் குமாஸ்தாவாம். கச்சிதமான முறையில் வாழ்க்கை நடத்துபவராம். நல்லவராம். இப்படியே எல்லோரையும் நல்லவர் நல்லவர் என்று சொல்லி விடுகிறார். 'நல்லவர்' என்பதற்குரிய இலக்கணம் தான் என்ன என்பதை அவரிடம் ஒருநாள் கேட்டு விட வேண்டும் போலிருந்தது.

இப்போது வந்திருக்கும் நண்பர் ஒருவர் அதிசயப் பிறவி. ஏன் இவர் பிறந்திருக்கிறார் என்று இறைவனுக்கே தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். இவரைப் பற்றி நினைத்தாலே ஒரே கேள்வி மயமாகி விடுகிறது, மனம்! புது நண்பரின் உடல் அமைப்பே கேள்வி அடையாளமாகிய —?— இந்த வளைவைப் போல்த்தான் இருந்தது.

வேறு யார் சொல்ல வேண்டும், முருகனே சொன்னார்:—

''என் நண்பன் நடுச்சந்திலே நாலு நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கும் போதுகூட, அவனது பேச்

சில் சாந்தி முகூர்த்த அறைக்குத் தேவைப்பட்ட சப்தம் தான் கேட்கும்'' என்று!

அப்பாவி நண்பர்!

ஊமையாகவே என்னைப் படைத்திருக்கலாமே— என்ற கேள்வியை அவர் இயற்கையிடம் கோபத்தில், ஒருவேளை, கேட்பதாயிருந்தால் கூட, இந்த குறைந்த சுருதியுடன் தான் கேட்பார் என்று கருதுகிறேன்.

சின்னஞ் சிறுவயதில் இவர் தொட்டிலில் கிடந்து அழுவதைக் கூட, இவரது தாய் தொட்டிலுக்குள் எட்டிப் பார்த்த பிறகுதான் கேட்டிருப்பாள் என்று யூகிக்கிறேன்.

அட பாவமே! சத்தத்தைக் கொஞ்சம் கூட்டிப் பேசினால் என்ன? ஊராரின் காதுகளுக்கெல்லாம் அவரது உதட்டைத் தொட்டுப் பார்த்துத் தான் விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது முன் வினைப் பயன் போலும்!

'அந்தோ!' என்ற வார்த்தையை அந்த நண்பருக்காக என் ஆயுள் முழுவதுமே சொல்லிக் கொண்டிருக்கலாமா என்று எனக்குத் தோன்றியது.

இவ்வளவு அசட்டுத்தனம் நிறைந்த ஒருவரை வீட்டுக்குக் கூட்டி வந்து 'இவன் என் ஆப்த நண்பன்' என்கிறார். எனக்கு என்னமோ அப்போதே இந்தப் புது நண்பரின் போக்கு பிடிக்கவில்லை.

''சாணக்கியன் இன்னும் சாகவில்லை என்பதை உங்கள் நண்பரின் முகம் சொல்லுகின்றதே'' என்றேன்.

"சரித்திரத்தில் சுவைமிக்க பகுதி தொடர்ந்துதான் நடக்கட்டுமே, பகவதி" என்ருர்!

இவர்தான் இருக்கிருரே, எடுத்ததற் கெல்லாம, எதிர்ப்பவனே பரிசு தரும் வகையில் பதில் தருவதற்கு! அதனல் யாருக்குத்தான் என்ன பயனே? பேசினல் போதுமா?

வாழமாட்டேன் என்கிருரே. வாயாடி வக்கீலுக்கு, வாயில்லாப் பூச்சியாக வாழும் உழவன்தான் நித்திய பிரம்மா என்பதை அவரிடம் கோபத்துடன் சொல்லி விட வேண்டும் போல் எனக்குத் தோன்றியது. சேச்சே! அறியாப் பருவத்திலேயே பூப்பந்தைக் கூட பலமாக அவர்மீது எறியாதவளா, இப்படிக் கேட்பது என்று விட்டு விட்டேன்.

என்னுடன் படித்த பெண்களுக்கெல்லாம் தாலாட்டுப் பாடலே காரியார்த்தமாகப் பாடும் காலம் வந்து விட்டது!

அவர்களிடம் இறைவனே தானுக வந்து "ஏதேனும் வரம் வேண்டுமா" என்று கேட்டாலும், "தேவையில்லே! திரும்பிச் செல்லும், உமக்கு என்ன வீடு வாசல் கிடையாதா! வெளியிலேயே அலேகிறீரே" என்று கேட்டு விடுவார்கள் போலிருக்கிறது!

அன்றெருநாள்!

என் பழைய சிநேகிதி கோகிலாவை கண்டேன். "ஏனடி வீட்டுக்கு வருவதில்லே, நீ கொஞ்ச நேரமாவது வந்து போகக் கூடாதா" என்று கேட்டேன். வந்தாள்.

இருந்தாள். புறப்பட்டாள். "என்னடி அதற்குள்ளே" என்றேன்.

"கொஞ்ச நேரமாவது வந்து இருந்து போ" என்று தானே சொன்னாய், பகவதி! "கொஞ்ச நேரம்" ஆகி விட்டதல்லவா, நான் போகிறேன் என்றாள், நயமாக, நளினமாக, நாணமாக! "கொஞ்ச" என்ற வார்த்தையை கொஞ்சம் நிறுத்தி, அப்புறம் "நேரம்" என்பதை உச்சரித்தாள். ஓடிவிட்டாள். கொஞ்ச, நேரமாகி விட்டதாம்! கொண்ட கணவன் காத்திருப்பானாம்! அதை எவ்வளவு அழகாகக் கூறுகிறாள்! ஊம்! பாக்யசாலி! அவளை வாழ்த்தினேன். உடனே ஒரு யோசனை வந்தது. அவளை வாழ்த்த நான் யார்? என் வாழ்த்துக்கு வலிமை ஏது? மேலும் இப்பொழுதுதான் அவள் வாழ்கிறாளே! வாழாத நான் போய் அவளை வாழ்த்துவதா? சீச்சீ! கண் டாக்டரை குருடன் வாழ்த்துவது?

அவள் மீது எனக்குப் பொறாமைதான் வந்தது. என்ன செய்வாள்? அவள் நிலையில் நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பேன். அவள் கண்டாளா, இந்த வீட்டு விந்தையை! என்னையும் அவளைப் போலவே நினைத்துக் கொண்டாள்—அப்படித்தான் நினைக்க முடியும்!

காதலித்தவனையே கைப்பிடித்து வாழுகிறேனாம்! அவள் கண்டாளா எங்கள் இருவரின் உண்மை நிலையை! வரவர எனக்கு நன்றாக நடிக்க வருகிறது என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், கோகிலா என்னை ஏன் அவரது 'இல்லாள்' என்று நினைக்கப் போகிறாள்?

'அந்த' எண்ணங்களும் சில வேளையில் எனக்கு வரத்தான் செய்கின்றன. எரித்துவிட முயலுகின்றன! எரிக்கட்டுமே, என்னைச் சாம்பலாக்கும் வரை எரிக்கட்டுமே! பொறுக்கலாம்! ஒருவேளை அந்த எண்ணங்களுக்கு சாம்பலாக்கும் வரை என்னை எரிக்க முடியாதிருந்தாலும் இருக்கலாமல்லவா?

எரித்தால் சாம்பலாகத் தயார்! எரிக்காவிட்டால் இப்படியே இருக்கவும் தயார்! அக்கரையானாலும் சரி, இக்கரையானாலும் சரி! பாலம் போடாத ஆற்றங்கரையில் நிற்பவன், இப்படிப் பேசுகிறேன்; ஆச்சரியம் தான்!

'அதை' முருகன் விரும்பவில்லை. ஆகவே நானும் விரும்பவில்லை. என்னை யறியாமல் விருப்பம் வந்தாலும் அதை வெறுப்பாக மாற்றி மாற்றிப் பழகிவிட்டேன். அவர் என்று விரும்புகிறாரோ அன்று நானும் இசைந்துவிட்டால் போதும் என்றிருந்தேன்.

இரவு கண்விழித்திருந்து பக்கம் பக்கமாக எழுதுவார். படிப்பார். நான் பணிவிடைகள் செய்வேன்...... அதிலிருக்கும் சுகம், நிம்மதி, 'அதில்' கூட இருக்காது என்றும் நினைக்கலானேன்.

அன்று அவர் வெளியே போயிருந்தார். நான் ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மேஜையிலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களின் மீது, ஒரு பூனை விழுந்து பாய்ந்து சென்றதால் புத்தகம் ஒன்று கீழே விழுந்தது. அதை எடுத்தேன். தற்செயலாகத் திருப்பிப் பார்த்தேன். அது

சிலப்பதிகாரம்! முதற் பகுதிகளைப் படித்தேன். கண்ணகியின் பொறுமையை மனதுக்குள்ளேயே புகழ்ந்து கொண்டேன். முடிவைப் படித்தேன். கண்ணகியின் ஏமாளித்தனத்துக்குப் போய், பொறுமை என்று பெயர் சூட்டிவிட்டோமே என்று அந்தப் புத்தகத்தைக் கொண்டே என் தலையில் இரண்டு மூன்று தடவைகள் அடித்துக் கொண்டேன்.

மறுபடியும் குழப்பம்!

மனப் போராட்டம்!

ஆகவே, இதய அரங்கிலே விரக்தி! அதை தொடர்ந்து விதி! வந்தன! நடந்தது, நாடகம்!

ஊம்! எப்படியோ கடைசியில் அங்கே கறுப்புத் திரைதான் விழுந்தது.

மறுநாள்......

அவரிடம் கேட்டேன்.

"சித்திரத்தில் இருக்கும் புத்தம் புது மலர் போன்றது தானே, நமது இன்றைய வாழ்க்கை"

"ஆம், பகவதி, ஆம். அதுதான் அழியாது. கைகளில் சிக்கி, மூக்கினைத் தாக்கி, கருத்தினை மயக்கி அதற்கெல்லாம் தண்டனையாக அன்றே உதிர்ந்து சருகாகும் உண்மையான மலரைவிட, ஓவியமலர் உயிரானது, உயர்வானது, ஏன் உண்மையான மலரே ஓவியமலர் தான் என்று எனக்குத் தோன்றுகிறது, பகவதி..."

"அப்படியானல் சரிதான்" என்றேன்-பெருமூச்சு விட்டேன்.

"பெருவெள்ளங்களின் முதன் முதல் உருவம், சிறுதுளிகள். அதுபோல பெரும் புயல்களின் முதன் முதல் உருவமும் சின்னஞ் சிறு பெருமூச்சுகள் தான்" என்ருர், கவலையுடன்!

"ஆ..."

"ஆம், பகவதி..."

"நான் எதுவும் தவருகப் பேசி விட்டேஞ முருகன்?"

"தவறு என்பதற்கும், சரி என்பதற்கும் அவ்வளவு அதிக தூரம் கிடையாது பகவதி! ஒரு இதயம் எவ்வளவோ, அவ்வளவுதான்! பயப்படாதே!"

"உங்களுக்கு......?"

"எனக்குத் தெரியும். ஒன்றுமே தெரியாத குழந்தைகளாகத் தொட்டிலில் கிடந்து 'ஊங்' கொட்டி, மழலை பயிலலாம் என்கிறேன், நான்!!!...வேண்டாம், ஒரே தொட்டிலை ஆட்டித் தாலாட்டுப் பாடும் தம்பதிகளாக வேண்டும் என்கிருய், நீ!!!

நீ நினைப்பதில் நீ இருக்கிருய், உலகமும் இருக்கிறது! நான் நினைப்பதில் நான் மட்டும்தான் இருக்கிறேன், நீ கூட இல்லை!

பகவதி! உன் முருகன் ஒரு அதிசயமான குற்றவாளி. குற்றங்களைச் செய்துகொண்டே மன்னிப்பும் கேட்கிருன். அவனை மன்னிக்க மாட்டாயா?..."

என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவ ரது கண்கள் கண்ணீரைக் கக்கின! என் கைகளால் துடைத்துக் கொண்டே "ஏன் இப்படி குழந்தை மாதிரி அழுகிறீர்கள்?" என்றேன். போட்டு வைத்திருந்த காப் பியைக் கொண்டு வந்து கொடுத்தேன். குடித்தார். பிறகு நாற்காலியில் அமர்ந்தார். படிக்கவும் இல்லை! எழு தவும் இல்லை! ஏதோ திடீர் மாற்றம்! ஏதேதோ நகைச் சுவை பேசினர்! பிறகு தன் படுக்கையில் போய் படுத் துக் கொண்டார்.

சபலங்களைச் சிருஷ்டி செய்யும் அந்த அர்த்த ராத் திரியில் அன்றைக்கும் வழக்கம் போல் எனக்குப் பயம் வந்துவிட்டது. உடனே பழக்கம்போல் என் படுக்கை யில் போய் நான் படுத்துக் கொண்டேன்.

இப்படியே......!

எத்தனையோ இரவுகள்...!

எத்தனையோ சம்பவங்கள்......!

ஆனல்......?

விஷயத்திலும், பயனிலும் மட்டும் வித்தியாசம் வந்தபாடில்லை!

## அன்று நடந்தது

எப்படியோ நான் நினைத்தது நடந்தது என்பதில் எனக்கு ஒரு சந்தோஷம்.

அன்று ஒரே படபடப்புடன் வந்தார்.

"என்ன" என்றேன்.

"அயோக்கியப் பயல்" என்ருர்.

"அவர்தானே" என்றேன்.

"ஆமாம்! அந்தக் குமாஸ்தாப் பயல்தான்! கேள் பகவதி கேள். அவன் மிகவும் கெட்டவன். இப்போது தான் கண்டு பிடித்தேன். பெற்ருேர்களுக்குப் பணம் அனுப்பமாட்டேன் என்கிருன். ஏண்டா அனுப்பவில்லை என்று கேட்டால், எனக்கு வேண்டிய சட்டை, பேன்டுக்கும், வாட்சுக்கும் எவன் பிச்சை போடப் போகிருன் என்ருன். சரி, போகட்டும், திருத்தி விடலாம் என்று நம்பியிருந்தேன். நேற்றுதான் தளர்ந்துவிட்டேன்.

கேள், நன்ருகக் கேள்! நம்ம ஊர் பார்க்கிலே தனியாக ஓரிடத்தில் போய் அவன் உட்கார்ந்திருந்தான். நான் பின்புறமாகக் கண்களைப் பொத்தலாம் என்று போனேன். அவன் எங்கேயோ ஒரே இடத்தில் வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். நான் மிகவும் கிட்டே நெருங்கினேன். நான நடப்பதால் உண்டாகும் சருகுகளின் சத்தத்தையும் கவனியாமல், அவன் அந்த ஒரே இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். நான் கண்ணைப் பொத்தும் விளையாட்டை விட்டுவிட்டு, என் விரல்களால் பின் புறமிருந்தவாறே ஒரு சொடக்கு போட்டேன். அதையும் அவன் காதுகள் கேட்கவில்லை. 'அந்த' ஒரே இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்படி என்னத்தையடா அங்கே பார்க்கிருன் என்று நானும் பார்த்தேன்..

அங்கே என்ன காட்சி தெரியுமா?

இளந் தம்பதிகள் தனியிடம் தேடி, நெருங்கியிருந்து மெதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தான் நமது கிளார்க் பெருமான் ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார், என்பதை யறிந்ததும் எனக்கு வெட்கமாகி விட்டது! "ஆ..." என்றேன். எங்கேயோ வெகு தொலைவிலிருந்த வெட்கம் என்னும் காந்தம் என்னைப் பிடித்ததும், என்னிடமிருந்து மிகவும் சமீபத்திலிருந்த அந்த தம்பதிகளையும் போய் பிடித்துக் கொண்டது...விலகிக் கொண்டனர்! நமது கிளார்க்கும் தமது பார்வையை வேறு பக்கம் விலக்கிக் கொண்டார். நான் திரும்பி என்பாடு நடந்தேன்.

"முருகன்! என்ன? வந்தே, போகிறே" என்றான்.

"நமது நட்புச் சரித்திரத்தை இந்த நாலே நாலு வார்த்தைகளில் முடித்து விடு! இதோ நானும் ஒரு வார்த்தை உதவுகிறேன். "நன்றி"—என்று சொல்லிக் கொண்டே வந்து விட்டேன்" என்று முடித்தார்!

"அப்பா..." என்றேன், சாந்தியுடன்!

"பார்த்தாயா பகவதி! இவர் ஒரு கிளார்க்! அதுவும் சர்க்கார் காரியாலயத்திலே. சமூகத்திலே அதுக்கு அசட்டுத்தனமான ஒரு மதிப்பு...சீச்சீ! எனக்குப் பிடிக்கவில்லை, இதெல்லாம்!

அந்த காந்தி மாத்திரம் அப்போது இருந்தாரானால், அந்தக் கீதையையும் அதுகூடச் சேர்ந்ததுகளையும் கொண்டு, அந்தக் கிளார்க்கைப் போன்றவர்களிடம் கொடுக்கச் சொல்லிவிட்டு, எனக்கு ஒரு புது வழி கேட்பேன்;—என்று முடித்தார்.

மௌனமாக இருந்தேன்.

"என்ன" என்ருர்.

"உங்கள் நண்பருக்காக நான் இன்று சிரிக்க வேண்டியதையும் சேர்த்து, முன்பே சிரித்துத் தீர்த்து விட்டேன்" என்று சொன்னேன்.

"குறும்புக்காரி" என்று சொல்லிக் கொண்டே என் கன்னத்தில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டினர்... ஆகா!—அவர் காட்டிய அந்த உரிமையிலே, என்னையும் நான் மறந்தேன்...கண்களை மெதுவாக மூடித் திறந் தேன்...மகிழ்ந்தேன்...எதிரே கண்ட காட்சி...?

தன் கையை நெறித்துக் கொண்டே பயத்துடன் தனியே போய் நாற்காலியில் அமர்ந்தார்.

"ஏன் இப்படி? என் கன்னத்தில் அடித்தது கை வலித்துவிட்டதா?" என்றேன், கொஞ்சலாக!

"ஆம்..."

"அப்படியா...!"

"இல்லை, பகவதி இல்லை......சும்மா விளையாட்டுக் குத் தான் வலிபோல் நடித்தேன்" என்று மழுப்பினர்.

"நம்மிருவருக்கும் வரவர நடிப்பு நன்ருக வருகிறது. என் சிநேகிதி கோகிலா அன்று கேட்டாள். 'பகவதி! காலையில்தான் கூந்தலைப் பின்னினுய். அதற்குள் கலைந்து விட்டதே......ஊம்...சரி...! கவிஞர் வீட்டில்

தான் இருந்து ஏதாவது எழுதிக்கொண்டிருக்கிருரா?" என்று காளமேகத் தமிழில் கேட்டாள்...

'ஆம்...வீட்டில்தானிருக்கிருர்' என்று பெருமிதமாகவே பதில் கூறிவிட்டேன். என் பெருமிதம் போலியானது என்பதை அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை..." என்று முடித்தேன்!

"பகவதி என்னை மன்னிக்க மாட்டாயா? இன்னும் உனக்கு தீங்கு செய்ய வேண்டியதிருக்கிறது...என்னை மன்னிக்க மாட்டாயா" என்று குழந்தைபோல் கெஞ்சினர்!

"குழம்பாதீர்கள். இப்படி உட்காருங்கள். ஏதாவது 'நல்ல' விஷயங்களைப் பற்றிப் பேசலாம். உங்களுக்கு விருப்பமில்லாததை நீங்கள் விட்டு விடலாம்... என்னைப்பற்றி யோசிக்க வேண்டாம். எங்கே போவது என்று நிழலிடம் யோசனை கேட்காதீர்கள்...நீங்கள் போங்கள்...நிழல் உங்களுடன்தான் வரும்...கவலைப் படாதீர்கள், அன்பே!

என்ன? வேறு ஏதாவது 'தூய' விஷயங்களைப் பற்றி நாம் பேசலாமா? ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். பேசுங்கள்...

சாக்ரடீஸின் குடும்பத்தை விட்டு விட்டு அவரைப் பற்றிப் பேசுவோம்!

மில்டனின் கண்களைத் தவிர பாக்கியெல்லாம் பேசுவோம்!

கம்பனின் குறிக்கோளை விட்டு விட்டு மீதி மேதையைப் பேசுவோம்!

இளங்கோவடிகளின் துறவுப் பெருமையும், பாரதி யின் பிறவிக் குலமும் நமக்கு எதற்கு? அவர்களைப் பற் றிய ஏனைய விஷயங்களை எல்லாம் பேசுவோம்!

முருகன்! கைராட்டைக் கூட வேண்டாம்! காந் தியைப் பற்றிப் பேசுவோம்..."

என்று ஒரு சிறு பிரசங்கமே செய்து அவரைச் சாந்திப் படுத்தினேன்.

"பகவதி..."

"நீங்கள் கூப்பிடும் குரலினிமை, சுவர்க்கத்துக் கத வுகளில் கட்டியிருக்கிறது என்று சொல்லப்படும் மணி ஓசையிலும் இருக்காது, முருகன்!"

மீண்டும்...!

எழுந்தார்...

"பழைய" நாற்காலியில் உட்கார்ந்தார். "பழைய" புத்தகங்களை எடுத்தார். "பழைய" படியே படிக்க ஆரம்பித்தார்!

"பழைய" என் படுக்கையில் போய் நானும் அமர்ந் தேன். "பழைய" படியே அவர் படிக்கும் காட்சியை நான் ரசித்தேன்...ஆம்......"பழைய" படியே தூங்கி னேன்!

★

கனவு எல்லாமே நனவாக முடியுமா?... அப்படி யானால், காற்றெல்லாமே உயிர் உருவம் பெற்று உலவ ஆரம்பித்து விடுமே...!

## முருகன் :

நல்ல விஷயங்களை என்றுமே பேச்சிலும், எழுத்தி லும் தான் காண முடியும் போலிருக்கிறது. ஐயோ! தூய நினைவுகளுக்கும் தூய செயல்களுக்கும் தோற்றுத் தோற்றேதான் பழக்கமாகி விட்டதோ?

அதிகமாக வேண்டாம், எவனாவது ஒருவனை இயற்கை உதாரண மனிதனாகப் படைத்து, உலகிற்கு நல்ல பாதை காட்டக்கூடாதா?

நான் பழகிய நண்பர்களாகிய அந்த வியாபாரியும் குமாஸ்தாவும், முதலில் நல்லவர்களாகத்தான் காட்சி யளித்தார்கள். கடைசியில் பிடிக்காமல் போய் விட் டதே. நான் என்ன செய்யட்டும்?

மனிதனாகப் பிறந்து அமரனாகப் போய்விட்ட மகாத் மாக்கள் முதல், மனிதனாகப் பிறந்து அரக்கனாகி மடிந்த சர்வ சாதாரணங்கள் வரை, உலகத்தோடு 'அட்ஜஸ்ட்' பண்ணித்தான் போயிருக்கிறார்கள். ஆனால் என்னால் 'அட்ஜஸ்ட்' பண்ணிப் போக முடியவில்லையே!

உலகத்தோடு "அட்ஜஸ்ட்" பண்ணிப் போவது என்பது, கொள்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக அடகு

வைப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. ஊம்! எவர் எப்படிப் போனாலும் சரி, எது எப்படி முடிந்தாலும் சரி, ஒருபோதும் நான் உலகத்தோடு "அட்ஜஸ்ட்" பண்ணி நடக்கப் போவதில்லை.

என் இரு நண்பர்களில் ஒருவன் பணத்தை தெய்வமாக மதித்தான். தெய்வத்தை நினைத்தவன், உடனே அதற்கு அடிமையாகி விடுவது போல, அவனும் பணத்துக்கு அடிமையாகி விட்டான்...அந்தக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை...அதனால் தான் விட்டு விட்டேன்.

தாயைத் தவிர குழந்தைக்கு வேறு கதியே கிடையாது. அந்த நிலையிலும் தாய், நிகரற்ற அன்பை தன் குழந்தையிடம் செலுத்துகிறாள். இதுபோலவே, வேறு கதியே யில்லாதவர்களுக்கு உதவி புரிய வந்திருக்கிறேன் என்று சொல்லுபவர்களும் நடந்து கொள்ளக் கூடாதா?—என்ற ஒரே ஒரு கேள்வியில் மட்டும் நான் ஒரு பேராசைக்காரன் தான்!

இரண்டாவது நண்பன், குமாஸ்தா! தன்னை, தன் வாழ்வை, தன் இன்பத்தை, தன் ஆயுளை தன் சம்பளத்துக்குள்ளேயே தன் மேசை நாற்காலி மீதிலேயே கண்டு கொண்ட கண்ருவியான சாமர்த்தியசாலி! போலிக் கௌரவங்களில் லயித்துப் போனவன். அவனிடம் எப்படி நானும் 'அட்ஜஸ்ட்' பண்ணி நடந்து கொள்ளுவது?...மேலும் வீதியில் காணும் பெண்களையெல்லாம் அவன் ஓரளவுக்குச் சகோதரிகளாகக் கருதினலும் சகித்துக் கொள்ளுவேன்—அவர்களிடம் போய் அளவுக்கு மீறிய 'சகோதரத்வம்' கொண்டாடத் துணி

கிறானே! அவனைக் கைவிட்ட காரணங்களை எல்லாம் தாங்கி நிற்கும் கடைசிக் காரணம் இதுதான்!

அதெல்லாம் போகட்டும். எனக்கு இப்போது கவலை என்பதன் முழுப் பொருளையும் உணர முடிகிறது: பகவதிக்கு உடல் நிலை சரி இல்லை. டைபாய்டு ஒரு வாரமாயிற்று! மிகவும் கஷ்டப்பட்டாள். எவ்வளவோ பார்த்தும் குணத்துக்கு வருவதாக இல்லை.

அவளிடமிருந்த சிறு சிறு நகைகளும் அவளுக்கு சிஷ்ருஷை செய்ய ஆரம்பித்தன. தெளிவான பாஷையில் சொல்லுவதாயிருந்தால் தன்னைத் தியாகம் செய்தன!

எங்களை வாழ்த்தி வந்த அந்தத் தையல் மிஷினும் கவலை பொறுக்க மாட்டாமல், வீட்டை விட்டு வெளியேறி, ஒரு மருந்துக் கடையில் போய், 'அடகு' என்னும் அறையில் உட்கார்ந்து கொண்டது.

மிச்சமாக இருப்பது, முதலாக இருந்த நாங்கள் தான்! என்ன செய்வது?

பணத்தின் அவசியத்தை உணர்ந்தேன். உழைப்பின் அவசியம் தெரிந்தது. புறப்பட்டேன். எங்கெங்கும் தேடினேன். எல்லோரும் இன்றைய உலகில் எங்கும் தேடிக்கொண்டிருப்பதைத் தான் நானும் தேடினேன். எல்லோருக்கும் கிடைத்த பதில்தான் எனக்கும் கிடைத்தது—வேலை காலி இல்லை!

ஒருநாள்......!

விறகு வெட்டுபவர்களிடம் போய், நானும் வெட்ட வருகிறேன் என்றேன். "போங்க சாமி! கேலி பண்ணுதீங்க" என்று சொல்லி என்னை அவர்கள் கௌரவக் குழியில் தள்ளிவிட்டார்கள்.

"ட்யூஷன் சொல்லித் தரட்டுமா" என்று ஒருவர் வீட்டில் போய் கேட்டேன். "எங்க வீட்டில் பெண் பிள்ளைகள் தானே இருக்கின்றன. பாவம் என்ன செய்வது? உங்கட்கு வேலை தர முடியாததற்கு வருந்துகிறேன்" என்று கலை கலந்து பேசினர்.

அதாவது, நான் ஒழுக்கம் கெட்டவனும். ஊருக்கு வெளியே ஒரு அனதைப் பெண்ணோடு தனியே வாழ்பவனும். அதைச் சொல்லாமல் சொல்லி கொல்லாமல் கொல்லுகிறார். உண்மையான ஒழுக்கத்தை விட பொய்யான ஒழுக்கத்திற்குத்தான் உண்மையான மரியாதை காட்டுகிறாய்; அட உலகமே!

"அந்தோ! ஒழுக்கமே! உனக்காக இரங்குகிறேன். விலாசம் மாறி வாழ்கிறாயே! அதை விட்டுவிடு. உதடு, உனக்கு ஏற்ற இடமல்ல; உள்ளத்துக்குள் போ! அதுதான் நீ வாழ, வளரத் தகுந்த இடம்! உன் குடும்பமே அங்குதான் வாழ்கிறது. பிறரையும் நீ அங்கிருந்தால் தான் வாழ்த்த முடியும்..." என்று உண்மையான ஒழுக்கத்துடன் மானசீகமாகப் பேசினேன்.

அப்புறம்?

ஐயோ! இதென்ன! புத்தி இப்படிப் போகிறது. என் பகவதி டைபாய்டு வந்து அவஸ்தைப் பட்டுக்

கொண்டிருக்கும் போது, நான் ஒழுக்கத்தின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேனே என்று எண்ண அந்தச் சிந்தனைகளை அப்படியே விட்டேன்!

கண்ட இடங்களில் எல்லாம் கடன் வாங்க ஆரம்பித்தேன். ஒரு மாதிரியாக பகவதியின் உடல் நிலை சுகமடைந்தது. ஆயினும் உடல் தேற, இன்னும் பல மாதங்களும், பணமும் தேவைப்பட்டன. என்ன செய்வது என்றே புரியாமல் குழம்பினேன்......

எங்கள் ஊரில் பிறந்த ஒருவன் சினிமாத் துறையில் ஈடுபட்டு பெரிய நடிகனாகி, நல்ல செல்வாக்குடன் தற்போது இங்கு திரும்பி வந்திருந்தான். அவனும் நானும் பால்ய நண்பர்கள். வாஞ்சை அதிகம். இன்னும் அப்படியே! அழைத்தான். சென்றேன். பாராட்டினான். ஏற்றுக்கொண்டேன். என் இலக்கியங்களைச் சாகாதவை என்றான். நாளைய உலகின் நாயகன் நீதான் என்று நாக்குளிர, நான் குளிர, நயம் கலந்து பேசினான்; ரெம்ப நன்றாயிருந்தது.

அவனுக்குத் தாய் இட்ட பெயர் வைத்திய நாதன். அவன் அந்தப் பெயரை தொட்டிலிலேயே கழற்றி எறிந்து விட்டு தனக்குத் தானே 'வசந்தன்' எனும் புனைப் பெயரை அணிவித்துக் கொண்டான். சிறு வயதிலேயே யாருக்கும் கட்டுப்படாதவன். வசீகரமானவன். எதிலும் துடிதுடிப்பாக நிற்பான். அவனது வீட்டாருடன் சண்டை போட்ட எதிர் வீட்டுக்காரர்கள் ஒருமுறை இவனை ரசித்து, எடுத்து, முத்தமிடத்

துணிந்த போது, காறி உமிழ்ந்து விட்டு ஓடி வந்தானும்! இது கிடக்கட்டும்! சிருங்கார ரசம் அவனது சின்ன வயதுச் செயல்களிலேயே ததும்பி நின்றது! எழுதப் போனல், நமது 'அருமை'யான 'கிருஷ்ண லீலை'களுக்கு இருக்கும் கிராக்கி போய் விடும்!

படித்துக் கொண்டிருந்த வசந்தன் திடீரென்று மறைந்து, பல ஆண்டுகளாக அஞ்ஞாத வாசம் புரிந்து விட்டு இப்போது முன்வந்து நிற்கிறன். முன்னேறி விட்டேன் என்கிறன். நடிகனும். பேரும் புகழும் பெற்றுவிட்டானும். அவனை என்ன சொல்ல...? பெரிய பெரிய தலைவர்களின் பெயர்களை விட தினசரிப் பேப் பர்களில், வசந்தன் பெயரே ஓசந்த முறையில் அச் சிடப் படுகிறது!

ஒரு விஷயம்!

தொட்டிலை விட்டு தக்க பருவம் வந்ததும் தாயார் கையினல் இறங்கி அவளது ஆசியுடன் வெளியுலகம் புகுந்தவனல்ல, வசந்தன்! தொட்டிலை விட்டு எட்டிக் குதித்து, தூய தாயைத் "தூ" வென விரட்டி வெளியு லகம் போனவன். அவன் வாழ்கிறன், வாழ முடியாத வர்களை வாழ்த்தும் வன்மை கூட அவனுக்குத் தான் இருக்கிறது! விந்தை!

அடங்காதவர்கள் உலகத்திற்கே கல்லறை கட்டி, உலகத்தை அதில் அடக்கம் செய்து விடுகிறர்கள்! அடங்குபவர்களையோ, உலகம் கல்லறை கட்டி, அதில் அடக்கம் செய்து விடுகிறது!

பரிதாபம்! பரிதாபம்!! பிரளயம் தோன்றும் வரை பரிதாபம்!!!

அறிவு என்னை வசந்தனை விட்டுப் பிரிக்க முயன்றாலும், என் பொருளாதாரக் கஷ்டம் அவனிடம் நட்பு கொள்ளும் நிலைமையைப் பலவந்தமாக உண்டாக்கி விட்டது! ஒருவேளை, உலகத்தோடு நாமே "அட்ஜஸ்ட்" பண்ணி நடக்கிறோமோ என்ற பயம் வேறு!

என்ன செய்ய...!

பகவதி படுக்கையில்...!

அநியாயம், நியாயமாக அவதாரம் எடுக்கும் நேரம் அது!

அவன் தரும் பணம், பகவதியின் உடலைத் தேற்ற உதவின. அவன் தரும் பணம் எனக்கு உணவாகியது! அவன் தரும் பணம்தான் இன்று எனக்கு எழுதும் வசதிகளையும் தந்தது!

வசந்தனைப்பற்றி நேற்றுதான் ஒரு பெரியவரிடம் கேள்விப் பட்டேன்:

மிகமிக ஒழுக்கம் உள்ளவனும்! மேதையாம்! கொட்டிக் குவித்துக் கூப்பிட்ட நடிகைகளையே, எட்டி நில், எட்டிக்காயே என்று சொல்லி விரட்டியவனும்! வருமானத்தில் பாதி அவனை வள்ளல் ஆக்கவே உதவுகிறதாம்! புகழ் முழுவதுமே, மற்றோருக்கு அவன் தரும் ஆதரவாகப் புத்துருவம் எடுத்து விடுகிறதாம்!

நல்ல நடிகன்! புத்தி—பொருள்—புகழ்—அழகான சங்கமம்! அற்புதமான கூட்டுறவு! மகிழலாம், புகழலாம், வாழ்த்தலாம்!

சினிமாக்காரர்களை நினைத்தால், "எத்தனையோ" பங்களாக்கள், "எத்தனையோ" கார்கள், "எத்தனையோ" வகை ஆடைகள், "எத்தனையோ" வாட்சுகள்...பெண்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட...இங்கே "எத்தனையோ" என்ற வார்த்தையை உபயோகிக்கலாம்! ஆனல் வசந்தனிடம் மட்டும் அப்படிப் பேச முடியாதாம்!

வெள்ளை உள்ளமாம், ஆயினும் வீழாத வீரமாம்! ஆகா! வயது இருபத்துநாலு தான்! அதற்குள்ளேயே இமயத்தைச் சிறிய குன்றம் ஆக்கிவிட்டானே!

எனக்கு ஒரு எண்ணம், சில நாட்களாக. நான் என்ன செய்யட்டும். அதாகத் தோன்றிவிட்டது.

ஊற்றுநீர் தானகப் பொங்கி வருகிறது; ஏன் வருகிறதோ தெரியாது. வருகிறது அவ்வளவுதான் சொல்ல முடியும்!

என் நல்ல உள்ளம் சொல்லும் இந்த எண்ணம், செயல் உருவம் எப்போது பெறும் என்ற ஏக்கமே எனக்கு வந்து விட்டது. அந்த அளவுக்கு என் கருத்தில், எனக்கு நம்பிக்கை. இன்னும் சொல்லப் போனல், அந்த எண்ணம் எனது லட்சியமாகவே ஆகிவிட்டது எனலாம்!

நானோ ஏழை! வாழும் வசதி யற்றதுகூட குற்ற மல்ல; வாழும் ஆசையும் தேவைப்படும் அளவுக்கு என்னிடம் இல்லையே! பாரபட்சம் இல்லாமல், போதை இல்லாமல், சொல்லப்போனால், உண்மையான காதலர்களாயினும் ஒரு நாளைக்கு மேல் பட்டினி கிடப்பது கஷ்டம்தான் என்ற கருத்தே உதயமாகும். பட்டினிக் காதலர்கள் இட்டுக் கொள்ளும் முத்தத்துக்கும், சாப்பிட்ட காதலர்கள் இட்டுக் கொள்ளும் முத்தத்துக்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது! வையகத்துக்குப் பயப்படாத காதலர்களாக இருக்கலாம்; ஆயினும் அவர்களது வயிற்றுக்காவது பயப்பட்டுத்தான் ஆகவேண்டும். வையகத்தின் ஆசி ஆடம்பரமானது; வயிற்றின் ஆசி அவசியமானது என்றாலும் தவறில்லை!...இந்த என் கருத்து காதலின் புனிதத்துவத்தைப் பாதித்து விடுமோ என்ற பயமும் எனக்கு இருக்கத்தான் செய்கிறது!

பகவதி என்னை விரும்புகிறாள். இதென்ன! சின்னஞ் சிறு வயதில், அவள் அம்புலியைக் கூடத்தான், விளையாடுவதற்காக கையில் பிடித்துத் தரும்படி என்னிடம் கெஞ்சிக் கூத்தாடினாள். நடந்ததா?...நடக்குமா? கனவு எல்லாமே நனவாக முடியுமா? அப்படியானால் காற்றெல்லாமே உயிர் உருவம்பெற்று உலவ ஆரம்பித்து விடுமே!

நான் எங்கோ இருக்கும் ஒரு தனியுலகை விரும்புகிறேன். அங்கேயே பகவதியும் வர விரும்புகிறாள். அந்த உலகத்தை அடையும் முயற்சியில் நான் ஒரு வேளை பலியாக நேரிட்டால்...பகவதி?

அதற்காகத்தான் நான் அந்த முடிவு செய்தேன். அதாவது, பகவதியும் வசந்தனும் தம்பதிகளாக வேண்

டும். ஆபத்தான நேரங்களில் கூட பகவதியிடம் நான் விலகி யிருந்தே அன்பு செலுத்தினேன். அவளும், என்னை, என் கொள்கையை, என் பேச்சை, என் போக்கை அனுசரித்து நடந்தாள். ஆனால்...என் எண்ணமெல்லாம், அவளுக்கு ஏற்ற ஓர் உத்தமனைத் தேடுவதிலேயே லயித்திருந்தது. அதற்காகவே—அந்தத் தேர்ச்சிக்காகவே—முன்பு இருவரை நட்பு கொண்டேன். அவர்கள் உலகத்திற்காக ஒரு முறை சாகு முன்பு, எனக்காக ஒரு முறை செத்துவிட்டார்கள்! இப்போது என் லட்சியம் வசந்தன் உருவில் வந்து நிற்கிறது. இது பூர்த்தியானதும் "வசந்தன்—பகவதி" தரும குழந்தையாக என் லட்சியம் உருவெடுக்கப் போகிறது!

இன்று......என் கண்மணி பகவதியை நான் வளர்த்த தமிழ்ப் பெண் பகவதியை—கன்னியாகவே காலம் கழிக்கும் பகவதியை-தனியிடம் அழைத்து, துணிவுடன் என் முடிவைச் சொல்லப் போகிறேன். என் மகிழ்வுக்காக அவள் எந்த நல்ல காரியத்திற்கும் தயாராக இருப்பாள் என்பதை நினைக்க நினைக்க, வெற்றி என்னைத் தானகத் தேடி வருவதுபோல் இருந்தது! எனது அவர்கள் வாழட்டும்! வாழ்வார்கள்! வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன், இன்னும் வாழ்த்துவதற்காகவே வாழப்போகிறேன்!

அவர்களை அங்கே திருப்பிவிட்டு நான் என் இலக்கியங்களையும், அனுபவங்களையும் கொண்டு வருங்காலத் தமிழ் உலகிற்கும், தரணிக்கும் ஏதாவது ஒரு நல்ல வழி காட்டவேண்டுமென்று விரும்புகிறேன்...

இப்படி யெல்லாம் எண்ணிக் கொண்டே என் இதயத்தின் உருவமாக என் கண்முன் காட்சியளிக்கும் பகவதியிடம் பேசி நல்லதோர் முடிவு காண வீட்டை நோக்கி நடந்தேன்!

பகவதி! உனக்குக் கற்புநெறி கற்பித்த வேதப் புத்தகங்களைத்தான் எடுத்துக் கொள்ளேன். அது ஒருவன் கையில் மட்டும் தானா தவழுகிறது?

★

பூவை எடுத்துக்கொள். ஒரு பூ, ஒரே ஒரு மூக்குக்கு மட்டும் தானா மணம் தருகிறது...?

## பகவதி:

சினிமாக்காரர்களை ஒரே ஒருமுறை நினைத்த உள்ளம் கூட, மனோதத்துவ டாக்டர்களால் ஆபரேஷன் செய்யப்பட வேண்டும் என்பது என் கொள்கை. இந்த எனது கொள்கை எல்லா சினிமாக்காரர்களுக்கும் பொருந்தாது என்பதும் எனக்குத் தெரியும்!

எல்லாரும் இயற்கையிலேயே ஆரம்பத்தில் குழந்தையாக இருந்திருப்பது போல என் முருகனுக்கு வரும் நண்பர்களும் ஆரம்பத்தில் இயற்கையிலே நல்லவர்களாகத் தான் இருக்கிறார்கள். போகப்போக அவர்களும் சுயநலத்தை லட்சியமாக வைத்து, சூழ்ச்சிப்பாதையில் செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள்.

வசந்தனை, முருகன் மட்டுமல்ல, நானுமே ஆரம்பத்தில் நல்லவர் என்றுதான் நினைத்திருந்தேன். நினைத்ததென்ன, நல்லவர் என்று உறுதியே செய்திருந்தேன். போகப் போகத்தான் புரிந்தது. சீச்சீ! லௌகீக உலகில் எல்லாப் பொருளையும் அடைய முடிகிறது; அப்புறம் அவைகள் கசந்தும் போய்விடுகின்றன. இந்த இரு நிலையும் பாரமாத்தீக உலகில கிடையாது. பாரமாத்தீகத்தின் மதிப்புக்கே இதுதான் மூலகாரணமாக இருக்கலாம் போலும்!

அறிவுக்கு அறிவு! அன்புக்கு அன்பு! நட்புக்கு நட்பு! தகுதிக்குத் தகுதி! முருகனுக்கு வசந்தன்! ஆம்... அவ்வளவு பொருத்தமான நண்பர்கள்தான்!

விடிய விடிய பேசிக்கொண்டிருந்தாலும் அவர்கள் பேச்சில், விரோதிக்குக் கூட விரசம் தட்டாது.

தங்களது பால்ய நினைவுகளைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, கேட்கும் வயோதிகர்களும் வாலப்பருவம் எய்துவர்:

இவர்தான் தங்களுக்கு நண்பராகத் தகுதி பெற்றவர் என்று நான் முருகனிடம் எத்தனையோ முறை சொல்லியு மிருக்கிறேன்—மகிழ்ந்திருக்கிறார்.

அத்தகைய புகழ் மொழிகளுக்கெல்லாம் பாத்திரமாக இருந்தவர்......சாதாரணமான ஒருநாளை திருநாளாக்கி விட்டார்!

முருகன் பக்கத்து ஊர் உயர்நிலைப் பள்ளியில் ஏதோ ஒரு சொற்பொழிவுக்காகச் சென்றிருந்தார். பேசுவதற்காக அல்ல, தமக்குத் தெரிந்த ஒரு பெரியவர் அன்று அங்கே பேசவிருக்கிறாராம், அவரைக் காண மதியம் போனவர் இரவு மணி 9-ஆகியும் வரவில்லை. ஏன் வரவில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, கதவு தட்டும் சப்தம் கேட்டது. அன்புக் கோபத்துக்கு என்னை நானே தயார் செய்து கொண்டு அவசரமாக ஓடிக் கதவைத் திறந்தேன்.

அங்கே...?

அன்னியருமில்லை........வந்த நேரமும், நிலையும் அவரை அன்னியராக்கி என் கண்ணில் காட்டின.

நல்லவர்தான்......நகைத்த நகைப்பும், நடந்து உள்ளே வந்த தினுசும், அவரை நம்பத் தகாதவர் என்று நன்ருகக் காட்டிவிட்டன!

வந்தவர், வசந்தனே!

"பகவதி" என்று கூப்பிட்ட தொனி யழகிலே, தாம் முருகனைவிட அதிக உரிமையுடையவர் என்பது போன்ற பொல்லாத பொருள் புதைந்திருந்தது. உள்ளே வந்ததும் முதல் வேலையாகக் கதவைச் சாத்தி, தாழிட்டு விட்டார். என்னிடம் நெருங்கி வந்து..."பகவதி! தாகம்" என்ருர்!

அடுக்களைக்குச் சென்று தண்ணீரைக் குடத்திலிருந்து டம்ளரில் சாய்த்தேன். குடத்துத் தண்ணீர் பூராவும் கீழே தரையில் சிந்தியதைக் கூட, குடத்தை நிமிர்த்து வைக்கும் போதுதான் உணர்ந்தேன். கொண்டு கொடுத்தேன். கொஞ்சமாக ருசி பார்ப்பவர் போல் குடித்துவிட்டு, பாக்கியை அப்படியே மேஜையில் வைத்தார்!

"தாகம் என்பதை உவமானமாகத் தான் சொன்னேன், பகவதி"

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?"

"எப்படிப் பேச வேண்டும்? ஆரம்ப நாள்களிலே ஆகாத விஷயங்களும் ஒன்றிரண்டு இருக்கத்தான்



...ITY EXTENSION...

செய்யும். கலங்குவிடாதே, கண்ணே! எல்லாம் போகப் போக சரியாகிவிடும்!"

"இதென்ன அநீதி, போய் விடுங்கள்!"

"போகச் சொல்லாதே, பகவதி! சாகவேண்டு மானல் சொல்லு, சாகிறேன்! நீயும் முருகனும் நல்ல தம்பதிகள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். நான் என்ன செய்யட்டும்?... எங்கள் நட்புக்கு ஆபத்து, உன் உருவத்தில் தான் வந்திருக்கிறது என்பதை உன்னைப் பார்த்த அன்றே முடிவு கட்டிவிட்டேன் ஆரணங்கே!"

"ஆ......!"

"ஏன் பயப்படுகிருய், பகவதி! 'வால்கா முதல் கங்கை வரை' என்ற புத்தகம் படித்திருக்கிருயா?"

"சீ...போகிருயா? இல்லையா?"

"பகவதி! என் சுய உருவம் தெரியாமல் தள்ளு கிருய். என்னை யாரும், எங்கிருந்தும், எப்பவும், 'போ' என்றும் 'வா' என்றும் சொல்ல முடியாது. எனக்கு நானே எல்லாம். மேலே சொர்க்கம் இருப்பது உண்மை யானல், அதைக் கூட ஆக்ரமிக்கும் அளவுக்கு என் னிடம் செல்வம் இருக்கிறதம்மா, ஏன் தவிக்கிருய்?

"பாவி! நல்லவன் போல் வேஷம் போட்டு..."

"என் தொழிலே வேஷம் போட்டு நடிப்பது தானே, பகவதி! இவ்வளவு கூட தீர்க்க தரிசனமில்லா

தவர்கள் இப்படித்தான் திணற வேண்டியது நேரிடும். யோசித்துப் பார்...! பகவதி...!

உனக்குக் கற்பு நெறி கற்பித்த வேதப் புத்தகங்களைத் தான் எடுத்துக் கொள்ளேன். அது ஒருவன் கையில் மட்டும் தானு தவழு கிறது?

பூவை எடுத்துக்கொள். ஒரு பூ ஒரே ஒரு மூக்குக்கு மட்டும் தானு மணம் தருகிறது.

புரிந்து கொள்ளம்மா!

இதனுலெல்லாம் புத்தகங்களுக்கும் பூக்களுக்கும் உள்ள புனிதத்வம் போய் விடுவதில்லையே! நீயும் ஏன் இவைகளைப் பின்பற்றக் கூடாது?..."

மௌனமாக நின்றேன்.

மீண்டும் தொடர்ந்தான்.

"பகவதி அழகான பொருள்களில் எதை வேண்டு மானுலும் எடுத்துக் கொள். அவைகள் எல்லாமே பொது வுடமையாக உலகில் இருக்கும் போது, பெண் வர்க்கம் மட்டும் 'பிகு' பண்ணுவது அநாகரிகமாக இல்லையா? நீயே சொல்லு!"

"அறிவு கெட்டவனே! போகிருயா? காறி உமி ழுடட்மா"

"சொல்வதைக் கேள். பாவம், முருகன் ஒரு கன வுலக வாசி. நானே நனவுலக வாசி. சாய்ந்த அச்சிலே

சுழலுகிற உலகத்தை நேரே நிமிர்த்து வைத்துவிடப் போகிறவன்போல் பிதற்றித் திரிகிறான், அவன்! நீயோ, வைத்தியம் தேவையாயிருக்கும் அவனைப் போய் வாழ்த்திக் கொண்டிருக்கிறாய். அன்பே! அவனை நம்பாதே! வா என்னுடன்! இயற்கை மனிதனுக்கு என்று தந்த எல்லாவற்றையும் நாம் சுவைக்கலாம்..."

இந்தத் தினுசில் இன்னும் என்னவெல்லாமோ புலம்பிக் கொண்டே என்னை நெருங்கினான். அவ்வளவு தான் தெரியும்......

.........

அப்புறம் கொஞ்ச நேரம்தான் கழித்திருக்கும்!

என் முகத்தில் தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. இலேசாக கண்களை விழித்துப் பார்த்தேன்...

ஆ...முருகன்...!

"எப்போது வந்தீர்கள்?"

"இப்போது தான்"

"நீங்கள் வரும்போது..."

வேறு யாருமில்லை பகவதி, நீ மட்டும்தான் தனியாக மயங்கிக் கிடந்தாய்! கதவு திறந்து கிடந்தது...... ஆமாம்...ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"

"அப்புறம் சொல்கிறேன். எங்கும் போய் விடாதீர்கள். என் அருகிலேயே இருங்கள்"

இவ்வளவுதான் அன்றிரவு. வேறு பேச்சு எதுவும் எங்களுக்குள் கிடையாது. படுத்திருந்தேன். அப்படியே அவரும் அருகில் இருந்து விட்டார்.

சேவல் கூவியது!

வானம் சிவந்தது!

மலர்கள் சிரித்தன!

என்றும் போல் என் தினசரிப் பணிகளைத் துவக்கினேன். நேற்றைய நிகழ்ச்சியைப் பற்றி அவராக ஒரு வார்த்தை கூட எடுக்கவில்லை.

நானும் சொல்ல முடியாதிருந்தேன். ஆயினும் என் மனச் சலனத்தை மட்டும் உணர்ந்து கொண்டு "என்னமோ பகவதி, நீ ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறாய்?" என்று கேட்டார்.

ஒன்றுமில்லை என்று மழுப்பினேன். நான் மழுப்புகிறேன் என்பதை அவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அது ஏனோ தெரியவில்லை?

இரண்டு நாட்களாக நிதமும் அவரோடு வந்து கொண்டிருந்த வசந்தன் வருவதில்லை.

அவனாகவே நின்று கொண்டானா, அல்லது முருகனுக்கு சங்கதி தெரிந்து நிறுத்திவிட்டாரா என்பதும் எனக்குப் புலப்படவில்லை... ஆயினும்...

இவராக நிறுத்தியிருந்தாலும் சரி, அவனாகவே நின்றிருந்தாலும் சரி, நாமாகச் சொல்லக்கூடாது

என்று முடிவு கட்டியிருந்தேன். ஒருவேளை, தற்செயலாக வேறு ஏதும் வேலைகள் காரணமாக அவன் வராதிருந்தாலும் இருக்கலாம். இவருக்கு அவனது சங்கதி தெரியாமலிருந்தாலும் இருக்கலாம்...எது எப்படியிருந்தாலும் சரி...இவர் வசந்தனிடம் வைத்திருக்கும் வாஞ்சைக்கு, நமது தூய்மைப் பிரசங்கம் நமனுகி விடக்கூடாதே என்றுதான் பயந்தேன்—சொல்லாமலும் இருக்க முடிந்தது!

புரையோடிய புண்ணுக்குப் போர்வை போடுவதால் பயனில்லை என்பதும் தெரியும்—அதே நேரத்தில், போர்வை போடாமல் இருப்பதால் மட்டும் பயன் ஏற்படாது என்பதையும் தெரிந்து வைத்திருந்தேன்.

எப்படியோ......

இப்படியே......

சென்றது ஒரு வாரம், சிந்தனையிலேயே!

★

சிரித்தாள்!

சிரித்தேன்!

அதைவிட, "பிரித்தாள், பிரித்தேன்" என்று சொல்லுவதில்தான் இலக்கியம் இருக்கிறது!!

## முருகன்:

அன்று அந்தக் காட்சியை சன்னல் வழியாகப் பார்த்து விட்டேன். இல்லை என்றால் வசந்தனை என் நண்பன் என்றே நினைத்துக் கொண்டிருப்பேன். பகவதியை அவனுக்கு மணமும் முடித்திருப்பேன்.

முந்திய நண்பர்களை இவனும் பின்பற்றி விட்டான். என் திட்டங்கள் யாவுமே தோற்றுப் போவதிலிருந்து, ஒருவேளை அவைகள் கனவுலகத்துக்குத்தான் பொருத்தமானவைகளாக இருக்குமோ என்று சந்தேகப் படுகிறேன்.

என்னவெல்லாம் நினைத்திருந்தேன், நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்குமாம். அழகான பழமொழி. நம் இஷ்டம் போலெல்லாம் இந்த அழகான பழமொழியை நாம் அனுபவிக்கலாம். அதாவது:

நமக்கு மோட்சம் தேவை என்றால், நமக்குத் தெய்வம் நரகத்தைத் தான் தரும்! நமக்கு நரகம் தேவை என்றால்தான் தெய்வம் மோட்சத்தைத் தரும். அதனால் தானே என்னமோ, மத்திய இடமாகிய இந்தப் பூவுல

கில் உள்ளவர்களில் பெரும்பாலோர் நரகலோகத்தை நோக்கியே நடந்து கொண்டிருக்கிறார்கள்....

சேச்சே...!

பழமொழிகளாகப் பாதி நமது நாட்டைப் பாழாக்கி விட்டன!......

மூர்ச்சையாக அவள் கீழே விழுந்த நேரத்தில் திருடன் போல் அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டே ஓடி விட்டானே! மூர்ச்சையானதற்கு எது, யார் காரணம் என்பது ஒருபுற மிருக்கட்டும். ஒரு உயிர் அல்லவா கீழே கிடப்பது, தண்ணீர் தெளித்து எழுப்பி விட வேண்டுமே என்ற குறைந்த பட்ச இரக்க உணர்ச்சியேனும் இல்லாமல் போய்விட்டானே; மனிதனா அவன்? மறைந்திருந்த நானல்லவா வந்து மருந்திட வேண்டியிருந்தது. ஆம்! இந்தச் சமுதாயத்தில் புண்ணியம் செய்வதற்குள்ள உரிமையை பாவம் செய்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

நான் அன்று அங்கு ஒளிந்திரா விட்டால்?...

திடீரென காட்சியைக் கண்ட பொழுதிலேயே உள்ளே புகுந்து வசந்தனைத் தாக்கியிருந்தால்..?

இருபது நூற்றாண்டு நாகரிகமும் ஒரே நொடியில் அனாவசியமாகச் செலவாகியிருக்கும்...!

நல்ல வேளை!

நல்லதுகள் தப்பின!

அன்று நான் வர இன்னும் தாமதமாகி இருந்தால், பகவதியின் அதிர்ச்சி அவளது ஆயுளையே மருந்தாகக் கேட்டாலும் கேட்டிருக்கலாம்...!

எப்படியோ மற்றும் ஒரு களை என் உள்ளக் கழனியிலிருந்து பிடுங்கப்பட்டு விட்டது!

தொலைந்தான், துரோகி!

எனக்கு இதெல்லாம் தெரியாது என்று எண்ணிக் கொண்டு, முந்தா நாள் சென்னைக்குப் புறப்படும்போது, வீதியில் வைத்து என்னிடம் வெற்றுமை பாராட்டாமல் அனுப்பி விட்டுச் சென்றான். போகட்டும். அவனைப் போன்றோர் சென்னையில் தான் இருக்க வேண்டும் இந்த நல்ல கிராமத்துக்கு எதற்கு? மீன் தண்ணீருக்குள் வாழ்வதில் இருக்கும் நியாயத்தை விட, மேட்டுக் குடி மக்கள் சென்னையில் வாழ்வதில் அதிக நியாயம் உண்டு!

பகவதி நடந்ததை என்னிடம் சொல்ல கூச்சப்படவில்லை. குழம்புகிறாள். நண்பனைக் குறை கூறுகிறாள் என்று நான் நினைப்பேனோ என்று அவள் நினைத்து அஞ்சிக் கிடக்கிறாள். நானும் நடந்ததைப் பற்றிக் கேட்க வில்லை. அவளும் சொல்லவில்லை—சொல்ல வேண்டாம். இருப்பவர்களுக்கே ஆருடம் பார்க்க எங்களுக்கு நேரமும், நெஞ்சமும் இல்லாதிருக்கும் போது, எங்கள் வரையில் இறந்துவிட்ட வசந்தனை ஏன் நினைக்கப் போகிறோம்?

விட்டுவிட்டோம்......

மீண்டும் மீண்டும் சிந்தித்தேன்.

ஒரே முடிவுதான்!

அதாவது பகவதிக்கு நானும், எனக்கு பகவதியும் என்பது!

ஆம்! அதுதான் சரி என்று எனக்குள் முடிவு கட்டிக்கொண்டேன். அவளிடம் என்றும்போல் நடந்துவந்தேன். தம்பதிகளாகி விட்டோமோ என்ற சந்தேகம் எங்களுக்கே தோன்றிவிடும் அளவில், மிக நெருங்கிப் பழகினேம்...ஆயினும் அதுவரையில் உண்மையாக, நிச்சயமாக, தெய்வம் இருக்கிறதாமே அது அறிய, நாங்கள் தம்பதிகளாகவில்லை!

புது வாழ்விலே அவளுக்கு அன்றும் ஆசை உண்டு; இன்றும் அப்படியே! ஆனல் எனக்கோ இன்று தான் அந்த எண்ணம் இலேசாகத் தலைதூக்கியது. அவளிடம் எப்படிச் சொல்லுவது? எனக்கே ஏன் இந்தக் கொள்கையில் கொஞ்சம் சந்தேகம் இருக்கிறதே! நான் வாழத் தகுதியற்றவன் என்ற விஷயம்தான் எனக்கே தெரிகிறதே!

பொருளாதாரம் எங்கள் திருமணத்தை எள்ளளவும் சம்மதிக்கவில்லை.

தெய்வத்திடம் பூக்கட்டிப்போட்டு, நாலைந்து தடவை பார்த்தால், அதுகூட அவஸ்தை பொறுக்க முடியாமல் சம்மதித்துவிடும்!

ஆனல்... இந்தப் பொருளாதாரம் இருக்கிறதே... மிகவும் பொல்லாதது... சுடுகாட்டிலும்கூட வெந்து சாம்பலாகாதது...... அப்பேர்ப்பட்ட பொருளாதாரத் துக்கா எங்களது திருமணத்தில் இரக்கம் வரப் போகிறது?

நாங்கள் யாரிடமும் கடன் வாங்கக்கூடாது. எங்களைச் சரியாகத் தெரியாதவன் கடன் தரமாட்டான். சரியாகத் தெரிந்தவன் விலங்கை முதலில் எங்கள் கைகளில் பூட்டி அழகு பார்த்துவிட்டு, அப்புறம்தான் எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்பான்?

அதிகம் வேண்டாம்; கொஞ்சமும் இல்லாதிருக்கிறோமே! குளிர்மதி தான் கூப்பிட்ட நேரத்துக்கு வராது; குத்து விளக்குமா அப்படி நடந்து கொள்ளவேண்டும்?

இத்தகைய எண்ணங்களால் ஒன்றுமே ஓடாமல் இருந்தேன். பகவதியாக இதுபற்றி ஒன்றுமே பேசுவதில்லை. என்ன சிந்திக்கிறீர்கள் என்று கேட்பதுமில்லை. ஒரு பெண் தனது இலட்சியமாக இருக்கிறாள். என்பதை நினைக்கும்போது, மற்ற மனிதர்களுக்கு வருமே, அந்த மகிழ்ச்சி எனக்கு வரவில்லை, வானமே வந்து என் தலையை அழுத்துவது போலிருந்தது!

ஒரு வாரம் கழித்தது.

சென்னையில் ஒரு பத்திரிகையில் ஆசிரியர் வேலை காலியாம். என்னை விரும்புகிறார்களாம். உடன் என்னைப் புறப்பட்டு வரும்படியாக எக்ஸ்பிரஸ் கடிதம்கூட அல்ல, தந்தி!

படித்தேன். பகவதியிடம் காட்டினேன். படித்தாள். ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குமுன் நான்......

"பொருளாதாரம்கூட நமது திருமணத்தை ஒப்புக்கொண்டுவிட்டது பார்த்தாயா பகவதி" என்று சொன்னேன். மகிழ்வு எனக்குத் தாங்கமுடியவில்லை. தொடர்ந்தேன்.

"பகவதி! போய் வேலையை ஒப்புக்கொண்டு அடுத்த வாரம் இங்கு வருகிறேன். அப்புறம் நாம் இருவருமே சென்னைக்குச் சென்று, பதிவுத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே குடும்பம்—நடத்தலாம்" என்றேன்.

"திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தலாம்" என்ற வாக்கியத்தைக் கேட்டதும், என் கைகளை எடுத்துத் தன் கண்களில் வைத்து மகிழ்ந்தாள். அதில் நான் தான் அவளைவிட அதிகமாக மகிழ்ச்சி கண்டேன்.

நான் புறப்படவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள். இருக்கின்ற என் ஆடைகளைச் சலவைசெய்து, டிரங்கில் அழகுற அடுக்கிவைத்தாள்.

நான் அடிக்கடி விரும்பிப் படிக்கும் குறள், சிலப்பதிகாரத்தைப் பெட்டிக்குள் வைத்தாள். 'அகநானூறு' என்னும் நூலைமட்டும் பெட்டியைத் திறந்ததும் கண்ணில் படும்படியாக, எல்லா சாமான்களுக்கும் மேலே வைத்தாள்.

அவள் அன்றுதான் முதன்முதலாக......

"அத்தான்...!"

"பகவதி...!"

"இதோ அகநானூறு" என்று சொல்லி, அதை எடுத்து என்னிடம் காட்டி மீண்டும் பெட்டிக்குள் வைத்தாள்.

சிரித்தேன்—சிரித்தாள்!

பணம் தந்தாள். புறப்படும் அந்த நேரத்தில் தயங்கினேன். அழுதே விட்டேன். "போக மாட்டேன் பகவதி. உன்னை விட்டுப் போவதா?" என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டை தூர எறிந்து, சட்டையையும் கழற்றப்போனேன்!

"வேண்டாம், என் சொல்லைத் தட்டாதீர்கள். போய் விட்டு ஒரே ஒரு வாரத்தில்தான் வரப்போகிறீர்களே" என்றாள்.

மௌனமாக நின்றேன்.

"புறப்படுங்கள். நாளைக்கு நாம் சேர்ந்து வாழுவது, இன்று பிரிவதில்தான் இருக்கிறது, புறப்படுங்கள்" என்றாள்.

புறப்பட்டேன். ஸ்டேஷன்வரை வந்து அனுப்பினாள்.

சிரித்தாள்!

சிரித்தேன்!

அதைவிட, 'பிரித்தாள், பிரித்தேன்' என்று சொல்லுவதில் தான் இலக்கியம் இருக்கிறது!

★

அயோக்கியனின் ஆதரவு இல்லாததால், யோக்கியன் சாகக்கிடக்கிறன். கீதை, பைபிள், குறள்கூட அங்கே தலையணையாக உபயோகப்படுகிறதே தவிர, தகக மருந்தாக உபயோகப்படுவதில்லை......!

## சிவராமன் :

முதலாளிகள்தான் தொழிலாளிகளை வாழ்த்துவதாக முதலாளிகளின் நினைப்பு. தொழிலாளிகள்தான் முதலாளிகளை வாழ்த்துவதாகத் தொழிலாளிகளின் நினைப்பு. ஆனல் நான் ஒரு முதலாளி அனுபவப் பூர்வமாகச் சொல்லமுடியும், தொழிலாளிகள்தான் முதலாளிகளை வாழ்த்துகிறர்கள்.

என் கருத்து பிழையாயிருக்குமானல் முருகன் ஆசிரியராகவந்த ஆறே ஆறு மாதத்துக்குள் நான் இவ்வளவு பெரிய முதலாளியாகியிருக்க முடியாது. முருகன் வருமுன் என் பத்திரிகையை ராசிப்பலன் பார்க்க விரும்புபவர்கள் மட்டும்தான் வாங்கினர்கள். இப்பொழுதோ உலகத்தின் ராசிப்பலனை சதா பேசிக்கொண்டிருப்பவர்கள்கூட, என் பத்திரிகையின் தலையங்கத்தைக் "கை காட்டி" என்று புகழுகிறர்களாம். எல்லாம் முருகனின் பெருமை, பரந்த நோக்கத்தில் சொல்லப் போனல் தொழிலாளிகளின் பெருமை!

இந்தக் குறுகிய காலத்துக்குள் முருகன் 'சாக வேண்டியவர்கள்' என்ற ஒரு புத்தகம் எழுதினன்.

நான் தான் வெளியிட்டேன். முருகன் எந்த எந்த நபர்களை யெல்லாம் அதில் சாகவேண்டியவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிருனே, அந்த நபர்கள் கூட முருகனை மனதார 'வாழவேண்டியவன்' என்று வாழ்த்தினர்கள். ஏனெனில், மேதை என்பது நுழையாத இடமும் நுழைந்து ஆட்சி செலுத்தும் மென் காற்றல்லவா!

நல்ல விற்பனை. என் பெட்டியில் பணம் குவியக் குவிய, கோவிலில் தெய்வங்களின் மேல் கொட்டப்படும் மலர்கள் குறைந்தன. ஆண்டவனைவிட, முருகன் தான் தங்களுக்கு அண்மையில் இருக்கிருன் என்று கருதத் தொடங்கிவிட்டனர், மக்கள்!

இலக்கிய இமயம் ஆகிவிட்டான். அவனை வாழ்த்துகிறேன். என் பணப்பையை மட்டும் நினைத்துக் கொண்டல்ல நான் அவனை வாழ்த்துவது, உலக அறிவின் சார்பாகவும் வாழ்த்துகிறேன்.

ஆனல் ஒன்று...

என்ன செய்வது?

வருந்துகிறேன்.

ஆள் மாறிவிட்டான்!

பழைய மாதிரி இல்லை!

போக்கிரித் தனத்தை புதுமை எனக் கருதி யலைகிருன். கேட்டால், கேலி பண்ணுகிருன். மேதையல்லவா,

கடவுளையே கைப்பந்தாக நினைத்து வீசி எறிந்து விளையாடுவானே, நான் ஒரு மனிதன், தூசி எம்மாத்திரம்?

என்னால் சும்மாவும் இருக்க முடியாமல் அன்று ஒருநாள், "ஏன் இப்படியெல்லாம் மாறிப் போய் விட்டீர்கள்" என்று கேட்டேன்.

"ஒழுக்கம் வேறு, திறமை வேறு" என்று நிதானமாகவே பதில் தந்தான்.

"காந்தி, இந்த இரண்டும் ஒன்றுதான் என்கிறாரே" என்றேன்.

"அது எப்படி இரண்டும் ஒன்று ஆகும்; இரண்டு இரண்டுதான், ஒன்று ஒன்றுதான்" என்று நகைச் சுவை பேசினான்.

வரும்போது முதலில் ஒழுக்கத்தின் தூதனாக இருந்தான். இப்போது ஒழுக்கத்தின் காலனாக இருக்கிறான். இனி ஒழுக்கத்தின் எமனாகவே மாறிவிடுவான் போலிருக்கிறது.

போதைப் பொருள்கள்! பெண்கள், மத்தியில் 'மக்கள் கவிஞர்!' அவர் கையில் பேனா! ... அப்பொழுதுதான் அவருக்குக் கற்பனை வருகிறதாம். "அட கண்றாவியே, கற்பனை இந்த வழியாக வரலாமா" என்று கேட்டேன். "நாடக மேடை நடிகன், மேடைக்கு இடது பக்கமாக வந்தால் என்ன, வலது பக்கமாக வந்தால் என்ன, ஏற்ற பாத்திரத்தை அவன் மேடையில் நின்று நன்றாக நடிக்கிறானா என்று பார்க்க வேண்டியதுதானே உங்கள்

வேலை" என்று என் வாயை ஒரே வசனத்தால் பூட்டி விட்டான்!

பின்னும் அவன் நிலையை எண்ணி என்னல் சும்மா இருக்க முடியவில்லை. "உங்களுக்கு முறைப் பெண் யாராவது இருந்தால் சொல்லுங்கள்; ஒரே யடி யாகத் திருமணம் செய்து விடலாம்" என்று உரிமை யுடன் கேட்டேன்.

"எனக்கு முறைப் பெண்ணும் கிடையாது. மும் தாஜ்மஹாலும் கிடையாது. எல்லாம் எங்கும் எப்போ தும் எனக்கே தான்," என்ருன் திமிருடன்!

"ஆ என்று அதிர்ச்சி யடைந்தேன்!"

"காண்பவை யாவும் பொதுவுடமை—என
கருத்தினில் நினைப்பது தான் கடமை"—

என்று பாடிக்கொண்டே வெளியே போய் விட்டான்; அது ஒரு சினிமாப்பாட்டு!

சினிமா அரக்கன் கதை, வசனம், பாடல் என்னும் முப்பெரும் பாதைகளின் மூலமாக முருகனைக் கூட்டிச் சென்று பங்களாவில் ஏற்றினன்—கார்களில் ஏற்றி னன்—சாந்தி முகூர்த்த அறைகளை நினைத்த நேரத்தில், நினைத்த இடத்தில் கட்டி முடிக்கும் சக்தியையும் கொடுத்துவிட்டான்!

முருகனை யாருமே கட்டுப் படுத்த முடியவில்லை. தனது சக்தியை எல்லாம் தப்பான பாதைகளிலேயே செலவழிக்கிருன். ஒழுக்க ஹீனத்தின் எல்லைக்குச்

சென்று அவன் நட்ட கொடி, உயரே இருக்கும் உம்பருலகத்தையே ஓட்டைபோடும் அளவுக்கு உயரமாக இருந்தது என்று கூட தமாஷாகச் சொல்லலாம்!

அந்தோ! பரிதாபம்! அவனை நோக்கிச் சிரிப்பதா? அழுவதா? சிந்திப்பதா? நிந்திப்பதா?

குடிப்பதைவிட, குடும்பப் பெண்களைக் கெடுப்பதை விட, வேசிகளுடன் விளையாடுவதை விட, பொய் புகலுவதை விட, புறம் கூறுவதை விட, பொல்லாத குற்றம் ஒன்று நேற்று செய்து விட்டான். அதை மன்னித்தவனுக்குக் கூட மரண தண்டனை விதிக்கலாம்!

அதாவது:

தொழிலாளி வர்க்கத்தை சற்று தந்திரமான முறையில் தாக்கி, முதலாளிகளைப் புகழ்ந்து ஒரு கவிதை எழுதி வெளியிட்டிருக்கிறான். அதைப் படித்ததும் எனக்கு மகாக் கோபம் வந்துவிட்டது.

குஷ்டரோகி ஒருவனின் தாயாரே, அவனை நோக்கி "நீ அழகாயிருக்கிறாய்" என்று சொல்லட்டும். உடன் அவனுக்குக் கோபம் வந்துவிடும். கொடுமையையே தாங்கிக் கொண்டிருக்கும் அந்தக் குஷ்டரோகியின் நியாய உணர்ச்சி கூட எனக்கு இல்லாமல் போய் விடுமா?... அதனால்தான் முதலாளியைப் புகழ்ந்து, முதலாளிப் பித்தனான ஒருவன் எழுதியதை, முதலாளியான நானே கோபித்தேன்.

மறுநாள் வந்தான்.

பேசாமல் இருந்தேன்.

சீட்டியடித்துக் கொண்டே, சுவரில் மாட்டப்பட்டிருக்கும் அரசியல் தலைவர்களின் படங்களை முறைத்துப் பார்த்தான். அயோக்யப் பயல், தைரியமாக அந்தப் படங்களை சுழற்றிப் பின்புறமாகத் திருப்பித் தொங்க விட்டான். எங்கோ ஒரு சுவர் ஓரத்தில் கிடந்த நடிகை ஒருத்தியின் படத்தை எடுத்து, தலைவர்கள் படம் கிடந்த இடத்தில் கொண்டு தொங்கவிட்டான். போகிறன் எப்படியும், சீட்டியில் அவன் பாடிய பாட்டாவது யோக்யமான பாட்டாக இருந்ததா? "தமிழின் அமுதக் கடலிலே, தனிமையான படகிலே, சரச லீலை யாடலாம், நமது வாழ்விலே, காதலே'' என்ற சினிமாப் பாட்டைத் தான் சீட்டியில் திரும்பித் திரும்பிப் பாடிக்கொண்டிருந்தான்!......ஒருவாறு சீட்டியை முடித்து, சிகரட் பத்த வைத்துக் கொண்டு, புகையை என்னைச் சூழ விட்டுக்கொண்டே...

"தலையங்கம் வேண்டாமா'' என்றான்.

"எதுவுமே வேண்டாம்''

"என்ன சொன்னீர்?''

"ஒன்றுமில்லை''

"உமது மண்டையைப்பற்றிக் கேட்கவில்லையே'' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

மீண்டும் ஒருநாள், அதாவது ஒரு மாதம் கழித்து, வந்தான்! கேட்டான்!

"மிஸ்டர் சிவராமன்! என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்?''

"நினைக்க என்ன இருக்கிறது...? நீர் ஒரு கலைஞர், அவ்வளவு தான் என்னால் சொல்ல முடியும்" என்றேன்.

கோபம் வந்துவிட்டது. சிகரட்டை கீழே எறிந்தான். என்னை எரித்து விடுவதுபோல் ஒரு பார்வை பார்த்தான். போய் விட்டான், ஒரே போக்காக. அப்புறம் வரவே இல்லை!

எனக்குச் சாபமிட சக்தியிருந்தால்.........அந்தச் சாபத்தை மாற்றும் சக்தி உலகில் எனக்குக் கூட இல்லாமலிருந்தால்......

புகழ்—பொருள்! இந்த இரண்டையுமே ஒழித்து விடுவேன்...

இப்போது என் பத்திரிகை அவ்வளவாக விற்பதில்லை. அயோக்யனின் ஆதரவு இல்லாததால், யோக்யன் சாகக் கிடக்கிறான். கீதை, பைபிள், குறள்கூட அங்கே தலையணையாக உபயோகப் படுகிறதே தவிர, தக்க மருந்தாக உபயோகப்படுவதில்லை!

என் பத்திரிகை ஆபீசில் வேலை நிறுத்தம். தொழிலாளர்களை 'ஸ்ட்ரைக்' செய்ய யாரும் தூண்டிவிடவில்லை. அவர்கள் வயிறுதான் தூண்டிவிட்டிருக்கிறது!

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்" என்று சொன்ன பாரதியையே, "ஜகத்தினை அழித்திடுவோம்" என்று சொல்லச் செய்தது வயிறுதானே!

இன்னபிற காரணங்களால் எனக்கு எப்போதுமே வயிற்றிடம் ஒரு தனி மரியாதை உண்டு.

ஆகவே...ஆபீஸை அப்படியே விற்றேன். கிடைத்ததைப் பங்கிட்டேன். இருப்பவர்களுக் கெல்லாம் கொடுத்தேன். எனக்கு எது மீதியாக இருக்கிறது என்று திரும்பத் திரும்ப யோசனை செய்து பார்த்தேன். ஒன்றுமே புலப்படவில்லை. கன்னத்தில் கைவைத்து விட்டேன்...தாடி வளர்ந்திருந்ததை யறிந்து ஷேவிங் செய்துகொள்ள ஒரு 'பார்பர் ஷாப்'புக்குள் போய், ஆசனத்தில் அமர்ந்து 'என்னிடம் எது மிச்சம்' என்று யோசித்துக்கொண்டே இருந்தேன்—மீண்டும் யோசித்தேன். மிச்சம் எது என்பது என் கண்ணில் கண்ணாடிக்குள் தெரிந்தது, அதுதான் "நான்!" ஷேவிங் முடிந்ததும் புறப்பட்டேன். அலைந்தேன். வேலைகேட்டேன். கிடைத்தது. மற்றொரு பத்திரிகையில் நான் இப்போது ஒரு மானேஜர்! உழைக்கிறேன், வாழ்கிறேன்! எவன் வாழ்த்தும், நான் உழைக்கும்வரை, எனக்குத் தேவையில்லை!

முதலாளிக கிடையே உதித்த நான் தொழிலாளிகளுக்கிடையே ஒரு மெம்பர் ஆகிவிட்டேன். முருகனோ நேர்மாறாக இங்கிருந்து அங்கு போய்விட்டான். ஒன்று வரவு—ஒன்று செலவு! இப்படி வரவும் செலவும் சரியாக இருந்தால், கணக்குப் புத்தகம் வாங்க யாரிடம காசு கேட்பதோ?

முருகனைத் தாக்கி நான் இப்போது எழுத ஆரம்பித்துவிட்டேன். அது முருகனுக்கு மட்டுமல்ல, முருகனது பரம்பரைக்கே உதவும். என்னை அவன் ஏசிக்கொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நன்றாகச்

சபிக்கட்டும்; நாக்கு வலிக்கும்வரை சபிக்கட்டும். அதெல்லாம் என்ன பலித்துவிடவா போகிறது!

முருகன் முதலாளி!

நான் தொழிலாளி!

அவன் என்னைச் சபிக்கிறானும்; அது பலித்துவிடுமாம்! சொல்லுகிறார்கள்! பாவங்கள்!

இந்த மாதிரிப் பூச்சாண்டி காட்டும் பாவங்கள் பூமியில் உலவ உலவ, பூமிக்கு இருக்கும் இயல்பான ஆகர்ஷண சக்திகூட தானாக தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன். அப்படியானால் தானே சூரியனின் ஆகர்ஷண சக்திக்கு பூமி இலக்காகி ஒரேயடியாக புகையாக முடியும்......!

இப்படியாக தினமும் எதையெல்லாமோ எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். இருந்த இடத்தில் இருந்து கொண்டே சாப்பாட்டை மறந்து சிந்திப்பேன். காதுகள் அடைத்துப் போகும்வரை பட்டினி கிடந்தும் சிந்திப்பேன்...அந்தப் பொழுதிலும் கூட ஆபீஸில் வேலைக்கு அழைக்கும் மணியோசை மட்டும் எப்படியோ என் காதில் புகுந்துவிடும்!

★

"புத்தர் ஆட்டுக்குட்டியைக் கையில் வைத்திருப்பதே, பசிவந்ததும் புசித்துக் கொள்வதற்காகத் தான்! இந்த மாதிரித் தத்துவ ரகசியங்களைத் தெரியாமல், பகவதி ஆண்கள் நிறைந்த சங்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்துவதைப் பற்றிப் பேசுகிறீர்களே..."—என்றுகூட அநீதி பேசியிருப்பார்!

## பகவதி :

"பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால், மிகப் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்"—இது பாரதி!

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"—இது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

பாரதி தவிக்கும் பெண்களை நோக்கி திட்டவட்டமான அபிப்ராயம் கூறிவிட்டார். கவிமணி தேறுதல் கூறுகிறார். மொத்தத்தில் இந்த இரு அபிப்ராயங்களின் உற்பத்தியும் ஒரே இடத்தில்தான் என்று கருதுகிறேன்.

ஐயோ!...எல்லாம் கனவாகிவிட்டதே. போனவர் போயேவிட்டார். கடிதம்கூட கிடையாது. ஆளே மாறி விட்டாராம். ஒழுக்கமே இல்லையாம்...வளர்ப்பானேன் ...ஒரு சினிமாக்காரராகி விட்டாராம்! சில பத்திரிகைகள் அவரைத் திட்டி எழுதுகின்றன. மகாமோசமாகி விட்டாராம்!

இந்த ஊரிலிருந்து சென்னைக்குப் போய் வந்த நல்லவர்களில் சிலர் இதைச் சொல்லுகிறார்கள். என்னைப் பற்றிய ஞாபகமே அவருக்கு இல்லையாம்.

ஒரு தடவை பக்கத்து வீட்டுப்பிள்ளைவாள் போயிருக்கும் போது முருகனை நோக்கி, "பகவதி பாவம்.......பக்கத்து வீட்டில் சட்டி பானைக் கழுவிப் பிழைக்கிறது. நீங்கள் ஏதாவது உதவி பண்ணக் கூடாதா" என்றாராம்.

அதற்கு முருகன், "பகவதியா? எந்த பகவதி?" என்று கேட்டாராம்.

"எந்த பகவதியா? போமய்யா போம்! மந்திரவாதிகள் கூப்பிடுகிற மலையாள பகவதி" என்று கோபப்பட்டு விட்டாராம் பிள்ளைவாள்!

"நீங்கள் கூட சினிமாவுக்கு வசனம் எழுத வரலாம் என்று சொல்லிச் சிரித்தாராம், முருகன்!

"அதெல்லாம் கிடக்கட்டும் சார்! அந்தப்பொண்ணு பாவம் உங்களையே நம்பிக் கிடந்ததை நீங்கள் மறந்திடலாமா?"—என்று பிள்ளைவாள் மீண்டும் தொடர்ந்தாராம்!

கொஞ்சநேரம் மௌனமாக இருந்து விட்டு "சரி! வேறு ஏதாவது புதிய, நல்ல விஷயங்களைப் பேசலாம்" என்று முருகன் பேச்சை வேறு பக்கமாகத் திருப்பினாராம். அப்போது பிரபல நடிகை ஒருத்தி முருகனுக்கு அருகில் இடித்துக் கொண்டு உட்கார்ந்த வண்ணம் முருகனது சட்டையில் உள்ள பித்தானைச் சரியாக மாட்டி

ளாம்—முருகன் அவளது தோளில் கையைப் போட்ட வண்ணம் காட்சியளித்துக் கொண்டிருந்தாராம்.

பித்தானை அந்தப் பெண் ஏன் மாட்ட வேண்டும் என்ற பொறுமைக் கேள்வியைக் கூட நான் கேட்கத் தயார் இல்லை. தன் கையால் தன் சட்டைப் பித்தானை மாட்டிக் கொண்ட பிறகு, அவளது தோளில் கையைப் போட்டால் என்ன, அதற்குமா சோம்பேறித்தனம் என்றுதான் கேட்கிறேன். சரி...எப்படியோ ஆண்டு ஒன்றும் போய் விட்டது. அவராக என்னைத் தேடி வந்தாலும் நான் பழைய பகவதியாக நடந்து கொள்ளப் போவதில்லை. இதைக் கோபத்தில் உதித்த எண்ணம் என்று சொல்லுவதா அல்லது கொள்கையில் உதித்த எண்ணம் என்று சொல்லுவதா என்பது எனக்கே பிடி படவில்லை! ஊம்! அது எப்படியாயினும் சரி, இந்த எண்ணம் என் சொந்த சுகம் பறிபோய் விட்டதே என்பதால் ஏற்பட்டதல்ல என்பதை எண்ணி எண்ணி மகிழு கிறேன்!

முதலாளியாகி விட்ட முருகன் தொழிலாளிகளைத் தாக்கியே சதா எழுதுகிறாராம். அவரும் ஒரு பரிபூரண முதலாளியாகவே திகழுகிறாராம். இனியும் நான் அவருக்காக வாழ்ந்தால், என்னருமைத் தொழிலாளத் தோழர்களின் அழிவுக்காக வாழ்கிறேன் என்றுதான் அர்த்தம். ஆகவே அவரை அப்படியே விட்டு விட்டேன். எப்படியும் தொலையட்டும். உடைந்த பொம்மையை வைத்துக் கொண்டு ஒன்னுமறியாத குழந்தை கூட விளையாடாதே!

இந்த ஊருக்கு நேற்று வந்திருக்கிறாராம். பார்ப்பதற்காக ஏகப்பட்ட பேர் போயிருந்தார்களாம். அவரும்

தாம்விளையாடிய இடங்களை எல்லாம் பார்க்கப் போயிருந்தாராம். அந்த நந்தவனம் இந்தக் குடிசை இவைகள் இரண்டை மாத்திரம் மறந்து விட்டார்......இல்லை...... அவர் மறக்கத்தான் வேண்டும்.

தொழிலாளர் சங்கங்களில் நான் பேசுவது, செயல் புரிவது, இதையெல்லாம் கேட்டு சிரித்தாராம். அவருடன் வந்திருக்கும் நடிகை, "யார் அந்தப் பெண்மணி" என்று கேட்டதற்கு இவர் "அது ஒரு தரித்திரம் அதை ஒரு நிமிஷம் ஒருவன் நினைத்தாலே அவனுடை வாழ்வு பூராவும் தரித்திரம் ஆயிடும்" என்று சொன்னாராம். அப்போது அந்த 'மங்கை நல்லாள்' 'அப்படியா' என்று தலையைஆட்டிக்கொண்டே,வெள்ளித்தட்டில்வீற்றிருந்த திராட்சைக் கனிகளில் ஒன்றை எடுத்துஅவரது வாயில் ஊட்டினளாம்இவ்வளவும்ஐந்தாறு ஆட்களுக்குமத்தியில்! அடகடவுளே!....திராட்சையைதின்றுவிட்டு அவர் விதையைக் கீழே துப்பினாராம். விதைகளில் ஒன்று அந்தச் சுந்தரியின் பட்டுப் புடவையில் விழுந்ததாம். உடனே அவள் அந்த விதையை, அவருக்குத் தெரியாத முறையில், சாகசமாக துடைத்துக் கீழே தட்டி விட்டாளாம்!

நல்ல வேளையாகப் பார்க்கப் போனவர்கள் மேலும் இருக்க முடியாமல் வந்து விட்டார்கள். இன்னும் கொஞ்சம் அவர்கள் அங்கு தங்கி எனக்காகப் பரிந்து பேசினர்களானல், "புத்தர் ஆட்டுக் குட்டியைக் கையில் வைத்திருப்பதே, பசி வந்ததும் புசித்துக் கொள்வதற்காகத்தான்! இந்த மாதிரி தத்துவ ரகசியங்களைந் தெரியாமல், பகவதி ஆண்கள் நிறைந்த சங்கத்துக்குத் தலைமை தாங்கி: நடத்துவதைப் பற்றி பேசுகிறீர்களே"—என்று கூட அநீதி பேசியிருப்பார்!

சரி! அவரது கற்பனை வண்டு இனி சாக்கடைக்குப் போனால்தான் எனக்கென்ன—பூக்கடைக்குப் போனால் தான் எனக்கென்ன? என் சடையில் உள்ள மலர்களின் பக்கம் வராமலிருந்தால் போதும்!

இனி, இந்தப் பிறவியில், என் வரையில் முருகன் இல்லை. முன்பு அவர் அன்பு காட்டி இருக்கலாம். அதற்காக நான் 'பென்ஷன்' செலுத்தத் தயார் இல்லை. நானும் அன்பு காட்டியிருக்கிறேன் அவரும் 'பென்ஷன்' தர வேண்டியதில்லை.

எனக்கு அவரும், அவருக்கு நானும் எதிரிகள்! அதுவும சாதாரணமான எதிரிகள் அல்ல.........ஒருவர் உள்ளத்தை மற்றொருவர் நன்றாகப் புரிந்த எதிரிகள்!

என் கையில் தொழிலாளர்கள்!

அவர் கையில் பணம்!

என்னிடம் பொறுமை!

அவரிடம் பொச்சரிப்பு!

பார்க்கலாம்......!

பெண்மை நினைத்தால் சாந்த சொரூபி மீராவாகவும உருவெடுக்கும்; சமர் அரசி சாந்த் பீபியாகவும் உருவெடுக்கும் என்பதை முருகன் உணரும்படி செய்ய வேண்டும்!

★

தாலாட்டுப் பாடல் பாடவேண்டிய பெண் அறைகூவி அழைப்பது, அறைகூவி அழைக்க வேண்டிய ஆண் தாலாட்டும் பாடல் பாடுவதை விட கண்றாவியல்லவா...?

## முருகன் :

தொழிலாளர்களின் வாழ்வே தன் கையிலிருப்பது போல்தான் பேசுகிறுள். தோகை விரித்தாடும் மயில் அழகுதான், ஆயினும் அதனுல் தான், இருண்ட வானம் மழையைப் பொழிகிறது என்று கூற முடியுமா?

பெண்ணொருத்தி பிரசங்கம் செய்வது ஆச்சர்யகர மான விஷயம்தான். ஆதாயம் என்ன?...அடுக்களை அலுவல்கள் தடைப்படுவதுதான் மிச்சம்!

சர்க்கஸில், கயிற்றில் குடை பிடித்து, நடந்து லேடி போகிறுள். ஆச்சரியம் தான், ஆனுல் பிரயோஜனம் என்ன?

ஊதுவதற்காக உபயோகப் பட வேண்டிய புல் லாங் குழலைக் கொண்டு, மாடுகளைத் தட்டி மேய்க்கலாம் என்ருல்தான் காதல் புரிய வேண்டிய மாதர்கள் கம்யூ னிசம் பேசலாம்!

தாலாட்டுப் பாடல் பாடவேண்டிய பெண் அறை கூவி அழைப்பது, அறைகூவி அழைக்க வேண்டிய ஆண் தாலாட்டுப் பாடல் பாடுவதை விட கண்றாவியல் லவா?

சங்கத்தில் பேசுகிறாளாம். திட்டங்கள் தீட்டுகிறாளாம். போராட்டம் துவக்கிவிட்டாளாம். அவளே தான் தலைவியாம். அட பாவமே! எனக்கு ஒருவனுக்கே தலைவியாக இருக்கத் தகுதியற்றவள் என்று விலக்கி வைத்திருக்கிறேன். அவள் போய் ஒரு போராட்டத்துக்கே தலைவியாகி விட்டாளே. எப்படியும் போகட்டும், எனக்கென்ன என்றும் இருக்க முடியவில்லை. என்னை 'முதலாளி முதலாளி' என்று ஏசி ஊர் மக்கள் யாவரும் என்னைப் பகைக்கும்படியாகச் செய்துவிட்டாளே. முன்பு தொழிலாளிகளைப் புகழ்ந்து முதலாளிகளைத் தாக்கி, நான் எழுதியுள்ள கவிதைகளைத் தொகுத்து, துண்டுப் பிரசுரங்களில் பிரசுரித்து, கீழே 'முந்திய முருகன்' என்று பெயரையும் போட்டு என்னைக் கேவலப் படுத்துகிறாளே! அன்று எழுதினேன், பட்டினிக் கிடக்கும்போது. இன்னுமா அப்படி ஒப்பாரிப் பாடல்கள் எழுதுவது?

என் மூளை தந்த முன்னேற்றத்தை, அவள் தன் மூளையைக் கொண்டு பறிமுதல் செய்யப் பாடுபடுகிறாள். இந்த நிகழ்ச்சிக்குத் தான் அவள், 'புரட்சி போராட்டம்' என்னும் பெயர் சூட்டி இருக்கிறாள்.

புயலால் பொது மக்கள் பாதிக்கப்பட் டிருக்கிறார்களாம். பூச்சிகள் அரித்துப் பயிர்களை நாசமாக்கி விட்டனவாம். வாரக் கணக்காக ஊர் மக்கள் வயிற்றுக்குக் கஞ்சியும் இல்லாமல் தவிக்கிறார்களாம். இதற்காக எனது செல்வம் அனைத்தும், பொதுவுடமை யாக்கப்பட வேண்டுமாம். ரெம்ப நன்றாக இருக்கிறது. பொறாமை பிடித்தவனின் புனைப் பெயர்தான், "பொதுவுடமை

வாதி" என்பதை நானே ஒரு முதலாளியான பிறகு தான் உணருகிறேன்!

சீச்சீ! கதாநாயகனாக ஏறு நடைபோட வேண்டிய என்னை, என் மாஜி காதலி வில்லனாக மாற்றிவிட்டாளே!

அக்கம் பக்கம் உதவி புரிய யாருமே இல்லையாம். அரசாங்கம் தனது கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்று ஆதீனங்களிடம் ஆலோசனை கேட்கிறதாம். மற்ற கட்சிகள், பெற்ற தாய் நாட்டின்—பிறந்த பொன்னாட்டின் — விசித்திரங்களையும், விஸ்தீரணங்களையும், விவேகத்தையும் பற்றி வியாக்யானம் செய்வதையே வேலையாகக் கொண்டலைகிறதாம்! இவளது கட்சி மட்டும் தான், இருபத்து ஒன்றும் நூற்றாண்டுக்குக் காலண்டர் தயாரித்துக் கொண்டிருக்கிறதாம்.

'இதுகளைப் பற்றி எண்ணாதீர்கள், நாமும் பைத்தியமாகி விடுவோம்' என்று என் உயிர்க் காதலியும் பிரபல நடிகையுமான மங்களாதான் அடிக்கடி சொல்லுவாள். அதுவும் ஓரளவுக்கு சரியாகத்தான் இருக்கிறது.

எனது முன்னேற்றம் தனக்குப் பயன்பட வில்லையே என்ற ஏக்கம்தான், சங்கத்தின் மீது அவள் கொண்டுள்ள ஊக்கமாக மாறியிருக்கிறது என்ற ரகசிரம் அப்பாவித் தொழிலாளர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

தரித்திரம்! எப்படியோ நம்மை விட்டுத் தொலைந்ததே. அவளோடு இருந்த வரையில் தலைவாரிச் சீவ எண்ணெய்க்குக் கூட பஞ்சமாயிருந்தேன். 'இன்று நான்

பழகுவது வேசிகளாயிருக்கலாம். என்ன செய்வது? கலைமகளும், திருமகளும் இவர்கள் வீட்டுக் கொலுவுக் குத்தானே தவருமல் விஜயம் செய்கிருர்கள். எது எப் படியோ......இயற்கை எனக்கே தெரியாமல் என்னிடம் ஒளித்து வைத்திருந்த ஐம்புலன்களையும், இவர்கள்தான் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்; நன்றி மறப் பதா?

என்னமோ...முந்திய வாழ்க்கை எனக்குக் கசந்து போய் விட்டது. இன்றைய வாழ்வில்தான் இன்பத் தைக் காணுகிறேன். என்னை நோக்கி யார், 'முதலாளி ஒழிக' என்று கூச்சல் போட்டாலும் சரி, என் இரும் புப் பெட்டியைத் திறப்பதனல் ஏற்படும் நாதத்துக்குள், அந்தக் கூச்சலை அடக்கமாக்கி விடுவேன் என்பதில் எனக்கு அசையாத நமபிக்கை உண்டு.

நல்லவனுகத்தான் இருந்தேன். சதாவும் நாட்டைப் பற்றித்தான் கவலைப்பட்டேன். கடைசியில் ஒருநாள் சென்னைக் கடற்கரையில் ஒரு செல்வனிடம் கைநீட்டி காலணு கேட்கும்போது, அவன் கொடுத்த காரசார மான பதில்தான் என் வாழ்வில் புதிய ஞானத்தை போதித்தது.

''நல்லவன் என்பவன் வேறு யாருமில்லை; தற் கொலையைச் செய்யத் தெரியாமல் செய்து கொண்டிருப் பவன்தான்''—என்று, அன்று டைரியில் எழுதிய எழுத்துக்கள் தானே, எனது முந்திய பிறவியின் முடி வான சித்தாந்தம்!

★

பசிக்கின்றவனின் வயிற்றுக்குள் போக வேண்டிய உணவு, பக்கத்திலிருக்கும் சாப்பிட்ட ஒருவனின் மடியில் பொட்டலமாக இருப்பதைச் சகித்துக் கொண்டு, எவனாவது ஒரு புளிச்ச ஏப்பக் காரன் தான் இருக்க முடியும்—மற்ற எவனாலும் முடியாது!

## பகவதி:

நேற்றைய என் பிரசங்கத்தைக் கேட்டு அழுதே விட்டாராம். தமது குற்றங்களை உணர்ந்தாராம். முன்பு தன் தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்ட வரையிலும் என்னிடம் அடிக்கடி சொல்லுவார். "பகவதி! நான் ஒரு அதிசயமான குற்றவாளி...குற்றங்களைச் செய்து கொண்டே மன்னிப்பும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று! அப்படியே தான், இன்றும் நடந்து வருகிறார், பாவம்! நிரந்தர மதியற்றவர்! அவரை எதில் தான் சேர்த்துக் கொள்வது? தீயிலே அவர் கையை வைக்கட்டும், நிரந்தர புத்தியில்லாத நேசன் தானே நம் மீது கையை வைக்கிறான் என்று அந்த நெருப்பு சுடாமல் விட்டு விடுமா, பார்க்கலாம்.

எங்கேயோ...எப்போவோ...எப்படியோ...எதற்காகவோ...ஒரு பகவதி அவருக்கு இருந்தாள்...அவரது புத்திக்கு ஏற்றபடி யெல்லாம் தானும் நடந்து வந்தாள்... அதெல்லாம் கனவாகி விட்டதே!

பாவம்! அவருக்கு உலகமே தெரிகிறது. இப்படி உலகம் தெரிவதற்குக் காரணம் கண்கள் தானே என்ற சிறு விஷயம் மட்டும் தெரியவே மாட்டேன் என்கிறது.

பொதுக் கூட்டத்தில் தான் என்ன, நான் அவ்வளவு அதிக மாகவா தாக்கிப் பேசி விட்டேன்? இதற்கே அழுகிறாரமே! புழுப் போலத் துடிக்கிறாரமே!

என்ன சொன்னேன்.

"நெருப்பை எதிர்த்து விளையாடினுலாவது சாம்பலாகப் பிறவி எடுக்கலாம். ஆனல் தெரிந்தோ, தெரியாமலோ தொழிலாளர்களை எதிர்த்து விளையாடுபவர்கள், தாம் உலகில் வாழ்ந்ததற்கு இயற்கையாக இருக்கும் அத்தாட்சிகளைக் கூட இழந்து படுவார்கள். மேதை முருகன் நம்மைத் தாக்குகிறாராம். பரவாயில்லை நமது சங்கத்தால் ஒன்றுமே நடக்காது என்கிறாராம். அதற்கும் பரவாயில்லை!

ஆயினும் ஒன்று!

அவருடன் போராட நமக்கு உரிமை இல்லையாம்—சொல்லுகிறாராம். அது எப்படி! அவரும் நாமும் ஒரே மனித இளம். அவரிடம் பணம் இருக்கிறது, நம்மிடம் இல்லை! அவரிடம் சுகம் இருக்கிறது, நம்மிடம் இல்லை! ஆகவே, நம்மிடம் இல்லாத நல்லவைகளை அவர் தந்து தான் உதவ வேண்டும், பள்ளத்துக்கு, மேடு தணணீர் தருவது போல! உலகிலேஎந்த நாட்டில் இதை ஆதரிக்கும் வண்ணம் சட்டம் இருந்தாலும், இல்லா விட்டாலும், மனிதனின், இதயவுலகில் இருக்கும் ஏகமான இயற்கைச் சட்டம் இதுவே தான்! இதெல்லாம் கூட ஒரு புற மிருக்கட்டும்; நம்மவரில் பெரும் பாலோர் அவரது நிலங்களைச் சாகுபடி செய்கின்றோம்—இந்தக்

காரணத்திற்காகவாவது அவரது காது நமது பக்கம் சற்று திரும்பலாமே!

பசிக்கின்றவனின் வயிற்றுக்குள் போக வேண்டிய உணவு, பக்கத்திலிருக்கும் சாப்பிட்ட ஒருவனின் மடியில் பொட்டலமாக இருப்பதை சகித்துக் கொண்டு, எவனுவது ஒரு புளிச்ச ஏப்பக் காரன் தான் இருக்க முடியும்—மற்ற எவனுலும் முடியாது!

தாயிடம் பால் கேட்கும் குழந்தை கூட முதலில் தாயைப் பார்த்துக் கண்ணுல் கேட்கிறது. அப்புறம் இலேசாக அழுகிறது. அதற்கும் பால் தராவிட்டால்... அழுது, அடித்து, திமிறி, துடித்து, தாயின் இடுப்பிலி ருந்து கொண்டே தாயின் கூந்தலேயும் சேலேத்தலேப் பையும் பிடித்து இழுத்துப் பாலேக் கேட்கத் துணிந்து விடுகிறது...

அந்தக் குழந்தைக்குத் தன் கொள்கையிலே இருக் கும் கண்டிப்பு, வாழும் ஆசை கொண்ட ஒவ்வொரு வனுக்கும் தேவை!

குழந்தைக்குத் தன் சக்தியைப் பற்றியும், தாயின் சக்தியைப் பற்றியும் கவனமே கிடையாது. அதன் கவன மெல்லாம் தன் கொள்கையில் தான், தன் தேவையில் தான்! இந்த ஒரு பாடம், உலக உள்ளங்க ளுக் கெல்லாம் முதல் பாடமாக அமைந்தால் தான் நல் லது!...

கூடிய விரைவில் நானும் காரியதரிசியும், மெம்பர் களும் நேராக முருகனின் வீட்டுக்குப் போய் பேசி வரு வோம். நம் ஊரில் ஒரு கூட்டுறவு பண்டகசாலே அமைத்

துக் கேட்போம். ஒரு அனுதை ஆஸ்ரமம் கட்டச் சொல்லுவோம்; ஆஸ்பத்திரிகளின் அவசியத்தையும் வற்புறுத்துவோம்...முதன் முதலாகப் புயலால் பாதிக்கப் பட்டவர்களுக்குத் தேவைப் பட்டதை வாங்கிக் கொடுக்கச் சொல்லுவோம்.

அவருக்குக் கதைப் பொருளாக, கட்டுரைப் பொருளாக, கவிதைப் பொருளாக முன்பு இருந்தவர்கள், நாம தானே. நம்மால், நம் நினைவால், நம் கதைகளால் வரும் செல்வம் நம்மிடம் வந்த பிறகு தானே அவரிடம் செல்லுவது முறை! அவ்வளவு தீவிரம் கூட வேண்டாம்... அவராகப் பாதியாவது தரக் கூடாதா?"

..................—...

இவ்வளவு தானய்யா அடியாள் பேசினேன். இதைக் கேட்டே கோபிக்கிருராம்...அழுகிருராம்...... ஆனுல் ஒன்று! நிச்சயமாக என்னுல் சொல்ல முடியும் 'நிதி பறி போகப் போகிறதே' என்று மட்டும் அவர் அழுதிருக்க மாட்டார்....இப்படி எல்லாம் நடக்க வேண்டியது வந்து விட்டதே என்று தான் அழுதிருப்பார், பாவம்!

இவ்வளவு வயதான பின்பும் ஏன் அழுது வடிகிருர்?...

தாயார் பால் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தி விடும் பருவத்திலேயே, அழுகையையும் நிறுத்தி விடுவது தானே மரியாதை......!

★

"தான் குற்றவாளியாக இருந்துகொண்டு ஊருக்குப் புத்தி சொல்வது, குஷ்டரோகம் பிடித்தவன் குழந்தைக்குக் கொடுக்கும் முத்தத்துக்குச் சமமானது"— என்று அவர்தான்முன்பு ஒருகட்டுரையில்எழுதியிருந்தார். இந்த வாக்கியத்தைக் குறிப்பிட்டு அவருக்கே கோபத்துடன் ஒரு கடிதம் எழுதினேன்!

## முருகன் :

வீட்டு வாசலிலே கோலமிட வேண்டிய கோலக் கரங்கள், வீதியிலே கூட்டம் கூட்டித் திட்டம் தீட்டுகின்றன!

திலகமிட வேண்டிய திரு விரல்கள் சங்கத்துக் காலண்டரில் தேதி கிழிக்கின்றன!

திருவிளக்கேற்றிப், பேசும் பொன்சித்திரங்களுடன் பேசி மகிழவேண்டிய பெண், தெருவிளக்குப் பக்கம் நின்று துண்டுப் பிரசுரங்களை வினியோகம் செய்கிறாள்!

தமிழகத்திலே உயிருடன் உலவிய அச்சம், பயிர்ப்பு, மடமை, நாணம் என்னும் நான்கையும், பிறக்கும்போதே செத்துப் பிறந்த ருக், யஜுர், ஸாம, அதர்வண என்னும் சதுர் மறைகளின் சமாதிக்குக் காவலாக வைத்துவிட்டாள்!

நான் நினைத்திருந்தால்......

அவளையே அழித்திருக்கலாம். அவளது சங்கத் தையே சட்டவிரோதம் ஆக்கியும் இருப்பேன். செய் தாளு? இந்த ஒரு உதவியை எண்ணியாவது அவள் இந்தப் பிறவி முழுவதும் என்னை வாழ்த்தியிருக்க வேண்டுமே!......பேப்பர்களைப் பார்த்தால் வயிறு எரிகி றது. கொஞ்சம்கூட பழமையை நினைக்காமல் பேசி யிருக்கிருளே, பாவி!

'தோழர்களே! எதற்கும் பயப்படாதீர்கள். கலங் கிக் கண்ணீர் சிந்தாதீர்கள். கடமை புரியுங்கள். கண் ணீர் சிந்துபவனைக் கண்டால் கடவுளுக்குச் சிரிப்பு தான்வரும்! கடமை செய்பவனைக் கண்டால் அவருக்கே கலக்கம் வந்துவிடும்...இதற்கு சான்றுகளும் என்ஞல் கூறமுடியும்!

அர்த்தராத்திரி போன்றிருக்கிறதே நம் வாழ்க்கை என்று அஞ்சாதீர்கள். ஆதவன் உண்டு என்பதை நம் புங்கள். விடிவதற்குள் விரக்தி மீறி விழிகளைப் பிடுங் கிக் கொள்ளாதீர்கள்......

முருகன் இன்னும் மாமூமலே இருக்கிருராம்' என்ன செய்வது? பேச்சு ஒன்று, செயல் வேருகி விட்டாரே!

"தான் குற்றவாளியாக இருந்துகொண்டு ஊருக்குப் புத்தி சொல்வது, குஷ்டரோகம் பிடித்தவன் குழந்தைக்குக் கொடுக்கும் முத்தத்துக்குச் சமமானது"—என்று அவர் தன் முன்பு ஒரு கட்டு ரையில் எழுதியிருந்தார். இந்த வாக்கியத்தைக் குறிப்பிட்டு அவ ருக்கே, கோபத்துடன் ஒரு கடிதம் எழுதினேன்.

"முட்டாளின் கோபம்தான், மூளையுள்ளவனுக்கு மூலதனம்" என்ற ஒரே வாக்கியத்தில் மூன்று மூனுக்களை வைத்துப் பதில் எழுதிவிட்டார். பரவாயில்லை... அவர் ஒரு சினிமா வசனகர்த்தா...ஆகவே மன்னிக்கலாம்!

இன்றைய தாங்கமுடியாத கஷ்டங்களை உணருகிறேன். பட்டினிச் சாவுகளைப்பற்றிக் கேள்விப்படும்போது, நமது மனமே சதிவேலைகளில் நாட்டம் கொள்கிறது. சீச்சீ! அது மனிதப் பரம்பரைக்கே மகத்தான துரோகம் அல்லவா?—என்றுதான் பொறுமை கொள்ள வேண்டியதிருக்கிறது......

இதற்காகச் சாகும் வரையிலும் பொறுமையாக இருக்க முடியாது. கோரிக்கைகளைக் கேட்போம். வெற்றிக்காக இறுதிவரை போராடுவோம். "இறுதி" என்னும் பதம் முதலாளித்வத்தின் இறுதியைக் குறிப்பதாயிருந்தாலும்சரி, துயரங்களின் இறுதியைக் குறிப்பதாயிருந்தாலும்சரி, நமது இறுதியையே குறிப்பதாயிருந்தாலும் சரி...கவலை இல்லை!......

நாளைக் காலையில் நானும் காரியதரிசியும், சில மெம்பர்களும் முருகனை நேரில் கண்டு உதவி கேட்கப் போகிறோம். சம்மதித்தால் நிம்மதி பெறுவார். இல்லையெனில் எதைப் பெறுவார் என்பது எவருக்குமே தெரியாது...ஏனென்றால், அதெல்லாம் சூழ்நிலைத் தெய்வத்தின் சூட்சமமான விஷயங்கள்!"

அழகாகத்தான் பேசியிருக்கிறாள். அவ்வளவும் என் தமிழ். என்னிடம் பயின்ற தமிழை என்னிடமே

எறிகிருள். குருதேவனுக்குக் கொடுக்கவேண்டிய காணிக்கைக் காசுகளை, குறிபார்த்துக் குருதேவனின் கண்களில் எறிகிருள். அருமையான சிஷ்யை!...... சீச்சீ...நன்றி கெட்டவள்! தனக்கு உதவாத முருகனைத் தகர்த்து எறிந்துவிட வேண்டும். இதுதான் அவள் குறிக்கோள்போலும்!

பெண்களிடம் இரக்க சித்தம் அதிகம் என்பதெல்லாம் வெறும் பிதற்றல். "பெண் என்றல் பேயும் இரங்குமாமே"—ஏன் இரங்காது...? பேய்க்கு என்ன, அதைவிட பொல்லாததுக்குக்கூட தன் இனத்தைக் கண்டால் ஒரு இரக்கம் வரத்தான் செய்யும்!

மஞ்சள் கயிற்றுத் தாலியை அவளுக்கு லஞ்சமாக நான் கழுத்தில் கட்டிவிடவில்லை. அந்த ஒரே குற்றத்துக்குத் தண்டனையாக எனக்குத் தூக்குக் கயிற்றைத் திரித்து, தயார் செய்துகொண்டிருக்கிறது, பெண்ணுலகம்!

கண்ணகி கக்கிய கனல் மதுரையில் மட்டுமல்லாமல் பெண்ணினம் எங்குமே வியாபித்துவிட்டதோ என்று நடுங்குகிறேன்.

கண்ணகித்தாய் அப்படிப் பொறுத்திருக்கவும் வேண்டாம்; கடைசியில் அப்படி பொங்கி எழுந்திருக்கவும் வேண்டாம்! அந்த அன்னை பத்தினிதான்—பாராட்டலாம், தனிப்பட்ட முறையில், தமிழ்ப் பண்பின் சார்பில்; தமிழ்ச் சரித்திரத்தின் சார்பில்!... ஆயினும் அவள் பொறுமை மதுரையம்பதியின் நிரபராதிகளையும் நீராக்கிவிட்டதே என்பதை நினைக்கும்போது, "அகழ்

வாரைத் தாங்கும் நிலம்போல" என்ற குறளையே அசைத்துப் பிடுங்கி எறியத் தோன்றுகிறது! மன்னிக்கவும்!

இருக்கட்டும்...சிலப்பதிகாரத்தில் அதெல்லாம் இளங்கோவடிகளின் கைச்சரக்காக இருக்குமானல் இரட்டை மகிழ்ச்சி!

எப்படியோ போகட்டும்...சரியாகப் பொழுதைப் போக்கத் தெரியாதவன் பேசிக்கொண்டிருக்க வேண்டிய ஆராய்ச்சி விஷயமல்லவா, அதெல்லாம்!

சில நாட்களாக...?

என்னைப்பற்றி நினைத்தால்...

எனக்கு என்னமோ வர வர என் நடவடிக்கைகளிலேயே பயம் வருகிறது. அதிலும் எதிரியான பகவதி மீதுகூட பச்சாத்தாபம் உண்டாகிறது, பாவம், நல்ல பெண்மணி! என்னிடம் முதலாளித்வம் இருந்தால் இவளுக்கு என்ன...! 'கொண்டவன் குடிகாரனுக இருந்தாலும் கூத்திக்கள்ளனுக இருந்தாலும் அவனையும் கொண்டு திருத்த முயலாமல், முன் கோபத்துடன் எதிரியாகவே கிளம்பிவிட்டாளே.

மரத்தில் பாம்பு ஏறினல் அதைத் தந்திரமாக விரட்டாமல், மரத்தையே வெட்டி வீழ்த்துவதா வீரம்? பாவம், அனுதாபப்படுகிறேன். வேறு என்ன செய்ய முடியும்?

முகத்தோடு முகம்!

கையோடு கை!

கழலோடு கழல்!

நெஞ்சோடு நெஞ்சு!

கருத்தோடு கருத்து!—

இவ்வளவு கூடி விளையாடிக்கொண்டாடிய குளிர் பூமியிலே... பூகம்பம்!

சபலமுள்ளவன் நான் என்பது தெரிந்தும் என்னிடம் சபதம் இடுகிறாளே!

நான் என்ன செய்யட்டும்?

வீழ்த்தும் சாதனங்கள் என்னை வாழ்த்தும் சாதனமாகும் அளவுக்கு வெற்றி கொண்டு விட்டனவே கெட்ட பழக்க வழக்கங்கள் கொஞ்சமாவது இல்லாமல் தீராது என்ற நிலைமைக்கு வந்துவிட்டேன். அதிலும் மதுவை விடவே முடியவில்லையே! விடுவதென்றால் இறந்து போவேனும். இதற்கு மட்டும் டாக்டரேசற்று சலுகை காட்டுகிறார். அய்யோ... அய்யோ ...சுடுகாட்டிலேயே, குடியிருக்கும் வீட்டை அமைத்துக் கொண்டேனே, முட்டாள்!

இனி அவ்வளவு தான்!

எண்ணுவதிலோ, உண்ணுவதிலோ, பேசுவதிலோ, எழுதுவதிலோ எதிலும் பயன் இல்லை.

வீண், வீண், எல்லாம் வீண்!

கடவுளைக், கையெடுத்து அடிக்கொரு தரம் கும்பிட்டுக் கொண்டிருப்பதில் கூட காலத்துக்கு நஷ்டமும், கைகளுக்குச் கஷ்டமும் தான், கண்ட பலன் என்ற தீவிரமான முடிவுக்கும் கடைசியில் வந்து விட்டேன்!

★

# பகவதி :

சிரித்த முகம்!

சிவந்த மேனி!

அழகானவர்!

அன்பானவர்!

கவிஞர்!

தத்துவ ஞானி!

வாழ்வின் முற்பகுதியில் ஏழைகளுக்காகவே வாழ்ந்தவர். பிற்பகுதியிலும் என் அன்பை இழக்காதவர்!

குறும்புக்காரர்!

எதற்கும் எப்போதும் 'குஷி'யாகவே இருப்பவர்... அவர்...அந்த முருகன்...?

இன்று...

தன் வீட்டிலே...

கட்டிலிலே கிடத்தப் பட்டிருந்தார். அப்போதும் 'அன்பு' அவரது வதனத்தை விட்டு விலகாமலே இருந்தது.

இரவு படுக்கையில் படுத்தவர்தான். அப்புறம் எழுந்திருக்கவே இல்லையாம்! டாக்டர்கள் சூழநின்றனர். சில நாட்களாகவே மார்புவலி அவரை மிகவும் பாதித்த தாகக் கூறினர்கள். அது தான் காரணமாக இருக்க லாம் என்று முடிவும் செய்தனர்...மேலும், அதிகச் சிந் தனையும், கவலையும் வேண்டாம் என்று முருகனிடம் முன் எச்சரிக்கையாகச் சொல்லி யிருந்தும், இந்த முடிவு வந்ததை எண்ணி வருந்தினர்...மேலும் சிந்தித்தனர்; அவர்கள், பாவம், தங்களுக்குள் மார்பு வலியைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விட்டனர், அங்கு வைத்தே!

சென்னையிலிருந்து முருகனுடன் வந்திருந்த பிர பல நடிகை மங்களா அவரது சடலத்தில் விழுந்தாள்—அழுதாள்—புரண்டாள்—சுருக்கமாகச் சொல்லப் போனுல், எங்களை எல்லாம் 'கேமரா'க்களாக எண்ணி நடித்தாள்—என்ன வெல்லாமோ புலம்பினுள். அந்தப் புலப்பங்களிலே அடிக்கடி என் காதில் விழுந்த வாக்கி யம், "நாம் கல்யாணம் செய்து ஆறு மாதம் கூட ஆக வில்லையே" என்பது தான்!

எனக்கு ஒரே சங்கடம். யார் இப்போது அவளிட மிருந்து முருகனின் சொத்துக்கு உரிமை கொண்டாடி வாதாட வந்தது? அதற்குள்ளே அவளாகவே புலம்பல் மூலம் சொல்லிக் காட்டி, தனக்கு முருகனின் சொத்தில் இருக்கும் பூரண உரிமையை நிலை நாட்டுகிருளே? அவள் பாவம், என்ன செய்வாள், சினிமாக்காரி!

இன்னும் எந்தனையோ தினுசில் அங்கே லௌகீ கம், பாரமாத்தீக உருவில் உலவியது!

முருகனின் சட்டைப் பையிலிருந்த சாவியை எடுத்து மங்களா அருகில் நின்ற ஒருவன் கையில் கொடுத்தாள். அந்த ஒருவனை யாரென நிமிர்ந்து நோக்கினேன். வேறு யாருமில்லை...முன்பு ஒரு நாள் முருகனின் உரிமைகளை என் வழியாகப் பிடுங்க வந்த துரோகி—நடிகன்—கலைஞன்—ஊரெங்கும் புகழ் பெற்ற முத்தமிழ்ச் சத்துரு வசந்தன்!!!

ஒருவகையில் மெய்யை விட பொய் பாக்கியம் பெற்றது. எப்படி என்றால் முதன் முதலிலேயே பொய்க்கு சங்கடமில்லாமல் கதையுருவம் கிடைத்து விடுகிறது. ஆனால், இந்த லௌகீக உலகில், மெய்க்கு கடைசியில் தான் கதையுருவம் கிடைக்கிறது!

மொத்தத்தில் மெய்யும் பொய்யும் சங்கமமாவது ஓரிடத்தில் தான்! என்ன செய்வது! இயற்கைத் தேவிக்கு அந்தச் சங்கமத்தில் நீராடினால் தான் நீராடியது போலிருக்கிறதோ, என்னவோ...?

மெய்யாயிருந்த முருகன் பொய்யாகி விட்டார்.

கதையைப் படைத்தவரே, கதாபாத்திரங்களில் தாமும் ஒருவராகி விட்டார்...அந்தோ...! கதை...கதை ...எல்லாம் கதை...! உலகமே ஒரு சிறு கதை!

கதையான அதையெல்லாம் ஒரே ஒரு நொடியில் துறந்து விட்டேன்.

பிறகு......?

ஒரே ஒரு மனதாகி......முருகனின் முறுவல் தவழும் குழந்தை முகத்தை...ஒரே ஒரு விநாடி...ஒரே ஒரு முறைதான் பார்த்தேன்!

அப்புறம் பார்க்க முடியவில்லை. கண்ணீர்த் துளிகள் என் கண்களை அடைத்துக் கொண்டன.

எடுத்துக் காட்டாக இருந்திருக்க வேண்டிய எழில் ...எச்சரிக்கையாகப் போய்விட்டது!

அணிந்திருந்த என் "சிவப்புச் சேலை"யில் தலைப்பிலே, என் கண்ணீர்த் துளிகளை ஐக்கியப் படுத்தினேன்.

எப்படியோ...?

சங்கக் கட்டிடம் வருவதற்குள் என் சேலைத்தலைப்பில் தங்கியிருந்த கண்ணீர்த்துளிகளின் ஈரம் காய்ந்து விட்டது!

முற்றிற்று.



# சூழ்நிலைத் தெய்வம்

உலகில் ஒருவரை நோக்கி மற்றொருவர், ஐயோ! பாவம் என்று சொல்லுவது தப்பு. எல்லோருமாகச் சேர்ந்து, கோரஸாக கடவுளை நோக்கி, 'ஐயோ, பாவம்' என்று சொல்லுவது தான் புதுயுகதர்மம்.

## மரகதம் :

இலக்கியம் என்பது என்ன?

இலக்கிய கர்த்தாவின் நாசூக்கான டைரி!

0 0 0 0

பெருந்தன்மை என்பது என்ன?

பல, சிறுதன்மைகள் கூடியதுதான் பெருந்தன்மை!

0 0 0 0

உம் பிறவி நோக்கம் என்ன?

கலைமகளின் கைபட்ட இடங்களில்தான் என் இதயம் ஐக்கிய மாகிறது. நாளைக்கு எனக்காக சிதையில் அடுக்கப்படும் வரட்டிகள்கூட கலைமகளின் கைகளால் தட்டப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதே எம் பிறவி நோக்கம்!

0 0 0 0

தலையில்தான் அடித்துக்கொள்ள வேண்டும். எவர் எப்படிக் கேள்விகள் கேட்டாலும், இவர் இந்த தினுசில்

தான் பதில் தருகிறார். அழகாகவும் இருக்கிறது. அவரது இலக்கிய உலகின் ஒவ்வொரு மூலையிலும், தெளிவும், எழிலும், பயனும், பண்பும் குவிந்து கிடக்கின்றன. குறைச்சல் இல்லை!

ஆயினும், மற்றய உலகப் பொருள்களை ஒருவருக்கொருவர் வழங்கமுடிவதைப் போல், ஆயுளையும் வழங்கிக் கொள்ளமுடியுமானால் என் ஆயுளையே அவருக்கு வழங்கி இருப்பேன்.

கனகசுந்தரம்! நேர்த்தியான பெயர்! விளையாட்டாகச் சொன்னாலே இசைகிடைக்கிறது! நினைக்க நினைக்க இனிக்கிறது! பெருமிதம் நிறைந்த ஒருவித பெருமூச்சு வருகிறது!

அவரிடம்...?

ஒரே ஒரு சேஷ்டை மட்டும் குடிகொண்டிருக்கிறது. எந்த இலக்கிய கர்த்தாக்களின் சிருஷ்டிகளையும் அவர் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார். தன் குஞ்சைப் பொன் குஞ்சு என்று காக்கை உரைப்பதில் தாய்மை வேண்டுமானால் இருக்கலாம்—தூய்மை இருக்கிறதென்று கூறமுடியுமா? கிள்ளை தன் குஞ்சை நோக்கி அப்படிக் கூறுவதில் கூட தூய்மை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே ஒரு பறவை எல்லாப் பறவைகளின் குஞ்சுகளையும் நோக்கிப் பொன் குஞ்சுகள் எனப் புகழுவதாக வைத்துக் கொள்ளுவோம் அதில்தான் நான் விரும்பும்—தூய்மையைக் காணுகிறேன்.

கனகசுந்தரம். அறிவாளியாக இருக்கலாம். அதற்காக ஏன் அவர் ஊரிலுள்ளவர்களை ஒரே முறைப்பாக முறைத்துப் பார்த்துக்கொண்டே வீதியில் செல்ல வேண்டும்...?

புகழ் வாங்கியவராக இருக்கலாம். அதற்காக, புகழ் வாங்கிய மற்றவர்களை ஏன் அவர் தாக்கவேண்டும்!

இலக்கியம் தனது உடமைதான் என்ற முறையில் பேசுகிறாரே—இமயமலையை, தாஜ்மகாலை தங்களுக்குத் தான் சொந்தம் என்று இந்தியர்கள் பேசுவதுகூட எனக்குப் பிடிக்காதே.

பேனாவை எழுதுவதற்காக உபயோகப்படுத்தக் கூடாதா? ஏன் அடுத்தவர்களின் கண்ணைக் குத்துவதற்காகவே உபயோகிக்கிறார்?

காந்தியாருக்காக நாட்டில் நினைவுச் சின்னங்கள் எழுந்த நாட்களில், அவர் அபிப்ராயம் தெரிவித்ததை நினைக்கும்போது எவருக்கும் கோபம்தான் வரும்.

மண்டபம் கட்டி காந்தியின் மணிமொழிகளை ஒருவர் பொறித்தார்—"எழுதி என்ன பயன், மணிமொழிகளைத்தான் வௌவால்கள் வந்து தொங்கி மறைத்துக் கொண்டிருக்கின்றனவே" என்று பதில் எழுதினார்.

ஒருவர் அன்ன சத்திரம் கட்டினார்—"சோம்பேறிகளைப் பெருக்கும் சுத்த சன்மார்க்கத்தின் முதல்திட்டம் உருப்பெற்றது" என்று அபிப்ராயம் கூறினார்.

இன்னுமொருவர், சத்தியசோதனை, கீதை, பைபிள், குறள் போன்ற புத்தகங்களை வாங்கி, ஏழைப்

பிள்ளைகளுக்கு இனமாகக் கொடுத்தார்—"பழைய புத்தகக் கடைகளில் இனி கீதை, சத்தியசோதனை, பைபிள், குறள் போன்ற புத்தகங்கள் கிடைக்கும்" என்று நகைச்சுவை பேசினார்!

காந்திநகர் என்னும் ஊர், இந்தியாவிலுள்ள பாக்கி நகர்களை எல்லாம் நோக்கி, "நீங்கள் எல்லாம் யாருடைய நகர்கள்" என்ற கேள்வியை மோனமாகவே கேட்டுக் கொண்டிருக்கின்றன, என்று கற்பனை பெய்தார்!

ஒரு பெரியவர் பள்ளிக்கூடம் கட்டினார்—"பட்டினி கிடப்பவர்களிடையே இனி பட்டதாரிகளையும் காணலாம்" என்று இதயமில்லாதவர் போல எழுதிவிட்டார்.

ஒரு பிரபலஸ்தர், காந்தியார் உயரத்திற்கே ஒரு சிலை செதுக்கி பந்தோபஸ்துக்காக சுற்றிலும் கம்பிகள் நட்டு, பொதுப் பார்க்கில் கொண்டுவைத்தார்—"உலகக் கோர்ட்டின் முன் காந்தி ஒரு குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறார்" என்று மிகவும் கவலை பேசினார்.

இவர் இவ்வாறு பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஒரு செல்வந்தன் தனது செல்வத்தை இரும்புப் பெட்டிக்குள் போட்டு பூட்டி சும்மா வைத்திருந்தான்—"கோட்சேயாவது காந்தியை ஒரே தடவையில் கொன்றான்—இந்தச் செல்வந்தன் காந்தியின் கையையும் காலையும் கட்டி இரும்புப் பெட்டிக்குள் போட்டு மடக்கி திணித்து வைத்திருக்கிறான்" என்று பயப்படாமல் எழுதிவிட்டார்.

அப்புறம் அந்தச் செல்வந்தன், ஒரு பஜனைக்கூடம் எழுப்பி, சதா "ரகுபதி ராகவ ராஜா ராம்" பாடிக் கொண்டிருக்க ஏற்பாடு செய்தான்—"இதைவிட இனிமையும், கருத்தும் உள்ள பாடல்கள் எத்தனையோ சினிமாவில் வந்திருக்கின்றன" என்று அப்போதும் மறுப்பு கூறிவிட்டார்.

இப்படியே...எதை எடுத்தாலும் சரி. அது அதற்குத் தகுந்த வகையில், தன் கண்கொண்டு மாத்திரம் பார்த்து அபிப்ராயம் தெரிவித்துவிடுகிறார்.

இவரால் தாக்கப்படுபவர்கள் கூட இவரது இலக்கியத்தை நன்றாகப் பாராட்டுகிறார்கள். தாயும் குழந்தையும் பால் பரிமாறும் சிறுவயதில் கோபத்தில் தங்களுக்குள் திட்டிக்கொண்டாலும் அங்கே அழகு பிறக்கலாம், வளர, வளர அழகோடு திட்டிக்கொண்டாலும் அங்கே கோபம் பிறந்துவிடும்!

அப்படித்தான் கனகசுந்தரமும். அவரது ரசிகர்களும் என்று பொறுத்திருந்தேன். பயனில்லை. வளர, வளர இவரும் பிறரைத் தாக்குவதிலேயே வளர்ந்து வந்தார்—தாக்கப்படுவர்களும் இவரை ரசிப்பதிலேயே வளர்ந்து வந்தார்கள்.

எனக்கும் ஆரம்பத்திலிருந்தே கனகசுந்தரம் இனியவராகவே தென்பட்டார். அவரது இலக்கியத்தின் வழியாகச் சென்றே, அவரது இதயத்தை தரிசித்தேன்.

பொதுவாக அவருக்கு எதிலுமே ஒரு வித சலிப்பு—அந்தச் சலிப்பு பட்டினத்துப் பிள்ளையார் போன்றவர்களின் சலிப்பாகவும் இல்லை.

எதிலுமே ஒருவித கோபம்—அந்தக் கோபம், துஷ்யந்தன் சகுந்தலைக்கிடையே அநாகரிகமாகக் குதித்த துர்வாசர் போன்றவர்களுக்கு வருவது போன்றும் இல்லை!

எதிலுமே ஒரு தினுசான அலட்சியம்—உலகைப் படைத்து விட்டு, அதனிடம் அலட்சியம் காட்டும் கடவுளை விட இவர் நல்லவர்தான்!

எது எப்படியிருந்தால் என்ன! மொத்தத்தில் அவர் என்னைக் கவர்ந்து விட்டார் என்று ஒரே வாக்கியத்தில் முடித்து விடுவதுதான் நல்லது. ஏனென்றால், அன்பைப் பற்றி தீவிரமாகப் பேசும் சபைகளிலிருந்து, அறிவு வெளியேறி விடும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!

இவ்வளவு பேசுகிறேன். எனக்கும் அவருக்கும் இன்னும் நேரடியான தொடர்பு கிடையாது. அவரிடம் நெருங்கிப் பழகியவர்களைக் கூட எனக்கு அறிமுகம் கிடையாது. அவரைப் பற்றிய குறிப்புகள் சில பத்திரிகைகளில் வருவதுண்டு. அவைகளை வைத்துக் கொண்டு இவ்வளவு தூரம் அலசிப் பேசுகிறேன்—அன்புசெலுத்தும் அளவுக்குத் துணிந்தும் விட்டேன்.

என் கல்லூரி தோழிகளிடம் மட்டுமல்ல, ஆசிரியைகளிடமும் அவரது இலக்கியம் பரவியது என்னால்தான் என்பதை எத்தனை முறை வேண்டுமானாலும் நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவேன். மாணவிகள் பாடப் புத்தகங்களை மறந்து வீட்டில் வைத்து விட்டு, வந்தபோதும், கனக சுந்தரம் எழுதிய புத்தகங்களைக்

கொண்டு வர மறக்க மாட்டார்கள். கனக சுந்தரத்தின் புத்தகம் கைகளில் தவழுவதையே ஒரு கௌரவமாக ஒருவருக்கொருவர் கருதத் தலைப் பட்டனர்! மாணவி கள் கட்டுரை எழுதும் போது கனக சுந்தரத்தின் எழுத் துகளை மேற்கோள் கொடுத்து பேச ஆரம்பித்தனர். என்னமோ, கனகசுந்தரத்தை யாரேனும் புகழும் போது,எனக்கு மெய் சிலிர்க்கிறது!

ஐந்தாறு மாணவிகளாக இருந்து கொண்டு அவ ரது கவிதைகளை, கட்டுரைகளை, கதைகளைப்பற்றி பேசு வோம்—ரசிப்போம். ஆனால், எனது ஆசிரியை வசந்தா என்பவள் மட்டும், வகுப்புகளில் கனக சுந்தரத்தின் இலக்கியத்தில் பிழை கண்டு பேசுவாள். அது நிஜ மான தாக்குதலா, அல்லது நிகரற்ற அன்பின் விளைவா என்பதைக் கண்டு பிடிக்கவே முடிய வில்லை.

வசந்தா! எனது ஆசிரியை என்பதைவிட எனது உயிர்த் தோழி என்பதே பொருந்தும். மேடை ஏறிப் பேசுவது முதல், சகல விவகாரங்களிலும் அவள் ஒரு மேதை. என்னிடம் அவளுக்கு அலாதிப் பிரியம். மிகவும் நேர்மையானவள். திருமணம் கூட இன்னும் ஆகவில்லை. வகுப்புத் தவிர, பாக்கி இடங்களில் எல்லாம், நான் அவளை "வசந்தா, வசந்தா" என்று பெயர் சொல்லித் தான் கூப்பிட வேண்டுமாம். அதையும் மீறி நான், "நீங் கள்" என்ற பண்பில் அழைத்தால், அவள் முகம் சுளிக் கத் தொடங்கும். "மரகதம்! நமது இதயம் ஒருமையான பிறகுமா, நாம் பன்மையில் ஒருவரை ஒருவர் அழைத் துக் கொள்ள வேண்டும்" என்றாள், ஒரு நாள். அன்று முதல் மிகவும் சகஜமாகப் பழகினேன். அவளது

தொடர்பிலே தூய்மையும் பயனும் என்னிடம் வளருவதைக் கண்டு என்னை நானே வியந்து கொள்வதும் உண்டு.

வசந்தா சிலசமயம் பேசுவாள். அதிலே, மீரா, சாந்த் பீபீ, சரோஜினி தேவி, ஆண்டாள் போன்றவர்களுக்குப் புகழ் இருக்கும்—மாதவி பரம்பரைகளுக்கு மன்னிப்பும் இருக்கும். ஆகா! அவளது அழகும் அன்பும், அறிவும்...... இவளருகில் நான் நின்று என்ன பயன்? எவனாவது தகுதியான ஒருவன் நின்றால்தானே பரிபூரண பலன் கிட்டும். வீணையின் பக்கத்தில்வீணையா வருவது? விரல்கள் அல்லவா வரவேண்டும்?

இந்த அளவுக்கு என்னைக் கவர்ந்த வசந்தாவிடம் கூட, என் கனக சுந்தரத்தை நான் விட்டுக் கொடுத்து பேசமாட்டேன். அவள் எதிர்த்துப் பேசும் போதெல்லாம், என்னவர் எதிர்ப்பில்லாமலே பெரியவர் ஆகி விடுவார், நீ ஏன் வீணாக சிரமப் படுகிறாய்—என்று நகைச்சுவை பேசி மழுப்பி விடுவேனே தவிர, நான் அவளுடன் சமரசமாக மாட்டேன்!

என்வரையில்......

கனக சுந்தரம், இமயமலை!

வசந்தா, நான் உலாவி விளையாட உதவும் சிறு குன்று!

சிறு குன்று உபயோகப் படும் அளவுக்கு இமய மலை உபயோகப் படாது என்பது உண்மைதான்! ஆமி

னும், மதிப்பு என்பது, கேவலம், உபயோகத்திலிருந்து மட்டும்தானு உதிக்கிறது?

தந்தையை இழந்த என்னை தாய் படிக்க வைத்தாள். தன் மகள் பட்டம் வாங்கியவளாக இருக்க வேண்டும் என்பதும், அதன் மூலம் ஒரு பெரிய பணக்காரர் வீட்டுக்குப் பாலம் அமைத்துப் போய் உலாவி வர வேண்டுமென்பதும் தான் அவள் இலட்சியம். இதை அறிந்தும் அறியாதவளாக நான் என் அன்னையிடம் பேசுவேன். ஊரில் அகப்பட்ட பண்ணையார்களின் பிள்ளைகள் படம் எல்லாம் என் மேசையில் வந்து குவிந்தன. எனக்கு இதைப் பற்றி எல்லாம் எண்ணவே நேரம் ஏது? சதா கனகசுந்தரம்தான்; ஓய்விருக்கும் போது அதையும் வசந்தா அபகரித்துக் கொள்வாள்.

அன்றொரு தபால் வந்தது. தனியறை சென்று படித்தேன், நான் எதிர்பார்த்த இடத்திலிருந்து வந்த கடிதம்தான் அது. படித்தேன், படித்தேன், வாக்கியங்கள் மனப்பாடம் ஆகும்வரை படித்தேன்...அப்புறம் கடிதத்தை மடக்கி வைத்து விட்டு, தானுகப் பாராமல் சொல்லி பார்த்தேன்:

"அன்புள்ள மரகதம்!

உன் கடிதம் என்னைப் புத்துலகம் கூட்டிச் சென்றது. நானும் தட்டாமல் சென்றேன், அழகாக எழுதியிருக்கிருய். உனக்குச் சொர்க்கத்தை நீயே படைத்துக் கொண்டாய். உன்னை வாழ்த்துகிறேன்.

"அன்பரே! நான் விரும்புவதை நான் அடைந்து விட்டேனு, அடைய வில்லையா என்பது எனக்கேதெரிய

வில்லை" என்று எழுதியிருக்கிறாய், சரியான மயக்கம். இத்தகைய மயக்கம் நீங்கப் பெற்றவர்கட்குத்தான் புதுப் பிறவி கிட்டுகிறது, மரகதம்! குழந்தையை ஈன்றவுடனே தாய்க்கு வருவதும், கூடிய காதலர்களின் குறைந்த குரலில் இருப்பதும், இத்தகைய மயக்கம்தான்.

அஞ்சாதே! நீயும் நானும் அண்மையில்தான் இருக்கிறோம். பூகோளமும், சரித்திரமும் கண்டறியாத புத்துலகில் நாம் வாழப் போகிறோம் பார்!

பிற நேரில். கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் நாளையே என்னைச் சந்திக்க வரமாட்டாயா?

உனது,

**கனகசுந்தரம்"**

ஆகா! கடிதத்தை மனப் பாடமே செய்து விட்டேன் என்பதை நினைக்க நினைக்க எனக்கு வெட்கம் தான் வந்தது. வரச்சொல்லி யிருக்கிறார், அதற்கே இவ்வளவு வெட்கமா என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன். மீண்டும், கடிதத்தின் வாசகங்களைச் சொல்லிக் கொண்டே எனது புத்தகங்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். அம்மா வந்திருக்கிறாள். அதைக்கூட அறியாமல் வாசகங்களைச் சொல்லிக்கொண்டிருந்திருக்கிறேன். இந்த ஆசை எனக்குச் சுவாசத்தைப் போன்றதாகி விட்டது. என்னால் நிறுத்த முடியுமா? அதாக, அதாவது, இயற்கையாக நினைத்து இந்த ஆசையை நிறுத்தினால் தான் நிற்கும்! இந்த சிந்தனையில் திரும்பினேன். கடிதத்தை பெட்டிக்குள் வைத்தவாறே, "என்னம்மா விசேஷம்" என்

றேன். அவள் "பார்த்தாயா மரகதம்" என்று கேட்டாள் "பார்த்தேன் ரொம்ப சந்தோஷம்" என்று பதில் சொன்னேன். அவளுக்கு அந்த மகிழ்ச்சி கூட தாங்க முடியாமல் என்னருகில் வந்து, தன் சேலைத் தலைப்பினால் என் நெற்றி வியர்வையைத் துடைத்தாள். "இரு! காபி கொண்டு வருகிறேன்" என்று அடுக்களை சென்றாள். பாவம், அவள் "பார்த்தாயா" என்று கேட்டது, திருமணத் தேர்தலுக்கு அவள் வைத்துப் போன படங்களை! "பார்த்தேன், ரொம்ப சந்தோஷம்" என்று நான் சொன்னது, கனக சுந்தரத்தின் கடிதத்தை!

ஐயோ, ஐயோ! நல்ல வீடம்மா இது! சில வேளையில் அம்மா என்னை நோக்கி "ஐயோ! பாவம்" என்கிறாள். சில வேளைகளில் நான் அவளை நோக்கிப் பாவம் என்கிறேன். உலகில் ஒருவரை நோக்கி மற்றொருவர் "ஐயோ பாவம்" என்று சொல்லுவது தப்பு; எல்லாரும் சேர்ந்து கோரஸாக கடவுளை நோக்கி 'ஐயோ! பாவம்' என்று சொல்லுவது தான் புது யுக தர்மம். அதில் பிரார்த்தனையின் பலனை விட அதிகப் பலன் கிடைத்தாலும் கிடைக்கலாம்!

இப்படி எதை எல்லாமோ நினைத்துக் கொண்டு அன்றையப் பொழுதை எல்லாம் போக்கி விட்டேன். கனக சுந்தரம் என்னை அழைத்த நாள், கிழக்கில் பூத்தது. புறப்பட்டேன். புது முறையில் ஒன்றும் என்னை நான் அழகு படுத்திக் கொள்ளவில்லை. கோயிலுக்குச் செல்லும் பக்தன் கூட தன் குடுமியை சீவி முடித்துக் கொண்டு தான் போவான். ஆயினும், நான் என்னை அன்று அழகு செய்து கொள்ள ஆசைப்பட வில்லை. நான் நினைக்கிறேன், அவர் கோயிலை விட நல்ல இடத்

தில் இருக்கிறார்—நான் பக்தனைவிட நல்ல நிலையில் இருக்கிறேன்!

அவர் எழுதிய கடிதத்தை மட்டும் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டேன்.

வீட்டை விட்டு இறங்கி நடந்தேன். வசந்தாவையும் அவள் வீட்டில் போய் துணைக்குக் கூட்டிக் கொள்ளலாமா என்று நினைத்தேன். அப்புறம், 'வேண்டாம்' என்று தோன்றியது. நான் மட்டும் தனியாக நடையைக் கட்டினேன்.

தமிழாசிரியரை பாதையில் கண்டேன். எந்த நிலையிலும் நான் அவரைக் கண்டு விட்டால் பணிவுடன் வணக்கம் செய்வதுண்டு. அன்றும் அப்படியே வணக்கம் செய்தேன். கைகள் மட்டும் பதறின.

எங்கேயோ, எதையோ திருடப் போகிற ஒரு வித உணர்ச்சி என்னுள் உலவியது.

பின்னும் நடந்து கொண்டேயிருந்தேன். ஆஸ்தீகர்களின் அட்டகாசம் தாங்க முடியாமல், 'தலைவிதி' என்று நாஸ்தீகர்கள் கூட சில சமயம் தலையில் அடித்துக் கொள்ளுவதுண்டல்லவா! அப்படிப் பட்ட பரம்பரை வியாதியாலோ, அல்லது பழைய பண்பினாலோ, நான் போகும் போதும், வரும் போதும் வீதியில் இருக்கும் பிள்ளையார் கோவில் முன் நின்று ஒரு நிமிஷமாவது கும்பிட்டு செல்வது வழக்கம். அன்றும் அப்படியே கும்பிடுவதற்காக நிமிர்ந்து திரும்பினேன். பிள்ளையார் கோவிலையே காண வில்லை......"இதென்ன மாயம்"

என்று பின் புறம் திரும்பிப்பார்த்தேன். பிள்ளையார் கோவில் எனக்கு பின்னே ஒரு பர்லாங் தூரத்தில் இருந்தது......அதாவது, எப்படியோ என்னையறியாமல் பிள்ளையார் கோவிலைக் கடந்து வந்திருக்கிறேன். வருந்தினேன். மீண்டும் திரும்பி 1-பர்லாங் நடந்து பிள்ளையாரை தரிசிக்கலாமா—என்று நினைத்தேன். ஆனால்... அதே 1-பர்லாங் தூரம் திரும்பாமல் நேராகவே நடந்தால், கனக சுந்தரம் தங்கியிருக்கும் பத்திரிகை ஆபீஸ் இருக்கிறது! ஒரு கணம் நின்றவாறே யோசித்தேன். திரும்ப வில்லை! நேராகவே நடக்க ஆரம்பித்தேன்!

★

சந்தோஷத்தைப் பெற எண்ணி சந்தர்ப்பத்துக்கு லஞ்சம் கொடுப்பது பைத்தியக்காரத்தனமடி.

## வசந்தா :

பத்திரிகை அலுவலகத்தில் என்னைக் கண்டதுமே அவளுக்கு அதிர்ச்சி உண்டாகி விட்டது. 'ஏது மரகதம், என்ன சேதி' என்று கேட்ட கணத்திலேயே அவளது உடல் வேர்த்துப் போய் விட்டது. 'ஒன்றுமில்லை, கனக சுந்தரத்தைப் பார்த்துப் போகலாம் என்றுதான் வந்திருக்கிறேன்' என்று சொல்லும் போது, அவளது நாக்கு தாளம தவறி நடனமாடியது. 'நானும் அவரைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்' என்று நான் சொன்னவுடன், 'பார்த்தாயா வசந்தா, நம்மிருவருக்கும் உள்ள ஒற்றுமையை' என்று சொல்லி வியந்து கொண்டே தன் வெட்கத்துக்குத் திரை போட்டாள். பேச்சு வாக்கிலேயே அவளை அழைத்துக் கொண்டு, 'விசிட்டர்ஸ் ஹாலு'க்குள் சென்றேன்—அமர்ந்தோம்.

எங்களுக்கிடையே கனக சுந்தரத்தின் இலக்கியத்தைப் பற்றி விமர்சனம் கிளம்பியது. வழக்கம் போல், மரகதம் புகழ்ந்து கொண்டு தான் இருந்தாள்; நானும் வழக்கம் போல் இகழ்ந்து கொண்டு தான் இருந்தேன். 'அப்படியெல்லாம் பேசாதே, வசந்தா' என்று என்னை அன்புரிமையுடன் இலேசாகக் கண்டித்தாள்.

'மரகதம்! இலக்கியத்தையும் அன்பையும் போட்டு குழப்பாதே'—என்று வெடுக்கென பதில் சொல்லி விட்

டேன். அவளது முகம் லேசாகச் சிவந்தது. சிரித்து மழுப்பினேன்.

பாவம்! உலகத்தில் அவளுக்கு எது எப்படிப் போனாலும் சரி, கனக சுந்தரத்தின் இலக்கியம் மட்டும் சாகாவரம் பெற்றுலவ வேண்டும். அவரை மாத்திரம் எல்லாரும் எப்போதும் புகழ்ந்து கொண்டிருக்க வேண் டும்.

காலை மணி பத்து ஆகி விட்டது. அப்போது தான், அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள். கடைசியில் பத்திரிகையின் ஆசிரியர் சாம்ப சிவம் வந்தார். வரும் போதே "ஹல்லோ! மிஸ்டர் கனக சுந்தரம் வாருங்கள், உள்ளே வாருங்களேன்" என்று புன்னகை பூத்த முகத்துடன் அழைத்துக் கொண்டே தமது தனியறைக்குள் சென் ரூர். உடனே நான் மரகதத்தைப் பார்த்தேன். அவள் எதையோ களவு கொடுத்தவள் போல் அங்கும் இங்கும் ஒரு வித தடுமாற்றத்துடன் விழிகளை பாய விட்டுக் கொண்டிருந்தாள். நான் சிரித்தேன். தனியறைக்குள் நடந்தேன். அவளும் பதிலாக ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே, என்னைப் பின் தொடர்ந்து வந் தாள்.

ஆசிரியர் எங்கள் இருவரையும் நன்ருக உபசரித் தார். நான் மரகதத்தை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். அவரையும் மரகதத்துக்கு அறிமுகப்படுத் தினேன்.

அன்றுதான், கனகசுந்தரம் என்பது ஒரு ஆண் அல்ல, பெண் என்றும், அந்தப் பெண்ணும் ஒரு

அன்னியப் பெண்ணல்ல, நான்தான் என்றும் மரகதம் தெரிந்துகொண்டாளாம்!

பத்திரிகை அலுவலகத்தைவிட்டு வெளியே வந்ததும், என்னைத் தின்றுவிடுபவள்போல, ஒரு பார்வை பார்த்தாள்.

அதில் கோபத்தைக் கண்டேன்.

'என்ன மரகதம்! என்ன விஷயம்' என்றும் நயமாகக் கேட்டேன்.

'எல்லாம் வீட்டுக்கு, வா, பேசிக்கொள்ளலாம்' என்று அடக்கம் புகன்றாள்.

அதிலும் கோபம் அடக்கமாகி யிருப்பதைப்புரிந்து கொண்டேன்.

வீடு நோக்கி நடந்தோம். இடைவழியில், எங்களுக்குள் பேச்சே கிடையாது. ஏமாற்றமும், வெட்கமும்கூடி, எமன் செய்யும் வேலையை தாங்களே செய்யப்போவது போல் அவளை நெருங்கின!

வீட்டுக்குள் நுழைந்தோம். என் வயதான தாயும் மரகதத்தை நல்ல முறையில் வரவேற்றாள். அன்புடன் பேசினாள்.

எதற்கும் மரகதம், 'இம்' என்றுதான் இருந்தாள். நேரம் ஆக, ஆக அவளது முகத்தில் நிலவிவரும் குணத்தை என்ன பெயரிட்டு அழைக்கலாம் என்பது கூட எனக்கு பெருத்த ஆராய்ச்சியாகிவிட்டது.

காப்பி கொண்டு வைத்தேன்.

பேசாமல் இருந்தாள்.

'காப்பி குடி மரகதம்' என்றேன்.

நிச்சயமாக தான் சாகப்போகும் செய்தியை வைத்தியர் மூலமாகவே அறிந்துகொண்ட நோயாளி மருந்தை பிறர் சாந்திக்காக எப்படிப்பட்ட நினைவிலிருந்து கொண்டு, குடிப்பானே, அப்படிப்பட்ட நினைவிலிருந்து கொண்டு, நான் கொடுத்த காப்பியை என் சிநேகிதி குடித்தாள்.

'ஏன் இப்படி மரகதம்' என்றேன்.

'ஒன்றுமில்லை' என்ருள். சரி இவளை இனி குறும்பு பேசித்தான் குஷிப்படுத்தவேண்டும் என்று முடிவு செய்தேன்.

"மரகதம்! நீ இதுவரை கனவில் கண்டுகொண்டிருந்த ஆண் கனகசுந்தரம் உன் கண்முன்பு நேரில் தோன்றினல், அவனிடம் எப்படியெல்லாம் ஊடல் புரிவாயோ அப்படியெல்லாம் என்னிடமும் நடந்து கொள்கிருயே!......"

"வசந்தா......!"

"மரகதம்......!"

"வசந்தா! குறும்பு பேச இதுதான சந்தர்ப்பம்?"

"சமய சந்தர்ப்பம் பார்த்துத்தான இதுவரை நாம் குறும்பு பேசி வந்திருக்கிரேம். மரகதம்! சந்தோஷத்தைப்

பெற எண்ணி சந்தர்ப்பத்துக்கு லஞ்சம் கொடுப்பது பைத்தியக் காரத்தனமடி!...நல்ல பெண்ணம்மா, நீ. இனிமேல் மூச்சு விடக்கூட சமய சந்தர்ப்பத்தைத் தேடித் தவம்புரிவாய் போலிருக்கிறது."

"வசந்தா! என் நிலையில் நீ இருந்தால்தான், உனக்குப் புரியும்"

"எனக்கென்னமோ அம்மா! உன் நிலை எப்படின்னு தெரியவில்லை. நீதான் சொல்லேன்."

"வருஷக்கணக்காகப் பழகி வளர்ந்திருக்கிறோம். 'கனகசுந்தரம் என்பது நீதான்' என்ற ஒரு ரகசியத்தை என்னிடம் நீ சொல்லாதிருந்திருக்கிறாய்!"

"உனது அழகுக் கனவைக் கலைக்க எனக்கு மனம் வரவில்லை, மரகதம்."

"சரிதான்! கானல் நீரை நோக்கி நான் நடந்து கொண்டிருந்தாலும், நீ எனக்குக் குடைபிடித்துக் கொண்டுதான் வருவாய் போலிருக்கிறது."

"மரகதம்! என்னை உனக்குத் தெரியாது. அன்புலகக் காட்சிகளில், செயல்களில் ஆராய்ச்சிக்கே இடம் கொடுக்கக்கூடாது. நீ கனவு கண்டு தவித்துக் களித்த இந்தச் சின்ன நிகழ்ச்சியில், எனக்கு எவ்வளவு ஆனந்தம் கிடைத்தது தெரியுமா?......தள்ளாடித் தள்ளாடி, கீழ் விழுந்தெழுந்து, மெள்ள நடை பயிலும் தன் குழந்தையை ரசிக்கும்போதும், அந்தக் குழந்தையைக் கை கொடுத்துப் பிடித்து ஆதரவுடன் நடக்க வைக்காமல், தள்ளியிருந்து தன் கைகளைத் தட்டிக்கொண்டு களிப்

படைகிறதல்லவா, அன்னை மனம், அந்த இனத்தைச் சேர்ந்ததுதானடி என் மனமும்!..........அனாவசிய மாக எதையும் நினைத்துக் குழம்பாதே."

"அது கிடக்கட்டும். கனகசுந்தரம் என்று கை யெழுத்திட்ட கடிதத்தை, எழுதியனுப்பியது நீதானே."

"ஆமாம்! விளையாட்டாக."

"சீ!...பேசறதைப் பாரு! நீயும் ஒரு மனுஷியா".

அவ்வளவுதான்.

உடனே எழுந்து போய்விட்டாள்!

★

துடித்தேன்!

துணிந்தேன்!!

துவககினேன்!!!

## மரகதம்:

அன்று என் பெயருக்கு புக் போஸ்டில் ஒரு புத்த கம் வந்தது. புத்தகத்தின் பெயர், சூழ்நிலைத் தெய்வம். எழுதியது, கனகசுந்தரம்

எனக்கு அப்போது வந்திருந்த காய்ச்சலையும் மறந் தேன். அப்போதே என் படுக்கையில் சாய்ந்திருந்த வாறே அதைப் படிக்க ஆரம்பித்தேன்.

### கனகசுந்தரம்

வசந்தா! சொன்னாலே தித்திக்கும் சுந்தரமான பெயர். இந்தப் பெயர் இதுவரை எங்கெல்லாமோ, எவ ரிடமெல்லாமோ சென்று பொருத்தமற்றுக் கிடந்தது. இப்போதுதான், நான் வாடகைக்கு அமர்த்தியிருக்கும் அறையின் பக்கத்து வீட்டில் அன்னையுடன் வாழும் பெண்மணி யொருத்தியிடம் வந்து, இந்தப் பெயர் பொருத்தமுடன் சேர்ந்திருக்கிறது. வசந்தா! வசந்தா! ஆகா! எனது ஓய்வு நேரங்களை எல்லாம், இவள் வேலை நேரமாக்கிவிட்டாள். இவளது பெயரை உச்சரித்துக் கொண்டிருப்பதையே எனக்கு வேலையாக்கி விட்டாள்!

இதுவரை உலகில் புலராத புதுமைப் பெண்ணாக எனக்கு அவள் காட்சி தந்தாள்!

அப்போது அவள் படித்துக் கொண்டிருந்தது, பத்தாம் வகுப்பு. படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. பண்பிலும் அப்படித்தான். எவளையாவது ஒரு சிநேகிதியை தன் வீட்டுக்கு எப்போதாவது அழைத்துக் கொண்டு வருவாள். அன்று மட்டும் அவள் வீடு ஒரே அமர்க்களப் படும். பாக்கி நாட்களில் தூய்மை மிகு அமைதி ஒன்று தான், அந்த வீட்டின் ஏகச் செல்வம்!

என்னை யார் என்ற விவரம் அவளுக்குத் தெரிந்தால் என்ன, .தெரியாவிட்டால் என்ன நான் எழுதிய பத்திரிகைகளை வாங்கிப் படித்து வருகிறாள் என்பதிலே மட்டும் எனக்குப் பெருத்த மகிழ்ச்சி.

ஆடை அணிந்து கொள்வதில், ஆடம்பரமாகத் திரிவதில், தலையை எழிலுறச் சீவிக் கொள்வதில், புன்னகையை வரவழைத்துக் கொள்வதில் எனக்கு அக்கரையே இருந்ததில்லை, வசந்தாவைச் சந்தித்ததற்கு முந்தியநாள் வரை!

மாலையில் வாசலுக்கு நேராக சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும்போது சும்மா அப்படியே கோவில் சிலைபோல உட்கார்ந்திருந்தால் குறைபேச நல்லவர்களே கிளம்பி விடுவார்களே என்று பயந்து, அப்படி எதையோ சிந்திப்பதாக வெளியுலகிற்குக் காட்டுவதற்காக சிகரட் பிடிக்க ஆரம்பித்தேன். முதல்நாளன்று பிடிக்கத் தெரியாமல் பிடித்து, நெஞ்சு திணறி மூச்சு திமிறிவிடப் பார்த்தது. பழகினேன். இப்போது நான்

விடும் புகைகளில், எந்த தேசப்படத்தை நினைத்துக் கொண்டு விடுகிறேனோ, அந்தத் தேசப்படத்தை என் கண்முன் உருவாக்கி விடுவேன். அப்படி அந்தப் பருவத்தில், நான் புகையால் அடிக்கடி சிருஷ்டித்த தேசப் படம் அமெரிக்கா ஒன்றுதான்!...காரணம், என் உள்ளத்தில் இத்தகைய தீவிரமான காதல் நடவடிக்கைகளைக் கிளப்பிவிட்ட நாவலாசிரியர்கள் அமெரிக்காவில் உள்ளவர்கள்தான்!......மேலும், அந்த தேசத்தைப் புகை வடிவத்தில் ஆக்கிப் பார்ப்பதில் எனக்கு ஒரே ஆனந்தம்!

அவள் என்னமோ என்னை எப்போதும் போல்தான் பார்த்து வந்தாள்.

ஒவ்வொரு வாரமும் நான் விடாமல் எழுதிவரும் பத்திரிகையை, அவள் விடாமல் வாங்கிப் படிக்கிறாள் என்பதை மட்டும் நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். அதனால்தான் என் போக்கே, விசித்திரமாகி வந்தது! 'கனகசுந்தரம்! நாவலிஸ்ட்' என்ற பெயரை பலமாக எழுதி, என் அறையின் வாசலில், வீதியில் செல்பவர்களின் விழிகளைப் பலாத்காரமாகப் பிடுங்கும் தினுசில் தொங்கவிட்டேன்.

வசந்தா முதல்நாள் தற்செயலாக அதைப் பார்க்க நேர்ந்ததும் திகைப்படைந்தாள். நின்றாள்.

நான் நடையில் நின்று கொண்டே 'என்ன, ஏன்' என்றேன்.

"ஒன்றுமில்லை, நீங்கள்தான்"

"ஆமாம்! நான்தான் உங்களைக் கவர்ந்த......"

"ஆ..." என்று திடுக்கிட்டாள்.

"ஆமாம்! நான்தான் உங்களைக் கவர்ந்த எழுத்தாளன் கனகசுந்தரம்" என்று வாக்கியத்தை ஒரு தினுசாக மாற்றி முடித்தேன்.

யோசித்தாள்.

போய் வருகிறேன் என்று குனிந்த தலை நிமிராமல் கூறினுள். போய் விட்டாள்.

என் மனம், என் அனுமதியில்லாமலே குழம்பியது; தெளிந்தது; குழம்பியது; தெளிந்தது இன்னும் என்னவெல்லாமோ செய்தது!

"நான் சொன்னதை அவள் தவருக நினைத்திருப்பாளோ...நினைத்தால் தான் என்ன......இப்படி 'ஸஸ்பென்ஸ்,' அதாவது வேறு பொருள் வைத்துப் பேசுவது தானே, எழுத்தாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறை என்பது கூடவா அவளுக்குத் தெரியாமலிருக்கப் போகிறது........" என்றெல்லாம் என்னை நானே சமாதானம் செய்து கொண்டேன்.

எழுத்தாளன், தன் கையால் தான் வாழ முடியாவிட்டாலும, தன் மனக் குறைகளை தன் மனதினுல் சாந்திப்படுத்திக் கொள்ளமுடிகிறதே...என்பதை எண்ணுவதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி. இந்த வசதியும் எழுத்தாளர்களுக்கு இருந்திராவிட்டால், நம் நாட்டை பொறுத்தவரையிலும், நல்லதங்காள்களும் விக்ரமாதித்தன்களும்

புலந்திரன்களும், காத்தவராயன்களும்தான், நமது இலக்கிய வீட்டுக்குள் கிடந்து இன்னும் இருமிக் கொண்டிருக்க நேரிட்டிருக்கும்!

சரி! அதெல்லாம் போகட்டும். இன்ப நினைவுக்கு வருகிறேன.

பெண்களின் உள்ளம் அழகாக இருப்பதற்குக் காரணமே, சதா அது ஊசல் ஆடிக்கொண்டிருப்பதால் தானே என்னவோ!

முதல் நாள் திகைத்தாள்.

இரண்டாவது நாள், நான் பார்த்த பார்வைக்காக, என்னைக் கண்ணாலேயே பகைத்தாள்.

மூன்றாவது நாளோ......முற்றிலும் வேறு பாடு... நான் பார்த்து ரசிக்கும் வண்ணம் நகைக்க ஆரம்பித்து விட்டாள்.

இன்றோ, மறுபடியும் முதல் நாளைப்போல, திகைக்கிறாள்.

நாலே நாலு தினங்களுக்குள் எத்தனை வித்தியாசம்?

இன்னும், பெண் உள்ளத்தைப் பற்றி நினைக்க நினைக்க புது விஷயங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

எத்தனையோ குணங்களைத் தங்களிடம் இணையப் பெற்றிருக்கிறார்கள். அத்தனையும், இப்படி ஒரே யிடத்

தில் ஒரே உள்ளத்தில் அமைந்திருப்பதால்தான் ரசிக்க முடிகிறது. வானத்தில் பலப்பல தினுசான வர்ணங்களும் பலப்பல இடங்களில், திசைகளில் சிதறிக் கிடந்தால் அவைகளை ரசிப்போமோ! ஒரே இடத்தில், ஒரே தொடராக, 'வானவில்' என்ற ஒரே பெயரில் குவிந்து விளைந்து கிடப்பதனால் தான் நம்மால் அந்தப் பலவர்ணங்களையும் ரசிக்க முடிகிறது. இதே நோக்கிப் பார்க்கப் போனால், வசந்தா என் ரசனைக் குரியவள்தான்.

குணங்கள் பல! குவிந்திருக்கும் இடமோ ஒன்று!

அவளுடன்நான்பேசவேண்டும்என்றுஆசைப்படுகிறேன். ஆரம்பத்தில் கொஞ்சம் அப்படி இப்படி இருக்கத்தான் செய்யும் அதற்காக அசந்து விடலாமா? நியாயமான சாந்தி முகூர்த்த அறைகளில் கூட, முணக்கம் தானே முதல் மந்திரமாக அமைந்து விடுகிறது!

அன்று!

என் அறையின் மாடியில் ஏறி நின்று அவள் வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளது அன்னை பையை எடுத்துக்கொண்டு கடைச்சாமான் வாங்கச் சென்றதும், நானும் மாடியை விட்டு கீழே இறங்கி அறையின் வாசலில் நின்று யோசித்துக் கொண்டிருந்தேன். மீண்டும், மீண்டும் எதை எதையோ யோசித்தேன்.

"சீச்சீ! எண்ணித் துணிக கருமமாவது......எனக்கென்னமோ துணிந்த பின்தான், எண்ண முடிகிறது......ஆயிரத்து முன்னூற்று முப்பதையும் எந்த ஒரு

மனிதனும் சதா தூக்கிக் கொண்டு திரிய முடியுமா” என்று எனக்குள் சொல்லிக் கொண்டே வாசலை விட்டு இறங்கினேன்.

**துடித்தேன்!**

**துணிந்தேன்!**

**துவக்கினேன்!**

அப்புறம்! வசந்தாவின் வீட்டு வாசலில் நான் நின்று கொண்டிருந்தேன்!

அங்கே......!

என் பத்திரிகையைப் புரட்டி அதில் ஏதோ ஒன்றைத் தேடிப் பிடித்துக் கொண்டிருப்பவளாகக் காணப்பட்டாள். நாற்காலியில் அமர்ந்திருக்கும் அவளுக்குப் பின் புறமாக நான் நின்று கொண்டிருந்தது அவளுக்குத் தெரியாது. அந்த வாரத்தில்,நான் சிறப்பாகவொன்று எழுதியிருந்தேன். அதைத்தான் அவள் தேடிக் கொண்டிருக்கிறாள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன் கடைசியில் அந்தப் பக்கத்தைத் தேடிப் பிடித்ததும் ஒரு பெருமூச்சு விட்டாள். மோனமாகவே படிக்க ஆரம்பித்தாள்.

சாதாரணமாக ஒரு எழுத்தாளனுக்கு அவன் எழுதியதை பிறர் யாரேனும் படிப்பதைக் கண்டால் மகிழ்ச்சி தான் வரவேண்டும். எனக்கோ அந்த நேரத்தில் அந்த நிலையில் சோகம்தான் வந்தது.

பின் புறத்தில் நிற்கும் என்னைப் பாராமல் என் எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள், அக் கறையாக! இதற்கு சரியான உவமை கூற வேண்டுமானால், கோவிலின் வாசலில் கடவுள் ஏழைகளின் உருவில் இருப்பதை ஏறிட்டும் பாராமல் கோவிலின் உள்ளே சென்று கடவுளைக் கர்ப்பக் கிரகத்தில் தடவிப் பார்க்கிறதே உலகம், அதைத்தான் கூறவேண்டும்!

இருமினேன்!

என் மனதுக்கு, க்ஷயரோகம் அப்போதுதான் வந்தது என்று சொல்லலாம்.

நிமிர்ந்து திரும்பிப் பார்த்தாள்!

'நீங்களா' என்று கேட்டாள் ஆச்சரியத்துடன். அதில் மகிழ்ச்சியைத் தேடிப் பார்த்தேன். காணோம்!

"ஆச்சரியப்படாதே வசந்தா! என்னை அளவுக்கு மீறி மதிக்கவும் வேண்டாம்—அளவுக்கு மீறி வெறுக்கவும் வேண்டாம். இந்த இரு துருவங்களில் என்னை எங்கேயும் தள்ளி விடாதே. நான் மனிதன் எனக்கு வாழ்க்கை வேண்டும்!"

"ஆ......!"

"சுற்றி வளைத்துப் பேசவும் எனக்குத் தெரியும்.... முடியவில்லை......இன்று......... இங்கிலையில்............. நான் என்ன செய்யட்டும், வசந்தா!"

"என்னைச் சோதிக்கிறீர்களா?"

"சோதனையா? அந்தக் கெட்ட குணம் கடவுளோடு தொலையட்டும் என்பவனல்லவா நான்! வசந்தா! உண்மையில் நீ என்னை நேசிக்கிறாயா, இல்லையா, சொல்லு சொல்லு!"

"நேசிக்கிறேன்" அதனால்தான் நெருங்காதீர்கள் என்கிறேன்."

"மணம் வேண்டும், மலர் வேண்டாம் என்பது போலிருக்கிறது, உன் பேச்சு. நேசம் வேண்டுமாம்; நெருக்கம் கூடாதாம்! என் இலக்கிய குழந்தையுடன் விளையாடுவாளாம்! என் இதயத்தை தொடக்கூட மாட்டாளாம்! வசந்தா! நன்று! நான் வருகிறேன்! விளக்கமாகச் சொல்கிறேன், கனக சுந்தரம், உன்னை விட்டுப் பிரிகிறான்."—

இந்த முடிவுரையுடன் வெளியே வந்து விட்டேன். அவள் தடுத்துக் கூப்பிடவும் இல்லை. அவள் ஏன் கூப்பிடப் போகிறாள். அவ்வளவு இலகுவில் முடிந்து விடக் கூடிய காரியமா, அது! அப்படியானால்தான், குதிப்பதற்கு இலகுவாக இருக்கட்டும் என்று சுவர்க்கத்தையும் பூமிக்கு கீழே பாதாளத்தில் படைத்திருப்பார்களே நமது மேதாவிகளான மூதாதையர்கள்!

ஒரு வாரம். என் அறையை அவள் போகும் போதும் வரும் போதும் முன் போல பார்ப்பதில்லை. வேண்டுமென்றே தலையைக் குனிந்து கொண்டு செல்கிறாள்.

அடுத்த வாரம், இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு, ஒரு சிறு கதையை எனது பத்திரிகையில் எழுதினேன்.

அன்று மாலையிலேயே, அந்தப் பத்திரிகையை கடையில் வாங்கிக் கொண்டு போகும் போது வாசலில் நிற்கும் என்னைப் பார்த்தாள், சிரித்தேன். என்னைப்போல் அவ்வளவு பலமாக இல்லாமல், இலேசாகச் சிரித்தாள். போய்விட்டாள்.

அப்புறம்.......?

எங்கேயோ 'பிக்னிக்'குக்கு எல்லா மாணவிகளுடன் இவளும் போய்விட்டாள். கேம்ப், ஒரு வாரமாம்!

அன்றைக்கு, சரியான மழை. விரைவாக வந்து கொண்டிருந்தேன். என் அறைக்கு வருவதற்குள் மழை மிகவும் தீவிரமாகியது. அப்படியே, வசந்தா வீட்டு வராந்தாவில் போய் நின்று ஒதுங்கினேன். வசந்தா அப்போது அங்கு இல்லை என்பதை தெரிந்தும் அங்கு ஒதுங்கினேன். நான் ஒதுங்கியது மழைக்காகத்தான், ஆயினும் அதைவிட வசதியாக அருகில் எத்தனையோ வராந்தாக்கள் இருந்தன. அதெல்லாம் ஏன், இன்னும் பத்து இருபது அடி தூரம் நடந்தால் என் அறைக்கே நான் போயிருக்கலாம். என்னமோ, எனக்கு அப்படியெல்லாம் நடந்துகொள்ள மனம் வரவில்லை. வசந்தா வீட்டு வராந்தாவில்தான் எங்கும் இல்லாத ஒரு வசதி இருப்பதாக எனக்குள் தோன்றியது, ஒதுங்கினேன்.

நல்ல குளிர். மழை மேலும் பலத்தது. என்னுடல் நடுங்கியது. கைகள் பதறின. மனம், நிற்கும் இனிய இடத்தை நினைந்து மகிழ்ந்துகொண் டிருந்தது.

இடிகள் எச்சரிகை செய்ய, மின்னல் வழிகாட்ட, மழை மிகவும் அக்கரையுடன் பெய்தது.

என் மனம், அப்போது ஒரு வேடிக்கையை நினைத்தது. இந்த மழையையும் செல்வத்தையும் தமிழ்ப் பண்டிதர்கள் மிகவும் கஷ்டப்பட்டு ஒற்றுமைப்படுத்தி பேசுவார்கள். அவ்வளவு கஷ்டம் வேண்டாம்! மழை! செல்வம்! தேவையில்லாத இடங்களுக்குத்தான் இந்த இரண்டும் விஜயம் செய்யும். பணமே தேவைப்படாத அளவுக்கு வாழும் பணக்காரனிடம்தான் பெரும்பாலும் செல்வம் செல்லும்—ஏழைகளை ஏறிட்டுக்கூட பார்க்காது! மழையோ, தேவையில்லாத நகரங்களில் பெய்யும் அளவுக்கு திரண்டு வளர் பயிர் நிலத்தில் பெய்வதில்லை. இதுதான் இந்த இரண்டிற்கும் இருக்கும் அருமையான ஒற்றுமை என்று பிள்ளைகளுக்கு ஒரேயடியாகச் சொல்லிக்கொடுக்கலாம்... தமிழ் பண்டிதர்கள் எங்கே இப்படிச் சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்? இவர்கள்தான், பாரதியின் "அச்சமில்லை, அச்சமில்லை" என்ற பாடலை "ஓடிவிளையாடு பாப்பா" என்ற ராகத்திலே சொல்லிக் கொடுக்க முயலும் சூரர்களாயிற்றே!

நினைந்துகொண்டு நிற்கும் போதே இப்படிப்பட்ட எதையெல்லாமோ என் மனம் நினைந்துகொண்டிருந்தது!

கடைசியில் திருநீலகண்டர் கதைவேறு எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. திருநீலகண்டர் மழைக்காக ஒதுங்கிய இடத்திலிருந்துதான், அவரது கதை சுவாரஸ்ய பாஷை பேசியது என்பதை நினைத்தேன் அதோடு இப்போது நான் நிற்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

எனக்குள் சிரிப்பு வந்தது.

என் பல சந்தேகங்கள் பலித்துவிடுவதுண்டு. அப்படியே இங்கும்........

கதவின் தாழ்ப்பாள் திறக்கப்பட்டது. திரும்பிப் பார்த்தேன். நிற்பவள் வசந்தா இல்லைதான்! அவளது தாய்!

முத்துக்குள்ள மதிப்பு சிப்பிக்கு இல்லை என்பது உண்மைதான்! அதற்காக சிப்பிகளை கண்ட இடத்தில் மனிதன் உடைத்தெறிவதில்லையே!

ஆகவே, எதிரில் நின்ற அந்தக் கிழவிக்கும் புன்னகை புரிந்தேன்.

"ஐயோ! இவ்வளவு நேரமா நனைஞ்சுகிட்டா நிற்கிறே. ஏன் கதவை தட்டியிருக்கக் கூடாதப்பா! வா! உள்ளே!" என்றழைத்தாள்.

சென்றேன்.

உள்ளே வசந்தா இல்லை என்பதும் எனக்கு நன்ருகத் தெரியும். ஆயினும், வசந்தாவின் பாதம்பட்ட நிலத்தில் நம் பாதமும் படுகிறதே என்ற ஆனந்தத்தில் அந்த வீட்டுக்குள் நடமாடினேன்.

பேசினேன், பேசினேன் என்னவெல்லாமோ பேசினேன். பெற்ருேர்களிடமிருந்து என் கதையை ஆரம்பித்து, நான் பிடித்து உழும் பேனுவில் கொண்டு முடித்தேன். அவளும் தன் பெற்ருேர்களிட மிருந்து கதையை ஆரம்பித்து, மகள் பிக்னிக் போயிருக்கும் புகழ்வரை வந்துவிட்டாள்!

பேசும்போதே, எனக்கு உயிர் தருவதுபோல் அவளிடமிருந்து ஒரு வாக்கியம் வந்தது.

"தம்பி! இனி ஹோட்டல் வேண்டாம்; இங்கேயே சாப்பாட்டை வச்சுக்கயேன்"

இதை வாக்கியம் என்பதைவிட, பாக்கியம் என்றே சொல்ல ஆசைப்படுகிறேன்.

சம்மதம் தெரிவித்தேன்.

நான் சம்மதம் தெரிவித்ததற்கு வீட்டுச் சாப்பாட்டின் மேன்மையல்ல காரணம் விவரிக்க முடியாத வேறொன்றுதான் காரணம் என்பதும் எனக்குத் தெரியாமலில்லை.

அன்றே சாப்பாட்டை அங்கு துவக்கினேன்.

மறுநாள் முதல்......

காலை—மதியம்—இரவு! இந்த மூன்று நேரங்களிலும், போய் சாப்பாட்டை முடித்துவிட்டு வருவேன். வசந்தா ஊரிலிருந்து வருவதற்குள்ளேயே, மேலே கண்ட மூன்று நேரங்களுக்கும் இடையில் கிடந்த நேரங்களை இணைத்துக் கொண்டேன். இப்போது சதா, நான் தங்குவது வசந்தபுரியில்தான்!

தொடங்கிவிட்டேன்; எங்கு எப்படி முடியும் என்பதை விளையாட்டாகக் கூட எண்ணிப் பார்க்கவில்லை.

★

ஒரே ஒரு நாள் வாழ்ந்தாலும்போதும், உண்மை யான மனிதனுக வாழுங்கள்!

## வசந்தா :

பிக்னிக் போய்விட்டு வீட்டுக்கு வந்ததுமே, எனக்கு அதிர்ச்சிதான் ஏற்பட்டது. எழுத்தாளர் கனகசுந்தரத் துக்கு, என் தாய் சாப்பாடு பரிமாறிக்கொண்டிருந்தாள்.

விரைவாக வீட்டுக்குள் வந்துகொண்டிருந்தவள் இந்தக் காட்சியைக் கண்டதும், அப்படியே ஒன்றும் தோன்ருமல் நின்றுவிட்டேன். அம்மா என்னைப் பார்த்துவிட்டாள். அவரும் திரும்பிப் பார்த்தார். சிரித் தார். சிரிப்பா அது? சேச்சே! நானும் சிரித்துவைத் தேன், கஷ்டப்பட்டு!

அம்மா கனகசுந்தரத்தை எனக்கு அறிமுகப்படுத் தினுள். கனகசுந்தரத்தைப்பற்றி வெளியுலகம் கொண் டிருக்கும் அபிப்பிராயத்தை அப்பொழுது தான் உணர்ந்தேன். அவரும் முதன்முதலாக அப்போது தான் சந்திப்பவர்போல் நடந்துகொண்டார்.

அன்றைய நிகழ்ச்சியை மறந்துவிட்டாரா? அல் லது மறந்துவிட்டதுபோல நடிக்கிருரா? எப்படியிருந் தால் என்ன! அவர் மறந்திருந்தாலும் ஆபத்துதான்— மறக்காமல், நினைந்து கொண்டிருந்தாலும் ஆபத்து தான்!......ஆகவே, அந்தச் சிந்தனையை அப்படியே

விட்டுவிட்டேன். நானும் அவரை முதன்முதலாகச் சந்திப்பவள்போன்று நடந்துகொண்டேன்.

நாட்கள் வளர்ந்தன!

ஆளும் வளர்ந்து விட்டார்!

'வசந்தா' என்று சர்வசாதாரணமாக சல்லாபக் குரலில் கூப்பிடத் தொடங்கினர். சிலேடை பேசினேன். அவரோ தம் போக்கைக் குறைத்துக் கொள்வதாக இல்லை. சினந்து பார்த்தேன். அப்போதும் சிதையாத மனத்தவர்போன்று நடந்துகொண்டார். சிரித்துப் பார்த்தேன். என்னை ஜெயித்துவிட்டதாக நினைக்கலானர்.

என்ன செய்ய? இதெல்லாம் அவர் அவர்களுக்காகத் தெரியவேண்டும்!

நேற்றைவிட இன்று நெருங்கிப் பழகுகிருர் நாளையதினம், இன்றைய தினத்தை மிஞ்சும் போலிருக்கிறது.

ஒரு நாள்......

விசுவாமித்திரர், குழந்தையுடன் தொடரும் மேனகையை, "தூரப் போ! வேண்டாம்" என்று ஒதுக்கித் தள்ளுவதாக நிற்கும் படம் ஒன்றை வாங்கிவந்து.........

"வசந்தா! இதோ பார்! விசுவாமித்திரர் நிற்கும் இடத்தில் மேனகையை நிறுத்தி வைத்து, மேனகை நிற்கும் இடத்தில், மேனகையின் நிலையில் ஒரு விசுவா

மித்திரரை குழந்தையுடன் நிறுத்திவைத்து ஒரு புரட்சிக் காவியம் எழுதலாமா என்று யோசனை செய்கிறேன்"—என்றார்!

நான் சிரித்தேன்!

அவரோ, எதையோ நினைத்துக்கொண்டு பரிகாச தொனியில் சிரித்தார்.

என்றால் அப்பொழுதும் சும்மாயிருக்கமுடியவில்லை. பெண்ணினத்தின் கருவென விளங்கும் பண்பையே அழித்துப் பார்க்கிறார். அப்போதும் சும்மாயிருப்பதா? அந்தப் பண்பை, நாமாக அழித்துப் பார்த்தாலும் பார்க்கலாம். ஆணுலகத்தினால் அழியவிடக்கூடாது என்ற எண்ணத்தினால் பேச ஆரம்பித்தேன்.

"விசுவாமித்திரனுக்கு இருந்ததுபோன்ற கடினச் சித்தம், பெண்களுக்கு இருப்பதாக கற்பனை செய்து எழுதிவிடாதீர்கள்—அது பெரிய தவறாகிவிடப்போகிறது"

"அது ஒன்றும் தவறில்லை. பார்க்கப்போனால் விசுவாமித்திரனைவிட கடினமானவர்கள்தான், பெண்கள்!"

"எங்கேயோ, எதையோ நினைத்துக்கொண்டு பேசுகிறீர்களே!"

"எங்கேயும், எதையும் நினைத்துக்கொண்டு நான் பேசவில்லை. இங்கே தான் எதிரே நிற்கும் உன்னை நினைத்துக்கொண்டுதான் பேசுகிறேன்."

என் மன ஓட்டம் தடைப்பட்டது. நான் கடின சித்தம் படைத்தவளாம். அவர் கேட்பதை, நான் அலட்சியம் செய்கிறேனும். எப்படியோ, கடைசியில் அவரிடமே வசமாகி, விடுவேனும். சாட்சியாக சத்புத்திரன் ஒருவனும் பிறப்பானும். அப்போது, வெறுப்பினுல் அவரைவிட்டு விட்டு நான் ஓடுவதற்கு எத்தனிப்பேனும்......அவர் குழந்தையுடன் என்னைத் தொடருவாராம், மேனகையைப்போல! நான் அப்போது, "தூரப் போ! வேண்டாம்" என்று ஒதுக்கித் தள்ளுவதுபோல் விசுவாமித்திர கோணத்தில் நிற்பேனும்!—இதுதான் அவர் மனதில் உருவாகிக்கொண்டிருக்கும் புரட்சிக் காவியமாம்; தீட்டப்போகிருராம்!

புரிந்துகொண்டேன்.

காரியம் ரெம்பவும் மிஞ்சிவிட்டது. எப்படி இவரைக் களைவது என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன்.

என் அம்மா அவரிடம் எப்போதும்போல்தான் நடந்துவந்தாள். அவருக்கு மதிப்பு என்னிடம் குறையக் குறைய என் தாயாரிடம் அதிகரித்துவந்தது. என் வீட்டை அவர் ஆக்ரமித்துவிட்டார் என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு மன்னன் பிரமாதமாக, என் அன்னையிடம் நடிக்கிருர். அவளிடம் போய் சத்தியம், உண்மை, கடவுள், அது, இது எனப்படும் ஒரு பொருளையே, பல கோணங்களிலிருந்தும் படம் பிடித்துக் காட்டி, அவளுக்குத் தம் மேல் நம்பிக்கை ஏற்படும்படியாகச் செய்துவிட்டார். அதெல்லாம் ஏன்? அவரைப் பற்றி நானே ஒருமாதிரியாகப் பேச்சை எடுத்தால்கூட, "சீச்சீ! அந்தப் பிள்ளையாண்டனை அப்படியெல்லாம்

நினைத்தாலே பாவம்" என்று சொல்லி, அம்மா என்னைக் கொன்று பார்ப்பாள்!

அவள் என்ன செய்வாள்? பாவம்! சுத்த நெஞ்சினள். அங்கே, சொற்புத்தியும் புகமுடியாது; சுயபுத்தியும் சுரக்க வழியில்லை! என்க்குச் சுகம், என் அன்னையின் சுத்த நெஞ்சில்கூட கிடைக்கவில்லை. ஒட்டகத்துக்குச் சுகம், பாலைவனத்தில்கூட இல்லை! விந்தைதான்! இப்படி எத்தனை விந்தைகளை, ஏற்றிக்கொண்டு என் வாழ்க்கைத் தோணி கரைவிட்டுக் கரை காண கனவு கொண்டிருக்கிறதோ? அறிகிலேன்!

அன்னையும் ஒப்புக்கொள்ள முடியாத அளவுக்கு, அவர் செய்துவிட்ட ஒன்றிரண்டு குற்றங்களையும் அவளிடம் சொன்னேன். "தங்கத்தை மன்னித்துவிடு" என்று கெஞ்சினள். வைரமாக இருந்துவிட்டேன்!

அவரை இனி வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமானல், பலவந்தமாக நான் என் கைகளால் பிடித்துத் தான் தள்ளவேண்டும். அந்த அளவுக்கு, என் வீட்டில் இன்னெருவர் வளர்ந்துவிட்டார்.

"திருந்திவிடுவார்" என்று தீர்க்கதரிசனம் பேசியது, பெற்ற மனம்! அம்மாவின் நல்ல உள்ளத்துக்கு வந்துவிட்ட விபத்தை எண்ணி, என் நல்ல உள்ளம் மிகவும் கஷ்டப்பட்டது! தாயைச் சேய் தாலாட்டுவதாக அன்றிரவு ஒரு கனவும் கண்டேன்!

அவரை, இவள் ஏன் ஆதரிக்கிருள் என்பது எனக்குப் புரியவே இல்லை.

"விஷவிருட்சங்களை, விவேகானந்தர் காந்தி போன்றவர்கள் நட்டுவளர்ப்பார் களேயானுல், அந்த விருட்சங்களில் தங்கும் விஷம் கூட போய் விடும்— என்று என் பேதை அன்னைபேச வந்தாலும் நான் ஆச்சரியப் படமாட்டேன். அந்த அளவுக்கு அவளது அறிவைப்பற்றிய நிர்ணயம் எனக்குத் தெரிந்து விட்டது.

அவளிடம் இப்போது நான் எதைப் பற்றியும் பேசுவதில்லை. விட்டு விட்டேன்.

அறிவிருக்கும் இடம் தேடி, நம்பிக்கை குடியேறுவது தான் நியாம். என்னைப் பெற்ற மாதாவோ, நம்பிக்கை யிருக்கும் இடத்திலே கொண்டு அறிவை பலாத்காரமாக, வற்புறுத்திக் குடியேற்றி வைத்து அழகு பார்க்கிருள்.

அவளை மன்னிக்கவும், எனக்கு வெட்கமாயிருக்கிறதே.

ஆயினும்......?

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவளை வாழ்த்திக் கொள்கிறேன். "அவரையே கல்யாணம் செய்து கொள்" என்று இன்னும் அவள் சொல்ல வில்லை. அதற்காகத் தான் என் வாழ்த்து. அதற்காகத்தான், இன்னும் அவளை, 'அம்மா அம்மா' என்று ஆசையுடன் அழைத்தும் வருகிறேன்.

என்றைக்கு, அந்த வாக்கியத்தையும் சொல்லி விடுகிருளோ, அன்றைக்கே அவளும் சரி, என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

ஆச்சர்யம். இப்பொழுது கூட கனக சுந்தரத்தின் இலக்கியத்துக்கு என்னிடமிருந்த மதிப்பு குறைய மாட்டேன் என்கிறது. அவைகளை, முன் போலவே தொடர்ந்து படித்து வந்தேன்...இதை ஒரு அனுகூலமாக வைத்துக் கொண்டு தான், கனக சுந்தரம் என்னிடம் காதல் பேசத் துணிந்து விட்டார்.

மலரை நுகர்ந்து பார்ப்பவர்கள், அந்த மலரைத் தந்த செடியின் வேரையும் நுகர்ந்து பார்த்து விட வேண்டும் என்றும் விசித்திரம் பேசுவார் போலிருக்கிறது, கனக சுந்தரம்! அவரது சிறப்பான எண்ணத்தில், செடிக்கே ஆபத்திருப்பதை சிந்திக்கவும் மாட்டார்!

அவர் பாடு எதையாவது உளறி விட்டுப் போகட்டும் என்று என்னல் இருக்கவும் முடியவில்லை. பரீட்சை சந்தர்ப்ப மாயிற்றே அவள் படிக்கட்டும் என்ற நல்ல எண்ணத்தில் மரியாதைக்காகவாவது விலகிக் கொள்ளாமல் பழகுகிருரே, துன்பம்!

அன்று......

படித்துக் கொண்டிருந்தேன். இவர் என்னை நெருங்கினர். இவர் நெருங்கி விட்டால், அம்மா கடைச் சாமான் வாங்கப் போய் விட்டாள் என்று தான் அர்த்தம். நான் இவர் பின் புறமாக வந்து நிற்பதை அறியாதவள் போல படித்துக் கொண்டிருந்தேன். பின்னியிருக்கும் தலைசடையை தொட்டுப் பிடித்து இழுத்துத் திருப்பினர். வளர்ந்து கொண்டிருந்தவர், இன்று வளர்ந்தே விட்டார்.

கோபத்துடன் விழித்தேன்.

விட வில்லை, சடையை. விளையாடிக் கொண்டே யிருந்தார்.

அவர் கையிலே ஒரு கணையாழி யிருந்தது. அதை என்னிடம் காட்டிக் கொண்டே......

"வசந்தா! இதோபார் கணையாழி! இன்று உனக்கு அணியப் போகிறேன், இன்று இந்தக் கணையாழி விழா தினத்திலேயே, நாம வளையலிடு விழா தினத்தைக் கனவு காண்போமா?"

"நீங்கள் நிஜமாகவே ஒரு எழுத்தாளர் தானா?"

"பக்குவமாகி விட்ட பக்தனுக்குத் தான் கடவுளைத் திட்ட மனம் வரும். ஆகா! உனக்கும் இப்போது தான் என்னைத் திட்ட மனம் வந்திருக்கிறது! வசந்தா!".

பேசாமல் நடந்தேன்.

தொடர்ந்தார்.

"தயவு செய்து என்னைத் தொடாதீர்கள்."

"ஏன்...?"

"நான் உங்களை விரும்ப வில்லை"

"நான் உன்னை விரும்புகிறேன்

உனக்கு என் மீது விருப்ப மில்லை; விலகுகிறாய்! எனக்கு உன் மீது விருப்பம் இருக்கிறது, ஆகவே நெருங்குகிறேன்"

"நல்லாயிருக்கிறது, சீச்சீ, இதுவா நியாயம்?"

"வசந்தா! இந்த நியாயம், நீதி, சத்தியம், தர்மம், நேர்மை இதையெல்லாம் நம்பாதே. அவ்வளவு பேசத் தெரிந்தவன் பிடித்து வைத்த களிமண் பொம்மைகள்!... அவைகளை எடுத்து வைத்துக் கொண்டு, மூடர்கள் வேண்டுமானால் முத்த மிட்டு மகிழட்டும்—மூளையுள்ள நாம் கொலுவில் வைத்துத் தான் ரசிக்க வேண்டும்! முதன் முதலில் இதையெல்லாம் புரிந்து கொள்ளு! வாழ்க்கையை இழந்து விடாதே!"

"அட பாவி! அம்மா உன்னைப் பற்றி நினைப்பதற்கும், உன் சொரூபத்துக்கும் இடையே..."

"நீ ஒருத்தி ஏன் மறித்துக் கொண்டு நிற்க வேண்டும்?"

அவ்வளவு தான்: உடனே என் கையைப் பிடித்தார். 'வசந்தா, வசந்தா' என்று உளறினார். கெஞ்சினார். கொஞ்சினார். உறுமினார்.

வசந்தா எதற்கும் இசைந்தாளில்லை! தமிழ்காத்தாள்.

அவளது உடலில் எழுந்த தணல் உள்ளத்தில் பரவி, உரைத்த உரைகளின் வழியே தெறித்து விழுந்தது!

"ஊருக்கெல்லாம் புத்தி சொல்லி எழுதுகிறீர்களே. உங்கள் விஷயத்தில் அது எங்கே போயிற்று?......என் கல்லூரி வாழ்வு எப்படியெல்லாமோ சிதைந்து விடும்

போலிருந்தது. அப்போதெல்லாம், உங்களது இலக்கியம்தானே, எனக்கு நல்ல பாதையமைத்துத் தந்திருக்கிறது. உங்கள் இலக்கியம் தானே என்னை தமிழ்ப் பெண்ணுக்கியிருக்கிறது.

உங்களை நினைத்தால்.........

தேடினும் கிடைக்காத தெய்வத்தைச் சந்தித்தது போலல்லவா மகிழ்ந்திருந்தேன். என்னிடம் வந்து, இவ்வளவு சர்வசாதாரணமாக நடந்துகொண்டீர்களே.

வேண்டாம்! புதுத் தெய்வங்கள்கூட புராண காலத்துக்கு ஓடிவிடும் இந்த உலகில், எனக்குத் தெய்வங்களே தேவை இல்லை...போய்த் தொலையுங்கள்."

"எங்கு போகச் சொல்கிருய். நானும் ஒரு மனிதன் தானே!"

"யார் இல்லை என்றது. அண்ணுக அருகிருந்து பேசுங்கள்—அகமகிழ்கிறேன். அப்பனுக நடமாடுங்கள் —ஒப்புகிறேன். இறுகத் தழுவுவதற்கு ஒரே ஒரு நாள் சம்மதிக்காவிட்டால்கூட எட்டி மிதித்துவிடும் உணர்ச்சிக் கணவனுக மட்டும் உங்களை ஏற்றுக்கொள்ள மாட்டேன். உணர்ச்சிகளிடம் தன்னை ஒப்புவித்திருக்கும் உங்களிடம், என்னை ஒப்புவிக்கமாட்டேன். போலி மனிதனுகவே வாழ்கிறீர்கள். நீதி, நியாயம் பற்றிய உங்களது இலக்கணம், அணுக்குண்டையும் நல்லதாக்கி விட்டது!

அன்றொருநாள் சொன்னீர்கள் ஞாபகமிருக்கிறதா? நீ எனக்கு எத்தனுவது மலர் என்ற எண்

ணிக்கைகூட எனக்கு மறதியாகப் போய்விட்டது என்றீர்கள். என்ன துணிவான மறதி!

உலகம்! வாழ்வு! ஒழுக்கம்! அவ்வளவும் உங்களுக்கு விளையாட்டாகவே இருக்கிறது!

என்னை விட்டுவிடுங்கள்.

ஆனால் ஒன்று...

நீங்கள் படைக்கும் அழியாத இலக்கியத்தின் பேரால் கெஞ்சிக் கேட்கிறேன். இனிமேலாவது போலி மனிதனாக வாழாதீர்கள்; ஒரே ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும், உண்மையான மனிதனாக வாழுங்கள்."

இப்படி ஒரு சிறு பிரசங்கமே செய்துவிட்டேன். அதோடு அழுகையும் வந்துவிட்டது. நாற்காலியில் போய் அமர்ந்தேன். தலையை மேஜையில் சாய்த்தேன். விம்மி விம்மி அழுதேன்.

சில நிமிஷங்கள் என்னைப் பிரிந்தன.

தலைநிமிர்ந்தேன்.

நின்றுகொண்டிருந்தார். தம் குற்றத்தை உணர்பவர்போலக் காணப்பட்டார். அப்போது, ஏதாவது அளவுக்கு மீறியும் பேசிவிட்டோமோ என்று யோசித்தேன். அப்படியொன்றும் இருந்திருக்காது என்று என்னையே நான் தேற்றிக்கொண்டேன். ஏதாவது புத்தகத்தைப் படிப்போம் என்று மேசையைத் திறந்தேன்.

அங்கே......

"வாழும் வகை", "நல்ல பெண்மணி", "இதயத்தில் இமயம் வேண்டும்", "உண்மையான மனிதன்", "கலையும் களையும்"—என்ற புத்தகங்கள் காட்சியளித்தன. அத்தனையும் என்னருகில் நிற்கும் உத்தமரால் எழுதப் பட்டவைகளே!

'உண்மையான மனிதன்' என்ற புத்தகத்தை எடுத்து ஓரிரு பக்கங்களைப் படித்தேன். திரும்பிப் பார்க்கவேண்டும் போல் தோன்றியது. பார்த்தேன். அவரைக் காணோம்.

கொஞ்ச நேரத்தில் அம்மா வந்தாள். "சுந்தரம் சாப்பிட்டு போயாச்சா" என்று கேட்டாள். 'ஓ' என்று தலையசைத்தேன். "நீ சாப்பிட்டாச்சா" என்று கேட்டாள். அதற்கும் அப்படியே 'ஓ' என்று தலையசைத்தேன். 'படிக்க, காபிபோட்டு கொண்டுவரட்டுமா" என்று கேட்டாள். அதற்கும் 'ஓ' என்றே தலையசைத்தேன்.

போலி மனிதனொருவன் தீட்டிய 'உண்மையான மனிதன்' என்ற ஏட்டில் கிடந்து என் இதயம் திண்டாடிக்கொண்டிருந்தது. பரீட்சைக்கு நாலே நாலு நாட்கள் தான் இருக்கின்றன என்பதை, அப்புறம் காபி குடிக்கும் போது அம்மாதான் ஞாபகப்படுத்த வேண்டியது வந்துவிட்டது!

★

ஒன்று, அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படவேண்டும், அல்லது குறைந்த பட்சம் ஒரு கோபல் பரிசாவது வாங்கியாகவேண்டும் என்றுதான் முடிவு கட்ட வேண்டியதிருக்கிறது.

## பத்திராதிபர் :

'பத்திராதிபர்' என்றாலே என்னைத்தான் குறிப்பிடும் என்ற அளவுக்கு நான் பிரபலப்பட்டது, கனக சுந்தரத்தின் கைவன்மையினால் தான்.

மனுஷன் என்ன அழகாக எழுதினான் தெரியுமா? எதை எடுத்தாலும் சரி, தான் சொன்னது தான் நியாயம் என்று வாதாடி ஜெயிப்பதில், அவனுக்கு நிகர் அவன்தான்.

எவரும் எங்கும் சொல்லாத புதுமையைத்தான் எழுதுவான். அவனை எதிர்க்கிறவர்களே, அவன் எழுத்தை மட்டும் ஒப்புக்கொள்கிறார்கள்.

நீதி, நியாயம், சத்தியம் இதுகளைப்பற்றி உலக உத்தமர்கள் எழுதியிருப்பதைவிட, இவன் எழுதியிருப்பதில் தான், அழகு இருப்பதாக பத்திரிகையுலகம் முழுவதுமே அபிப்ராயம் தெரிவிப்பதைக் கூர்ந்து நோக்கினால், கனகசுந்தரத்தை ஒரு பிறவி மேதை என்றுதான் முடிவு கட்டவேண்டியது வருகிறது.

இவ்வளவு மேதையிருந்து என்ன பண்ண? அவனிடம் இருக்கும் மேதையைப் பணமாக்கினால், இந்தியா

என்ன, உலகத்தில் உள்ள எல்லாக் கட்டிடங்களையுமே தாஜ்மகால் ஆக்கிவிடலாம் என்பது என் கருத்து.

என்ன செய்யலாம்? என் வழிக்குத்தான் வரமாட்டேன் என்கிறானே. அதிலும் இப்போது ஒரு மாதமாக சுத்தமா ஆளே மாறிவிட்டான். தன் சொந்த கிராமத்துக்கே போவதாகச் சொல்லிப் போனான். அப்புறம் தபாலையே காணோம். நானும் பதில் கேட்டு, எழுதி, எழுதி, அசந்து போனேன். சரி, ஒரு தடவை நேரில் போய் பார்த்து, வெளியிட ஒரு புத்தகம் வாங்கிவரலாம் என்று போனால், அவன் அங்கே புத்தர் மாதிரி உட்கார்ந்துகொண்டு காந்தி மாதிரி பார்த்துக்கொண்டு, யேசு மாதிரி பேசுகிறான். என்னமோ, இனிமேல் உண்மையான மனிதனான பிறகுதான் பேனாவே பிடிக்கப் போகிறானாம். 'அது சரிதானப்பா, நீ எப்போது உண்மையான மனிதனாகப் போகிறாய்?' என்று கேட்டால், 'அது எனக்குத் தெரியாது, அதோ இருக்கும் என் தெய்வத்துக்குத்தான் தெரியும்,' என்று ஒரு படத்தைச் சுட்டிக் காட்டுகிறான். அந்தப் படமோ, ஒரு பொம்பளையின் படம்! அதன் அருகே நெருங்கிப்போய் பார்த்தேன். அது, நிஜமாகவே ஒரு பொம்பளையின் படம்தான். அதுவும் ஏகதேசம் ஒரு காலேஜ் பெண்ணின் படம் மாதிரியே இருந்தது. அதுதான், எனது எழுத்தாளனுக்குத் தெய்வமாம்! கண்றாவி!

வரவர அவனுக்கு இருந்த நண்பர்களும் குறைந்துவிட்டார்கள். ஏன் குறையமாட்டார்கள்? நல்லவனாக வாழ்கிறேன், நல்லவனாக வாழ்கிறேன் என்று சொல்லுகிறான், இவன் கெட்டவனாக இருக்கும்போது வாங்கிய

ரெஸ்ட்வாச் முதல் மணிப்பர்சு வரை உள்ள சாமான்களை விற்று வரும் பணத்தைக் கொண்டுதான், இப்போது நல்லவனாக வாழ்கிறோம் என்பதை மறந்து பேசுகிறான்.

“நல்ல பண்புகள் முளைக்க கெட்ட பண்புகள்தான் உரமாக வேண்டும் போலிருக்கிறது. மணமான மலர் தரும் செடிக்கு, மணமான உரங்களையா கொட்டுகிறோம்?” என்று முன்பொரு கட்டுரையில் அவன் எழுதியதற்கு, அவனே இப்போது இலக்கியமாக நிற்கிறான்.

சதா குடிசைக்குள்ளேயே குந்திக் கிடக்கிறான். ‘என்னப்பா இங்கேயே இருக்கிறாய்’ என்று கேட்டால், ‘உனக்குத் தெரியாதப்பா உலகத்தின் குருத்துவ கேந்திரமே இங்குதான் இருக்கிறது’ என்று தத்துவம் பேசுகிறான்.

அவன் சொல்லுவது, எனக்கே புரியமாட்டேன் என்கிறது.

ஒன்று அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும், அல்லது குறைந்தபட்சம் நோபல் பரிசாவது வாங்கியாக வேண்டும் என்றுதான் முடிவுகட்ட வேண்டியதிருக்கிறது.

★

அந்தக் கல்லையே, அந்தக் கோவிலை விட்டுப் பிடுங்கிக் கொண்டு வந்து வெளியே ஒரு பொது இடத்தில் போடு. அதைக் கும்பிடத் தயாராக இருக்கிறேன். ஆனால், கோவிலுக்குள் வந்து மட்டும் அதைக் கும்பிட மாட்டேன்.

## ககனசுந்தரம் :

சந்திக்கும் வரையில் பாதையில் தங்களை யாரும் பார்த்து விடக் கூடாதே என்பதற்காக, காதலர்கள் வெண்ணிலாவை வெறுக்கிறார்கள். சந்தித்த பிறகு, அதே வெண்ணிலவை நோக்கி, "எங்களது அங்கங்களில் தங்க நிறம் பூசும் திங்களே, வாழ்க நீ". என்று வாழி பாடுகிறார்கள். அதே காதலர்கள், அதே இரவில் அதே வெண்ணிலாவைப் பற்றி தங்கள் அபிப்ராயத்தை மாற்றிக் கொள்கிறார்ககள்—எல்லாம் சூழ் நிலைதான் காரணம்!

தனக்கு உதவ வில்லையே என்பதற்காக உலகமும் என்னை இன்று வெறுக்கிறது. இன்றே புகழப் போகிறது. எல்லாம் சூழ் நிலையின் மகத்துவம்தான்.

புகழ்ந்து கொண்டே யிருந்த எதைத்தான், உலகம் இகழாமலிருந்தது—இகழ்ந்து கொண்டே யிருந்தஎதைத் தான் உலகம் புகழாமலும் இருந்தது.

வேறு ஒன்றுமில்லை ஐயா! நான் இப்போது உண்மையே பேசுகிறேன். அன்பைத் தெய்வம் என்கிறேன்.

அறிவை உலகமென்கிறேன். சோர நெஞ்சை வெறுக்கிறேன். சுத்த நெஞ்சை விரும்புகிறேன்.

"அந்தக் கல்லையே, அந்தக் கோவிலை விட்டும் பிடுங்கிக் கொண்டு வந்து, வெளியே ஒரு பொது இடத்தில் போடு. அதைக் கும்பிடத் தயாராக இருக்கிறேன். ஆனால் கோவிலுக்குள் வந்து மட்டும் அதைக் கும்பிட மாட்டேன்" என்று எழுதுகிறேன்.

"இந்த நாளிலே......காதல் பக்கத்து வீட்டு ஜன்னல் கதவு திறந்து கிடக்கும் காரணத்தினாலேயே ஏற்பட்டு விடுகிறது. இப்படி ஏற்படுவதனால்தான், பின்பும் அது திறந்து கிடக்கும் மற்றொரு சன்னல் வழியாகவே வெளியே நழுவி ஓட நேரிடுகிறது"—என்று எழுதுகிறேன்.

இன்றைய அரசியலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டதற்கு, "சாக்கடையைப் பற்றி குருடன் கூட சரியான அபிப்பிராயம் சொல்ல முடியுமே—நான் ஒளிபடைத்த கண்ணனாக இருக்கிறேன் என்னிடமும் வந்து கேட்க வேண்டுமா" என்று கேட்டு விட்டேன்.

என்னைப் பைத்தியக்காரன் என்று எண்ணத் தலைப் பட்டு விட்டார்களாம். அவர்கள் நினைப்பதை விட பெரிய பைத்தியக்காரன் நான் என்பதை அவர்களுக்குச் சொல்ல ஆசைப் படுகிறேன். ஆம், நான் ஒரு பெரிய பைத்தியக்காரன் தான்......அதனால்தானே தூக்கி எறிந்து விளையாடுவதற்கு, பெரிய பந்து போன்

றிருக்கும் இந்தப் பூமியையே எடுத்துக் கொள்ள எத்த னிக்கிறேன்.

எவனும் எப்படியும் போகட்டும். எதுவும் எப்படியும் முடியட்டும். நான் இப்படியேதான், என் வாழ்வின் முடிவு வரையிலும் நடந்து கொள்ளத் தீர்மானித்து விட் டேன். இந்த நிகழ்கால உலகம் ஒருவனைப் புகழுவதில் அவனுக்கு வரும் லாபத்தை விட, அவனை இகழுவதில் தான் அதிக லாபம் இருப்பதாக நான் ஒரு ரகசிய கணக்கு போட்டு வைத்திருக்கிறேன்.

ஆனால் ஒன்று......!

எவ்வளவுதான் இன்று சாந்தியுடன் நான் இருந் தாலும், கடந்த எனது செயல்களின் நினைவுகள் என் னைக் கொல்லாமல் கொன்று வந்தன. மறந்துவிட முடிய வில்லை. அவைகளை நினைக்க, நினைக்க துன்பம் என் னுள் புகுந்து விடுவதுடன், தூய்மையும் என்னுள் புகுந்து விடுவதை உணரலானேன்.

'வாழ்க்கைப் பாதையில் வந்துபோனவர்கள்' என்ற தலைப்பில் எனது டைரியில் யோசித்து, யோசித்து ஒவ் வொருவராக எழுதி, கடைசியில் அதில் கடவுளின் பெயரையும் சேர்த்து விட்டேன். அப்பொழுது கூட என் வசந்தாவின் பெயரை அதில் சேர்க்க என் மனம் இடம் தரவில்லை. அவள் என்னுள் கலந்து விட்டாள், ஏன், நானாகவே அவள் மாறிவிட்டாள் என்றும் சொல் லலாம். என் நெஞ்சமோ, அவளது நினைவுகளால்தான் ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி பெருமைப் படு கிறேன்.

அவள் எங்கிருந்தாலும் சரி, அவளை ஒரு நாள் சந் திக்கத்தான் போகிறேன். 'உண்மையான மனிதனை இதோ பார்!' என்று அவளது திரு முன்பில் போய் பணிந்து நிற்கத்தான் போகிறேன். அவள் என்னை ஒப் புக்கொண்ட பிறகுதான், அந்த அறிவுத் தாய், என்னை 'உண்மையான மனிதனே' என்று ஒரே ஒரு தடவை யாவது அழைத்த பிறகுதான், அந்த அன்புத் தெய் வம் எனக்கு ஆசி தந்த பிறகுதான்......

நான் இலக்கிய உலகில் மீண்டும் காலடி எடுத்து வைக்கப் போகிறேன்.

சிரித்துப் பேசி ஒரே ஒரு நாள் என்னிடம் ஒரு நடிகை விளையாடியதற்காக,அவள் சொந்தமாகப்பிடித்த ஒரு படத்திற்கு கதை, வசனம், பாடல் இனமாகவே எழுதிக் கொடுத்திருக்கிறேன்!

தேர்தல் நேரங்களில் தெருவோரம் என் ரசிகர் களைக் கொண்டு நிறுத்தி, என் எழுத்துக்களை ஏலம் கூறியிருக்கிறேன்!

'ஸெக்ஸ்'தான் இப்போது அதிக.விற்பனை தரும் என்று சொன்ன அந்தத் பத்ராதிபருக்கு, நான் எழுதிக் கொடுத்த புத்தங்களை, சினிமா நடிகையர்களே தனிமை யிலும் வாசிப்பதற்கு வெட்கப் பட்டிருக்கிறார்கள்!!

எதாவது ஒரு கட்சிப் பத்திரிகை என் திருவுரு வத்தை, அட்டைப் படத்தில் ஒரே கலரில் அச்சிட்டா லும் போதும், உடன் நான் அந்தக் கட்சியை ஆதரித்தி ருக்கிறேன். உடனே, அதனுடைய எதிர்க் கட்சி என் திருவுருவத்தையே மூவர்ணத்தில் அட்டையில் பிரசுரித்

தால், உடனே கட்சி மாறி ஆதரித்ததையே எதிர்க்கக் கிளம்பி யிருக்கிறேன்.

மடாதிபதிகளும், படாதிபதிகளும் தங்கள் கைக ளால் எடுத்துப் படிக்கும் முதல் புத்தகம், பெரும்பாலும் என்னுடையதாகத்தான் இருக்கும். அந்த அளவுக்கு தீய உணர்ச்சிகளை நான் என் புத்தகங்களில் திணித்து வைத்திருந்தேன்.

கம்பனை ஆதரிப்பவர்களே, என்னை வெறுக்கும் அளவுக்கு, நான் காமம் பேசியிருக்கிறேன்!

மனு தர்மத்தை ஆதரிப்பவர்களே, என்னை மாய் மாலக்காரன் என்று தாக்கும் அளவுக்கு, நான் கட்சி மாறி, கருத்து மாறி, நீதிமாறி, நேசம் மாறிப் பேசியிருக் கிறேன்!

சேக்கிழாரை, சைவ சமயக் குரவர்களை, அருண கிரியைப் பாராட்டுபவர்களே என்னைப் பழிக்கும் அள வுக்கு நான் பொய்யுரைகளை எனது புத்தகங்களுக்குள் புதைத்து வைத்திருக்கிறேன்!

என்னை நினைத்த மாத்திரத்திலேயே வருந்தி அதிர்ச்சி யடைந்த ஒரு நல்லவர் அமரபதவிக்கும் உரிய வராகி விட்டார்!

இன்னும் இப்படி எத்தனையோ......!

நினைக்கும் போது பெருமூச்சு வருகிறது. இதே மூச்சு, கடைசி மூச்சாகவும் அமைந்துவிடக் கூடாதா என்றும் கவலைப்பட ஆரம்பித்து விட்டேன்!

அப்படிக் கெட்டலைந்த என்னையே நல்ல முறைக்குக் கொண்டு வந்து விட்டாள், வசந்தா!

"குந்தியிருக்கப் பாய் இல்லையே, குலவவும் பொழுதில்லையே, கூந்தலுக்குப் பூ இல்லையே, குத்து விளக்குக்கும் எண்ணெ இல்லையே, உண்ணுவதற்கு உணவில்லையே, உடுத்துதற்கு உடை இல்லையே"—என்ற ஏக்கம்தான் பெண்களுக்கு வரும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இவளோ உலகத்திற்கு மனிதன் இல்லையே என்று ஏங்கி சாகிருள்!

பாரதி இன்று இருந்தால், தமது புதுமைப் பெண் என்ற கவிதையை இவளுக்குத்தான் சமர்ப்பித்திருப்பார். இனியொரு அமரகவி பிறக்க விருந்தால், அவன் கூட எனது இவளைத்தான் உவமைப் பெண்ணை காட்டி மகிழப் போகிருன்!......இதெல்லாம் வசந்தாவைப் பற்றிய என் கருத்துக்கள்!

நான் அவளை விசாரித்துக் கொண்டிருப்பது, அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ அறியேன்!

பி. ஏ. பாஸ் செய்து விட்டாளாம். சொந்த ஊரிலேயே பள்ளி ஆசிரியையாக வேலை பார்க்கிருளாம். 'திருமணமே வேண்டாம்' என்கிருளாம். 'ஏன் வேண்டாம்?' என்று சக ஆசிரியைகள் கேட்டதற்கு, 'எவனுவது ஒரு உண்மையான மனிதன், இந்தக் கேள்வியைக் கேட்கட்டும்—அப்போதே அவனுக்குத் துணைவியாகி விடுகிறேன்' என்கிருளாம். இந்தப் பதில் அந்த ஊரெங்குமே பிரபலப் பட்டுக் கிடக்கிறது. விசித்திரமான பெண். வானத்தில் கோட்டை கட்டிய பிறகு,

'ஐயோ' என்று கவலைப் படுகிறவர்களைத்தான் நான் கண்டிருக்கிறேன். இவளோ, வானத்தில் கோட்டை கட்டிக் கொண்டே, இருக்கின்ற இடம் இன்னும் கோட்டையைக் கட்டி முடிக்கப் போதுமோ போதாதோ என்று கவலைப் படுகிருள்.

தாயும் காலமாகி விட்டாளாம்—தனிமையில் தான் வாழ்கிருளாம்!

அன்றுதான் ......

என் வாழ்வில் மாபெரும் ஆச்சர்யம் ஒன்றைச் சந்தித்தேன்.

வசந்தா எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.

"என்னைக் கவர்ந்த கனக சுந்தரத்துக்கு" என்ற தினுசில் கடிதம் ஆரம்பமாயிருந்தது. படித்தேன். பயந்தேன். குழம்பினேன். சமாளித்துக் கொண்டேன்——ஒரு வேளை, அது தாய் தரும் முத்தமாகவும் இருக்கலாம் அல்லவா! என்று எனக்குள் பேசிக்கொண்டேன். சாந்தியடைந்தேன்.

மீண்டும் ஒருமுறை படித்தேன். பழையபடி பயம் வந்து விட்டது.

என்னைப் பற்றி அவளும் விசாரித்துக் கொண்டுதான் இருக்கிருளாம். நான் உண்மையான மனிதனுகி விட்டேனும். இனி எனக்கு வாழ்க்கை இருக்கிறதாம். ஆகவே, அதற்கொரு துணை தேவையாம். அதற்காகத்தான், அவள் தன் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிருளாம்.

இதைப் படித்ததும்......

என் மனத்திரையில்......

களை பிடுங்கிய கைகளே, பயிரையும் பிடுங்குவது போன்ற ஒரு காட்சி வந்து மறைந்தது!

சீச்சீ! அதெல்லாம் இருக்காது. சும்மா அப்படியே சோதனைக்காகத்தான் எழுதியிருப்பாள் என்று என்னை நானே சமாதானப்படுத்த முயன்றேன்.

மொத்தத்தில் கூறப்போனல்......அந்தக் கடிதத்துக்கு அவ்வளவு முக்கியத்வம் கொடுக்க வில்லை, நான்! அந்தக் கடிதத்தை முதலில், அவளுடைய போட்டோவை நான் மதிப்புடன் வைத்திருக்கும் ஸ்டாண்டில் வைத்தேன். அப்புறம் எடுத்து வேறு இடத்தில் வைத்து விட்டேன். தன் தாயின்படத்தில், ஒரு பைத்தியக்காரப் பிள்ளைகூட தூசி படர சம்மதிக்க மாட்டான் அல்லவா!

★

அட பேதை உலகமே!

உனக்கு நான் அனுதாபப் பட்டு உதவுகிறேன்;
என்னால் அவ்வளவுதான் முடியும்!

## வசந்தா :

போட்ட கடிதத்துக்குப் பதில் எழுதக் கூட அவருக்கு நேரம் கிடைக்க வில்லை போலிருக்கிறது...... அந்தக் கடிதத்தை இன்னும் முத்தமிட்டுக் கொண்டேயிருக்கிறாரா அல்லது, மூலையில்தான் எறிந்து விட்டாரா என்பதை என்னால் யூகிக்கவே முடிய வில்லை.

நான் இப்போது செய்துள்ள முடிவுக்கு, முதன் முதல் காரணமாக இருந்தது அவர்தான்! தொடங்கினார். நான் முடிக்கப் போகிறேன். எங்களது வாழ்க்கைச் சித்திரத்தில் எங்களது இருவரின் பெயர்களும் பொறிக்கப் படுவதுதான் நேர்த்தி நியாயம்!

'மாட்டேன்' என்று அவர் ஒருக்காலும் சொல்ல மாட்டார். அதிலும், எப்படியோ இருந்த அவரை நல்லவராக ஆக்க என் புத்திமதிகளே காரணமாக இருந்திருக்கும்போது என்னை அவர் மறந்து விடுவாரா? மறந்தாலும் நான் அவரை மறந்து விடுவதாக இல்லை... முடிவு செய்தே விட்டேன்:

நான் என் கைகளால் கட்டியபூச்சரம்தான், அவர். அதை நானே சூட்டிக் கொள்வதில் தவறு என்ன?

'அன்றே' நான் சூட்டிக் கொண்டிருக்கலாம். உதிரியாக இருக்கும் மலர்கள் எனக்குப் பிடிக்காது. அதனால் தான், அவைகளை நானே சரமாகத் தொடுத்தேன், சரமாக்கும் வரை பொறுத்திருக்க முடியும் என்ற தன்னம்பிக்கையால்!

"கலியாணமே வேண்டாம்" என்றவள் இப்போது கலர்ப் புடவைகளைத் தேர்ந்தெடுத்துக் கட்டுகிறாளே, இருக்கிற அழகு போதும் என்றவள், இப்போது இன்னும் அழகைப் பெருக்குகிறாளே, அபூர்வமாகச் சிரித்தவள், இப்போது, அடிக்கடி சிரிக்கிறாளே, சலனமற்றிருந்த வதனத்தில் சபலம் நடமாடுகிறதே"—என்றெல்லாம் எனது சிநேகிதிகள் பேசிக் கொள்வது, எனது அத்தியந்த மாணவிகள் மூலம் என் காதிலும் "விழுந்தது." இங்கே "விழுந்தது" என்ற வார்த்தையை விட, "ஒலித்தது" என்ற வார்த்தையே சர்வ பொருத்தம் என்று கருதுகிறேன்.

ஒருவாரம் ஓய்வு கேட்டேன். தலைமையாசிரியை என்னை நோக்கி தீயதொரு அர்த்த புஷ்டியுடன் சிரித்தாள்.

சுவர்க்கத்துக்குப் பாதை போட்டாகிவிட்டதா என்று கேட்டாள்.

ஆமாம். போட்டாகிவிட்டது. ஆனால் ஒரு சங்கடம். புறப்படும் போதே, பல நரகங்களைக் கடந்துதான் அங்கு போகமுடியும் போலிருக்கிறது என்று துணிகரமாக பதில் சொன்னேன்.

நான் இன்னும் வீசவிருந்த சொல்லம்புகளை, அவள் என்னைத் தட்டிக்கொடுத்துக் கொண்டே, என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டாள் என்று சொல்லலாம்.

வீடுவந்தேன்.

என் சமீபகால நடவடிக்கைகள் தானாகவே என் நினைவுக்கு வந்தன. என்னால் துக்கம் தாங்க முடியவில்லை. என் தாயாரின் படத்தை எடுத்து வைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன்......அரை மணி நேரத்துக்கு மேலாகியும் அழுகையை நிறுத்த முடியவில்லை. படத்தை கீழே வைத்தேன். அப்புறமும் அழுகை நிற்கவில்லை.

முடியாது—முடியவே முடியாது என் கண்ணீர், ஏதேனும் ஆசைகள் நிறைவேறவில்லையே என்பதால் ஏற்பட்டதாக இருந்தால், அதை நிறுத்தியிருக்க முடியும். ஏதேனும் சிறு சிறு குற்றங்களை செய்ததால், வரும் கண்ணீராக இருந்தாலும், சாந்தி பிறக்க வழியுண்டு.

ஆனால்.........

நானோ.........?

மனித இனத்தையும், மன்னிப்புகளையும் மீறும் அளவுக்குக் குற்றங்கள் புரிந்தவளாகிவிட்டேன்.

"உணர்ச்சிகளை நீங்கள் ஆளுங்கள்—உணர்ச்சிகள் உங்களை ஆளக்கூடாது" என்று எந்த வீட்டில் நின்று

கொண்டுஒருஇலக்கிய மேதைக்கே நீதி போதித்தேனே அந்த வீட்டுக்குள்ளேயே, அதே நான், சோரத்தை அரசாள விட்டுவிட்டேன்.

ஒழுக்கம் தவறிவிட்டேன்.

ஒரு முறை!

ஒரே ஒரு முறை!

"பசிக்கிறது, இந்த ஒரே ஒரு தடவை மட்டும் சாப்பிட்டு விடுகிறேன்" என்று சொன்னனும், ஒரு பைத்யக்காரப் பயல்! அவனைப் போலவே, நானும் இந்த "ஒரே ஒரு தடவை மட்டும்" என்ற சொற்றொடரை உபயோகப் படுத்திக்கொண்டேன், முதன் முதல் நாளில், முதன் முதல் தடவையில்!

அப்புறம்......?

அப்புறம் ஏது அப்புறம்?

அப்புறம் என்ற வார்த்தைக்கே இடம் இல்லை. இப்புறமும், அப்புறமும் ஏகப்புறமாகிவிட்டது!

நான் என்ன செய்யட்டும்!

அதெல்லாம்......

சூழ்நிலைத் தெய்வத்தின் சூட்சமமான விஷயங்கள்!

உணர்ச்சித் தேவனின் திருவிளையாடல்கள்!

என்னைக் கெடுத்தவர்களின், தப்பு தப்பு, என்னை நான் கெடுத்துக்கொள்ள எனக்கு உதவியவர்களின்

பெயர்களைக்கூட எனக்குத் தெரியாது. தெரியவும் வேண்டாம். ஒவ்வொரு பன்றியிடமும் போய் உன் பெயரென்ன, உன் இனமென்ன என்று அநாகரிக மாக நாம் விசாரிக்கலாமா? மொத்தமான மொழியில் ‘பன்றிகள்’ என்று சொல்லிவிடுவதுதானே, சுத்த மான நாகரிகம்!

இவைகளில் எதுவும் ஊருக்குத் தெரியாது. அவ் வளவு கனகச்சிதமாக நடித்திருக்கிறேன். ஒரு பெண் எப்படி வாழவேண்டும் என்பதற்கு, பள்ளியில் என்னை உதாரணம் காட்டி தலைமை ஆசிரியையே பேசுவ துண்டு. ஒருமுறை அவள் அப்படிப் பேசும் போது, கையால் தலையிலடித்துக்கொண்டேன். அதைப் பார்த் தவர்கள், முகஸ்துதி பிடிக்காமல் தலையில் அடித்துக் கொள்கிறாள் என்று புகழ் பேசிக்கொண்டார்கள்.

அட பேதை உலகமே!

உனக்கு நான் அனுதாபப்பட்டு உதவுகிறேன்; என்றால் அவ் வளவுதான் முடியும்.

“எப்படியோ இருந்த நாம் இப்படியா ஆகிவிட் டோம்” என்ற சிந்தனையிலேயே வீதியில் நான் நடந்து கொண்டிருக்கும் போது, ‘‘எப்படியிருந்தாளோ அப் படியே இருக்கிறாள்’’ என்று உலகம் என்னை புகழ்ந்து பேசுவதையும் காதாரக் கேட்டிருக்றேன்.

புகழில் எனக்கு இயல்பாகவே பிரியம் உண்டு. இப்பொழுதோ, புகழைக் கண்டால் முட்செடியைக் கண்டது போல் இருக்கிறது. உலகமோ, அதே முட்

செடிகளைத் தாங்கமுடியாத அளவுக்குக் கட்டுகட்டாகக் கட்டிச் சுமையாக்கி, என் தலையில் வைத்து அழகு பார்த்து, எனக்குத் தக்க காணிக்கை செலுத்தி விட்டது போல மகிழ்கிறது!

வரவர இந்த வாத்தியாரம்மா வேலையை ராஜினமா செய்துவிடலாமா என்ற எண்ணமும் வருகிறது. இந்த வேலை வேண்டாம், இந்த ஊர் வேண்டாம், இந்த எதுவுமே வேண்டாம், அந்தக் கனகசுந்தரம் மட்டுமே போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

இந்தச் சூழ்நிலை, கனகசுந்தரத்திடம் இல்லாத நலன்களையும் இருப்பதாகக் காட்ட வல்லது! மேலும், உண்மையிலேயே கனகசுந்தரம் இப்போது உண்மையான மனிதராக வாழ்கிருர் என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் என் செவியில் வந்து அழையாமலே நுழைந்தன!

ஆகவே.........

அவரிடம்தான் சரண்புகவேண்டும். அவரிடம்தான் மன்னிப்பு கேட்கவேண்டும். அவரையே வாழ்க்கைத் துணைவராக ஆக்கிக்கொண்டு புதுவாழ்வு தொடங்க வேண்டும்—என்றெல்லாம் உறுதியே செய்துகொண்டு, அவரிருக்கும் ஊர் தேடிப் புறப்பட்டேன்.

ரயில் ஏறினேன்.

அவரது இலக்கியச் செல்வங்களுடன், இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் விளையாடும் வாய்ப்பை, அந்த ரயில் பிரயாணம் எனக்கு நல்கியது.

சொர்க்கம் நோக்கிப் பிரயாணம் செய்கிறோம், என்பதை எண்ணினேன்—பூரித்தேன்.

பழகிய நரகம், புதிதான சொர்க்கத்தைவிட அதில் சுகம் தருவது என்று அவர்தான் புத்தகத்தில் எழுதியிருக்கிறார் இப்போது அதைப் படிக்கும்போது சிரிப்பு வந்தது; நேரம் ஆக, ஆக பயமே வந்துவிட்டது. ரயில் மட்டும், ஒரே தாளத்தில் ஓடிக்கொண்டிருந்தது!

★

'வா, வா' என்று வருந்தியழைப் பீர்களே, அந்த வசந்தா இன்று கசந்தா போய் விட்டாள்?

## கனக சுந்தரம் :

வந்து இரண்டு தினங்களாயின.

பழைய வசந்தா மாதிரியே இல்லை.

பேச்சு, நடை உடை பாவனைகள் யாவுமே மாறி விட்டன. தொட்டுத் தொட்டுப் பேசித்தானு அன்பைக் காட்ட வேண்டும்? இந்த சர்வசாதாரணமான விஷயத்தைக் கூட இப்போது மறந்து விட்டாளே!

நான் என்னமோ எப்போதும் போல் தான் நடந்து கொண்டேன். அவளோ, தனது புதிய போக்கில் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தாள்.

அர்த்த மில்லாமல் சிரிக்கிருள்—நானும் கஷ்டப் பட்டாவது சிரித்தாக வேண்டியதிருக்கிறது. இல்லையென்ருல், என் மீது ஏதாவது கோபமா என்று கேட்டுக் கொண்டே என் முகத்தில் கைபரிமாற ஆரம்பித்து விடுகிருள்.

அன்று பேசிக்கொண்டிருக்கும் போது தான், அவள் புத்துலகப் பாதையில் எவ்வளவு தூரம் போயிருக்கிருள் என்பதை உணர முடிந்தது.

துவக்கினுள்.

"என் கையினுல் கட்டப் பட்ட பூச்சரம் தானே நீங்கள்"

"யார் இல்லை என்றது?"

"அப்படியானுல், என் கைபட ஏன் சம்மதிக்க மாட்டேன் என்கிறீர்கள்?"

"வசந்தா! இந்தச் சரம் ஏற்கனவே எத்தனையோ பேர்க்குக்கு உபயோகமாகி விட்டது"

"இறுதியிலாவது எனக்கு...?"

"என்னிடம் என்ன தான் கேட்கிருய்?"

"நானுகவே ஒன்றும் கேட்க வர வில்லையே அன்று, நீங்கள் கேட்டதை இன்று தருகிறேன் என்கிறேன் அவ்வளவு தான்!"

"அதாவது, நோய் நீங்கியவனை, மருந்துண்ணச் சொல்கிருய், அது தானே!"

"மருந்தல்ல நான தருவது. உயிர் வாழ இன்றியமையாத உணவு. நோய் நீங்கி விட்டதென்று சொல்கிறீர்கள். அதனுல் தான் உண்ணச் சொல்கிறேன்"

"சோதிக்கிருயா?"

"சோதனையா? அந்தக் கெட்ட குணம் கடவுளோடு தொலையட்டும் என்று நீங்கள் தானே அன்று சொல்லியிருக்கிறீர்கள்".

"தயவு செய்து போய் விடு."

"எங்கே போவது?"

"அது எனக்குத் தெரியாது. இங்கே இருக்காதே. போய் விடு. அவ்வளவு தான் தெரியும்."

"ஏன் அப்படி?"

"கேள்வி பதில் நமக்குள் வேண்டிய தில்லை. போய் விடு."

**"வா, வா என்று வருந்தியழைப்பீர்களே, அந்த வசந்தா இன்று கசந்தா போய் விட்டாள்."**

ஆ! ஏந்திய கைகளே, ஈந்து நிற்பதா? வசந்தா! ஒழுக்கத்தை எனக்குக் கற்பித்த நீயா இப்படி மாறி விட்டாய். அன்று நீ என்க்குச் சொல்லித்தந்த அறிவுரைகள் தானே, இன்று நான் மறுப்புரைக்கக் காரணம். எங்கெல்லாமோ, எப்படி யெல்லாமோ திரிந்த என்னை, நீதானே, எடுத்துக் காட்டு மணிதனுக்கி யிருக்கிறாய். கடந்து வந்து விட்ட காட்டாற்றில் இன்று நீயே வந்து என்னைத் தள்ளுகிறாயே! ஐயோ! புத்தி மதிகளை யாருமே ஊருக்குப் போதிக்காமலிருக்கும் வரை, நல்லவர் களாகத்தான் வாழ்கிறார்கள். ஊருக்குப் போதிக்கக் கிளம்பியதுமே, தாங்களும் கெட்டுப் போய் விடுகிறார் கள்.

வசந்தா! கேள்! அன்று ஊருக்குப் போதித்தேன். ஊதாரியாகத் திரிந்தேன். இன்று எனக்கே நான் போதித்துக் கொண்டிருக்கிறேன். எடுத்துக் காட்டு மணி

தனுக வாழ முடிகிறது. அது போல, அன்று உனக்கே நீ போதித்துக் கொண்டிருந்தாய். உத்தமியாக வாழ்ந் தாய். இன்று, ஊருக்குப் போதிக்கும் ஒரு பிரசங்கியாக மாறிய உடனேயே கெட்டுப் போய் விட்டாய்.

"வசந்தா! இதோ இதை நன்ருகப் பார்!" என்று அழுகையுடன் சொல்லிக் கொண்டே, நான் வைத்தி ருந்த படத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தேன்.

மீண்டும் தொடர்ந்தேன்.

"பார்! நன்ருகப்பார்! என் மனித தெய்வம் இது தான். இதயத்தால் அனுதினமும் ஏத்திப் புகழ்ந்து வரும் எனது ஏகத்தெய்வம் இதேதான். எனது இதய வுலகின் ஏகப்பரிதியாக விளங்கும் நீ ஏன் எனது இறை யாகவும் இருக்கக் கூடாது என்று எத்தனையோ பேர்க ளிடம் வாதாடி வெற்றியும் பெற்றிருக்கிறேன்...!

ஆனல்...!

தெய்வமாகிய நீ பக்தனைப் பலி கேட்கும் அளவுக்கு வந்து விட்டாய். ஆட்டை, கோழியைப் பலிகேட்கும் அந்தத் தெய்வங்களைவிட, நீ மட்டமாகப் போய் விட் டாயே!

"ஐயோ!"

அலறி வீழ்ந்தேன். அவ்வளவு தான் தெரியும்.

அதிர்ச்சியாம்!

கொஞ்ச நேரம் கழித்து, என் முகத்தில் தண்ணீர் தெளிக்கப் பட்டிருந்தது. வசந்தா அருகிலிருந்து விசிறிக் கொண்டிருந்தாள்.

இரண்டு தினங்கள். அப்படியே நகர்ந்தன.

இந்த இரு தினங்களாக, வசந்தா பழைய வசந்தாவாக நடந்து கொண்டாள்.

தான் வாழ்க்கைப் பாதையில் தவறி விட்ட சங்கதிகளைச் சொல்ல, வாயெடுத்தாள்.

"சொல்ல வேண்டாம், எல்லாம் எனக்கும் தெரியும்" என்று தடுத்து விட்டேன்.

★

இலக்கிய கர்த்தாக்களே! உங்களுக்குத் தோன்றும் உயர்ந்த நீதிகளை, நீங்கள் தயவுசெய்து எழுதிப் போதிக்க வேண்டாம்; வாழ்வில் செய்து காட்டுங்கள்!

## வசந்தா :

என் தீய செயல்களை எல்லாம் கேட்ட பிறகும் கூட, என்னைத் தெய்வமாகக் கருதி வந்ததை, அவர் மாற்றிக்கொள்ளவில்லை.

அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

ஆகவே, நான் தெய்வம் என்னும் பட்டத்துக்குத் தகுதியற்றவள்!

என்னைப் பாராட்டவும் இல்லை—கண்டிக்கவும் இல்லை. வெறுக்கவும் இல்லை—விரும்பவும் இல்லை. அதே நேரத்தில், என்னை மறந்துவிடவும் இல்லை.

அபூர்வமான மனிதர்.

கெட்டலைந்த போதில் ஒரு நாள் என்னைத் தொட்டிழுத்தார். போதித்தேன். உணர்ந்தார். திருந்தினார். அப்போதே என்னைத் தெய்வமாக நினைக்க ஆரம்பித்து விட்டார். அவர் நினைக்க ஆரம்பித்த உடன்தானே, என்னவோ, உடனே தெய்வமாகிவிட்ட நானும் புராண காலத்துக்கு ஓடிவிட்டேன். பக்தனையே தின்று பசி தீர்க்கும் அளவுக்கு நான், தீவிரமான தெய்வம் ஆகிவிட்டேன்.

இனிமேலாவது...

போதனை புரியக் கிளம்பியவர்களுக்கெல்லாம், என் வாழ்க்கை ஒரு எச்சரிக்கையாக அமையட்டும்.

அதென்னமோ தெரியவில்லை.

போதிப்பதற்கென்று கிளம்பிய உடனேயே, ஊர் உலகம் நம்மை நம்புகிறது—புகழுகிறது. அப்போது நமக்கு நம்மையறியாமலேயே, ஒருவித தற்பெருமை, கர்வம். அந்த கர்வம், முதலில் அறிவுக் கண்ணை குருடாக்கி விடுகிறது. அன்புள்ளத்தைச் சுட்டெரித்துவிடுகிறது. அப்போதுதான் போலித்தனங்கள் கிளம்புகின்றன.

கடைசியில்......

போதிப்பது என்பதே, தங்களால், செய்ய முடியாதவைகளை, பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் என்று ஒரு நூதனமான அர்த்தம் பிறந்துவிடுகிறது.

**இலக்கிய கர்த்தாக்களே! உங்களுக்குத் தோன்றும் உயர்ந்த நீதிகளை நீங்கள் தயவு செய்து எழுதிப் போதிக்க வேண்டாம். வாழ்வில் செய்து காட்டுங்கள்.**

அரசியல் தலைவர்களே! உங்களிடம் நடமாடும் எண்ணங்கள் யாவும், செயலுருவம் பெற்ற பிறகு, மக்கள் மன்றத்தில் உலவினால் போதும்!

மதபோதகர்களே! ஒருவர் புண்ணை மற்றொருவர் நோண்டிக் கொண்டிருக்காதீர்கள். தங்கள் புண்ணுக்

குத் தாங்களே மருந்திட்டுக் கொள்ளுங்கள், ஏன்? புண்ணே ஏற்படாமல் சுகாதாரமாக இருக்க முயலுங்கள்; அதுதான் சுத்த சன்மார்க்கம்!

இந்தத் தினுசில்தான், நான் கடைசியில் ஏறிய பொது மேடையில் பேசினேன். ஒரே எதிர்ப்பு.

பேசத் தெரியாமல் பேசுகிருள் என்று ‘பேசத் தெரிந்த பலர்’ பேசிக்கொண்டார்களாம்!

இலக்கிய கர்த்தாக்கள், இதில் மட்டும் இணைந்த மனதாகி, எள்ளிநகை புரிந்தார்களாம்!

அரசியல் தலைவர்கள், ‘பனங்காட்டு நரி சிலு சிலுப்புக்கு அஞ்சாது’ என்ற பழமொழியை அவிழ்த்துவிட்டார்களாம்.

மதபோதகர்கள், “மதம் ஒரு அபினி என்று சுய நினைவில் சொல்லியவனைக் கண்டே நாம் அசந்துவிடவில்லையே” என்று வீரம் மொழிந்தார்களாம்!

பாவம்! ஓரளவில் இவர்கள் எல்லாரும் பொறுமைசாலிகள்தான். தாக்கும் மொழிகளில்கூட, தங்களுக்கு ஏதாவது சாதகமான அபிப்பிராயம் வந்திருக்கிறதா என்று தேடிப் பார்க்கிருர்கள். எச்சில் இலைகளை இவர்கள்மேல் எறிந்தாலும், தட்டிவிடாமல் அவைகளைப் பிடித்துத் தடவித்தான் பார்ப்பார்கள் போலிருக்கிறது.

என்ன செய்வது? நாடென்ருல், அதற்குள் காடும் இருக்கத்தான் செய்கிறது. புயல்வீசாக் கடலை, புராண

அதிசயங்களில்கூட காணமுடியாதே. நன்மைக்கு மத்தியில் தீமையும் இருக்கிறதே என்று கவலைப்பட்டு, நொந்துகொண்டிருப்பதைவிட தீமையைச் சுற்றிலும் நன்மையும் இருக்கிறது என்பதை எண்ணிக்கொண்டிருப்பதுதான் சரியானது, என்று கருதுகிறேன். தின்னக்கூடாத கொட்டையைச் சுற்றித்தானே தீங்கனி அமைந்திருக்கிறது!—என்பதைதான் இங்கே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும்.

இதெல்லாம் என்னை நான் சமாதானம் செய்துகொள்ளும் முறைகள். வேறு யார் எனக்கு அமைதி தரப் போகிறார்கள். தர யார்தான் இருக்கிறார்கள்?

இப்படி எண்ணிக்கொண் டிருக்கும்போதுதான், அன்று நடந்த சம்பவம் என் மனக் கண் முன் வந்து மறைந்தது......!

"வசந்தா! நீ...அழகை நம்பியே அழிந்துவிட்டாய்!"

"ஆமாம்! சிறு வயதில் ஒரு நாள் என்னுடன் சேர்ந்த பிள்ளைகள் எல்லாம் கரும்பின் கணுக்களைப் பார்த்து, கரும்பு வாங்கினார்கள்! நான் அவர்களையெல்லாம் மூடர்கள் என்று நினைத்துக்கொண்டே, கரும்புத் தோகையின் கவர்ச்சியைப் பார்த்தே கரும்பு வாங்கினேன்."

"நீயென்ன, நானும் அப்படித்தான்! ஆனால், போகப் போக, புரியப் புரிய, பொறுக்கப் பொறுக்கத்தான், நல்லதுகளை அணுக முடிந்தது, அடைய முடிந்தது, அனுபவிக்கவும் முடிந்தது!......

வசந்தா! உன் வாழ்க்கை எனும் கடல் பயணம் துவக்கத்தில் அழகாகத்தான் இருந்தது. நல்ல பாதையில்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால், மற்ற பிரயாணிகளுக்கும்கூட, வழிகாட்ட முடியும் என்ற அளவுக்குத் திடமுமிருந்தது......

ஆனால்......

கலங்கரை விளக்கத்தைக் காணாமல் நீ தவித்துக் கொண்டிருந்த நேரத்தில்......வானை நோக்கிக்கொண்டிருந்தாய்......மின்னல் அடித்தது......அந்த ஒளியையே கலங்கரை விளக்கம் தரும் ஒளியென நம்பத் தொடங்கினாய்......தொடங்கிய அந்த விநாடியிலே, உன் விழிகளையே இழந்துவிட்டாய்!

இதில் யாரைக் குற்றம் சொல்ல இருக்கிறது? எல்லாம், சூழ் நிலைத் தெய்வத்தின் சூட்சமமான விஷயங்கள்!"

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே இருமினார். டாக்டர் தந்திருந்த மருந்தைக் கொடுத்தேன். சாப்பிட்டார். காப்பி கேட்டார். கொடுத்தேன். கையில் வாங்கியவாறே, என்னை நோக்கி இலேசாக ஒரு புன்கை பூத்தார்.

"வசந்தா!"

"என்ன! என்ன வேணும்?"

"ஒண்ணும் வேண்டாம்."

"என் அருகிலேயே இரு"

"இருக்கிறேன். ஏன் ஒரு மாதிரியாகப் பேசுகிறீர் கள்?"

இப்போது அவர் முகத்தில் இதுவரையும் காணப் படாத—இனியும் காணக் கூடாத—ஒருவித பயங்கரக் களை தென்பட்டது.

தம் அருகில் கட்டி வைத்திருந்த ஒரு காகிதக் கட்டை எடுத்து என்னிடம் தந்தார்.

"வசந்தா! உன் சித்தாந்தப்படியே, நான் ஒரு உண்மையான மனிதனான பிறகு எழுதப் பட்ட இலக்கி யங்கள் தான் இவைகள். இவைகளை வெளியிடும் வலிமை இன்று உலகத்துக்கு இல்லை. நாளைய உலகிலாவது இவைகள் உலவட்டும!

இன்று என்னை உலகிற்குத் தெரியாது. நீ என் னைப் படைத்தாய். நான் இவைகளைப் படைத்து விட் டேன். சரிபார்த்துக் கொள் வசந்தா."

"ஐயோ! ஏன் இப்படி விழிக்கிறீர்கள். கனகசுந்த ரம், உங்களை நான் பிரிவதா? ஐயோ! ஐயோ!"

"நான் வருகிறேன்".

கண்கள் மூடின.

இமைகளின் இறுதிப் பணி முடிந்து விட்டது.

"நான் வருகிறேன்" இதுதான் அவரது கடைசிக் குரல். ஆம், அவர் நாளைய உலகில் இலக்கிய உருவில்

வரத்தான் போகிறார், என்று அன்றே எனக்குள் முடிவு செய்து கொண்டேன்.

இரண்டு மூன்று தினங்கள் கழித்ததும், நான் அவரது குடிசையைக் காலி செய்து விட்டு, முக்கியமான சாமான்களுடன் என் வீடு வந்து சேர்ந்தேன்.

அவரது இலக்கியங்களை அப்படியே ஒரெழுத்தும் திருத்தாமல் கனக சுந்தரம் என்னும் அவரது பெயரி லேயே வெளியிட்டு வருகிறேன்.

அந்த மேதையுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப் புக் கிட்டியதை எண்ணி பெருமைப் படுகிறேன். இதற் குச் சமமான பெருமையும், பேரானந்தமும், நான் எனக் குப் பிடித்தமான ஒருவரை மணம் செய்து கொண்டா லுங் கூட கிட்டாது. ஆகவே இப்படியே காலம் கழித்து விடலாம் என்று தீர்மானித்து விட்டேன்.

பள்ளிக்கூட ஆசிரியை வேலையுண்டு. கனக சுந்த ரத்தின் இலக்கியங்கள் உண்டு. சிநேகிதி மரகதம் உண்டு—நான் உண்டு இவைகளைத் தவிர எனக்கு இந்த உலகில் எதுவுமே இல்லை; எதுவுமேவேண்டாம். என்ன சுகம்கண்டு, இவள் இப்படிஇன் முகத்துடன் சதாகாட்சி யளிக்கிறாள்என்பது அநேகம்பேர்களுக்குப் புதிராகவே இருக்கிறதாம்!

கனக சுந்தரம், கனககசுந்தரம் என்று என்னைத் தமாஷாகவேனும் உலகத்தவர்களால் கூப்பிட்டு மகிழும் அளவுக்கு நான் கனககசுந்தரக் கொள்கைகளில்

ஐக்கியமாகி விட்ட சுகம் ஒன்றே ஒன்று போதாதா நான் இன்ப மடைய!

அவ்வளவுதான்!

புத்தகம் முடிந்தது.

ஒரு பெருமூச்சு.

அப்புறம் என்ன செய்வதென்றே ஓடவில்லை!

முற்றுப் புள்ளி வடிவத்திலிருக்கும் உலகம், மாய மாகி மறைந்து கேள்விக் குறி வடிவத்தில், அதாவது—? —இப்படியாகி விட்டது போல் என் கண்ணுக்குத் தோற்றமளித்தது!

எத்தனை விந்தைகள்!

சூழ் நிலையைத்தான் இனிமேல் தெய்வமாகச் கருத வேண்டும்என்பது என் முடிவு!

எல்லாவற்றையும் படைத்திருக்கிறார் என்று சொல்லப் படும் கடவுளைப் படைத்திருப்பதே உலகத் தின்—மனிதன்—சூழ்நிலைதான்என்பது என் ஆதாரம்!

விதி என்று ஒன்று இருப்பதாக வைத்துக்கொண் டாலுமே, அந்த விதியையும் சூழ்நிலை என்பது மாற்றி யமைத்து விடும் போலிருக்கிறதே!

அப்பப்பா!

மீண்டும் ஒரு பெருமூச்சு! சூழ்நிலைத் தெய்வத்தின் சூட்சமமான விஷயங்களை, வசந்தா எழுதிய புத்தகத்தி லிருந்துதான் நன்ருக தெரிந்து கொண்டேன். வாழட் டும் அவள்!

சூழ்நிலை என்பதை நெருப்புக்கு ஒப்பிட்டால், நீதி, நெறி, நியாயங்களை எல்லாம் பஞ்சுக்குத்தான் ஒப் பிடுவேன்.

அதுதான் சரி!

இப்போது......?

விசித்திரக் காட்சிகள் என் மனக் கண்முன் தோன்றின.

ஒரு வழக்கு மன்றம். நிரபராதி நிறுத்தப்படு கிருன். ஆனல்—தண்டிக்கப்படுகிருன்.

வழக்கு மன்றம் மறைந்தது. மேலே தீர்ப்பளித்த நீதிபதியைக் கொண்டே மற்ெருரு விசாரணை துவங்கு கிறது. இது நடைபெறும் இடமோ, ஒரு நல்ல கோவி லின் சன்னதி! இங்கே, ஒரு தீவிரமான குற்றவாளி நிறுத்தப்படுகிருன். ஆனல் இவன் மன்னிப்புடன் விடுதலை செய்யப்படுகிருன்.

இந்தக் காட்சியும் மறைந்தது.

ஆக, உலகிலே நல்லதும் தீயதும் சூழ்நிலை நாண யத்தின் இருபுறங்கள்தான் என்பதை எல்லாருக்கும் சொல்லிவைக்க முடியாவிட்டாலும், என் சிநேகிதிக

ளுக்காவது சொல்லி வைக்கவேண்டும் என்பது என் ஆசையாகிவிட்டது.

மறந்துவிடக்கூடாதே என்பதற்காக இந்தக் கருத்தை என் டைரியிலும் எழுதிக்கொண்டிருந்தேன்.

என் அமமா வந்தாள்.

"உடம்பு சரியில்லாதிருக்கும் போது, என்ன ஒரே படிப்பும், எழுத்தும்!"

"அம்மா! அதிருக்கட்டும். நான் நாளைமுதல் காலேஜ் போகமாட்டேன்."

"ஏன்?"

"வேண்டாம், எனக்கு."

"ஏன் மரகதம் அப்படி."

"அங்கே, மற்றவர்களுக்கு எப்படியோ, எனக்குப் பொருத்தமான சூழ்நிலை இல்லை!"

"அப்போ என்ன செய்யப் போகிறுய்?"

"கிராமத்துக்குப் போய், குடிசைத்தொழில் ஏதாவது கற்றுக்கொண்டு வந்து, ஆதரவற்றுத் திரியும் அனுதைப் பிள்ளைகளின் சூழ்நிலையை மாற்ற, ஒரு பள்ளிக்கூடம் துவக்கி நடத்தப்போகிறேன்."

"இதென்ன இப்படி திடீர்னு மாறிட்டே"

"இதுவும் சூழ்நிலைதான்!"

இதே நேரத்தில்......?

சொல்லி வைத்ததுபோல, எனது வசந்தாவும் அங்கு வந்துவிட்டாள்.

எழுந்தேன் !

எங்களது இதயங்களைப் போல, நாங்களும் ஒருவரை ஒருவர் நன்றாகத் தழுவிக்கொண்டோம் !

(முற்றிற்று)

UNIVERSITY LIB
3 1 MAY 195
MADRAS



UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957

வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!

எஸ். எஸ். வாஸன்
எழுதிய

# தம்பதிகள்
## சுகமாய் வாழ்வதெப்படி?

குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய கிளேஸ் பதிப்பு

விலை 3-12-0

ஒவ்வொரு ஆணும் பெண்ணும்
தெரிந்திருக்கவேண்டிய பல
அபூர்வ விஷயங்கள் அடங்கியது

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1